1555

[...குதி 18] ஐப்பசிமீ : : October, 1926 [பகுதி 10

விவேக போதினி

VIVEKA BODHINI

பொருளடக்கம்

		பக்கம்
முருகன் வழிபாடு	...	361
ஆரியர்	... ...	362
ஸரஸ்வதி பூஜை, நவராத்திரி, விஜயதசமி		365
கேசவ சந்திரசேனர்	... ...	370
விநோதத் துணுக்குகள்	... ...	374
ஸ்ரீராமாவதார மகிமை	... ...	375
இரஞ்சிதம்—(நாவல்)	... ...	377
சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்	...	393
வர்த்தமானக் குறிப்புகள்	... ...	400

சித்திரப் படங்கள்

ஸ்ரீராமன், லக்ஷ்மணன், ஸீதை, ஹனுமான்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 DEC 1926
MADRAS

Jm2ll, N08VB.
N26.18.10.
218383.

குறைக்கப்பட்ட சந்தா (தபால் செலவுடன்):—உள்நாடுகளுக்கு ரூ. 3-8-0 : : வெளிநாடுகளுக்கு ரூ. 4-8-0

என் கொழுப்புள்ள ஆகாரம்?

சரீரம் அல்லது மூளையினால் செய்யப்படும் ஒவ்வொரு காரியத்திலும் குறைகிற சக்தியை திரும்பவும் நாம் அடையவேண்டும். உடம்பில் நிரம்பவும் வியர்த்தால் வெளியில் போன ஜலத்திற்கு பதில் ஜலம் உள்ளே செலுத்தவேண்டும். அதுபோல நாம்புகளும் தசைகளும் தேய்ந்து போனால் அவைகளை சீர்படுத்த ஆகாரம் வேண்டும்.

உணவில் குணமேயன்றி அளவு முக்கியமல்ல

ஒரு கொதிப்பரை (பாய்லர் Boiler) தண்ணீர் காய்ச்ச உபயோகமற்ற கட்டைகளை ஏராளமாக எரித்தால் நெருப்பு திணியடைவதைத் தவிர, நீராவி நிரம்ப வருவது கிடையாது. அம்மாதிரி தான்.உடம்பும். நிரம்ப உணவு சாப்பிடுவதால் உபயோகமற்ற சாமான்களை வெளியே தள்ள உடம்புக்குக் கஷ்டமுண்டாகி அதனுடைய சக்தியைக் குறைக்கிறது. பலத்தைக் கொடுக்கும் உணவைக் கொஞ்சம் உட்கொண்டாலும் உடம்புக்கு சிரமத்தைக் கொடுக்காததோடு விருத்தி செய்கிறது.

அதனால்தான் நெஸ்லேஸ் பால் ஆகாரம் (Nestle's Milk Food) உண்மையான பால் கஞ்சியாய் உடம்பினாலும், மூளையினாலும் வேலை செய்கிறவர்களுக்கு உபயோகப்படுகிறது. அதில் ஒருமித்திருக்கும் ஸத்து அவ்வளவும் சரீரத்தில் பரவி மனதிற்கும் விருத்தியடைய வேண்டியதற்கு இன்றியமையாத உத்ஸாகத்தையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கிறது.

பெரிய டின் 1-க்கு விலை ரூபா 1-6-0 (தான்.)

வலதுபுறத்திலிருக்கும் மேல் விலாசத்திற்கு எந்த பாஷையில் எழுதி விசாரித்தாலும் பதில் அனுப்பப்படும்.



கீழ்க்கண்ட விலாசத்தைக் கிழித்து கவர் அல்லது கார்ட் மேல் ஒட்டி அனுப்பவும்.

NESTLÉ & ANGLO SWISS CONDENSED MILK CO.,
POST BOX NO. 396
CALCUTTA.

தமிழ் அபிமானிகளுக்கு

சென்ற 19-வருஷகாலமாக, தமிழ் அபிவிருத்தியின் பொருட்டு, விவேக போதினி, எவ்வித இடையூறுகளையும் பொருட்படுத்தாமல், எவ்வயதினர்க்கும் எக்காலத்துக்கும் உபயோகப்படக்கூடிய மிக்க அரிய விஷயங்களையே தாங்கி வெளிவந்துகொண் டிருப்பதை நேயர்கள் நன்கு அறிவர். இதன் உபயோகத்தை இன்னும் அதிகப்படுத்த விரும்பி, சந்தாவை 1927-ம்ளு ஜனவரி முதல குறைத்துவிட்டோம். நேயர்களின் பூரண ஆதரவை எதிர்பார்க்கிறோம். சந்தாதார்க்கு மாத்திரமே புத்தகங்கள் குறைந்த விலை.

குறைக்கப்பட்ட சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன்	ரூ.	3—8—0	தபால் செலவுடன்
பினங், சிங்கப்பூர், நேடால், மோரீசு தீவுகள்	,,	4-8—0	
தனி சஞ்சிகை	,,	0—5—0	

சந்தாவைக் குறைத்தபோதிலும், வழக்கம்போல் இருபாலார்க்கும் உபயோகமான அருமையான வியாசங்களே, உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அழகிய ஆப்டோன் படங்களுடன் வெளியிடப்படுகிறது.

குறிப்பு:— சந்தாதார்க்கு ரூ. 1-8-0 விலையுள்ள இனும் புத்தகங்கள் கொடுத்துவந்ததை நிறுத்தி விட்டோம். ஆனல் சந்தாதார்க்கு மாத்திரம் (சந்தாவை பாக்கியில் வைத்துக்கொண்டிராதவர்களுக்கு) எங்கள் காரியாலயத்திலுள்ள எவ்விதத் தமிழ்ப் புத்தகங்களும் மிகக் குறைந்த விலைக்கு அனுப்பப்படும்.

சந்தா நேயர்களுக்கு

சந்தாப்பணம், புத்தகங்களுக்கு ஆர்டர் இவைகளை அல்லயன்ஸ் கம்பெனி, "ஷண்முக விலாசம்" மயிலாப்பூர் என்ற விலாசத்துக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். சந்தாப் பணத்தை மணியார்டர் மூலம் அனுப்புவதே மிகவும் லாபகரமானது என்பதைச் சொல்லத் தேவையில்லை. சந்தாத் தொகை அனுப்பும்போதும், புத்தகங்களுக்கு ஆர்டர் செய்யும்போதும், சந்தா நேயர்கள் தங்கள் பதிவு இலக்கத்தைக் குறிப்பிடுதல் மிகவும் அவசியம்.

வருஷ சந்தாவை மிகக் குறைத்திருப்பதால் சந்தா நேயர்கள் தங்கள் சந்தாவை பாக்கியில் வைத்துக் கொள்ளாமல் உடனே அனுப்பி, புத்தகங்களையும் குறைந்த விலைக்குப்பெற விரும்புகிறோம். நேயர்களுக்கு சஞ்சிகைகள் ஏதேனும் கிடைக்காதிருந்தால் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விஷயதானம் செய்யும் நண்பர்கட்கு

விஷயதானம் செய்வோர் தங்கள் வியாசங்களை, ஒரே பக்கத்தில் மையில் எழுதியனுப்பவேண்டும். பூல்ஸ்காப் அளவுக்கு (Foolscap size) எந்த வியாசமும் எட்டு (8) பக்கங்களுக்குமேல் இருக்கப்படாது.

To Our Friends & Customers

With a view to place the Journal within the easy reach of all classes of people, we have with effect from January 1927 reduced the subscription rates as follows :—

	Post Free.
India, Burma, Ceylon	Rs. 3-8-0
Strait Settlements, South Africa	,, 4-8-0
Single Copy	,, 0-5-0

Annual Subscription

Note:—The Supply of Free Books for Re. 1-8-0 to subscribers will be discontinued from January 1927. Subscribers not in arrears will however have books at greatly reduced rates.

Contract Advertisement Rates

Rs.	150-0-0	per page	per annum.
,,	80-0-0	,, ½ page	,,
,,	45-0-0	,, ¼ ,,	,,

விளம்பர விகிதம்

முழுப்பக்கத்துக்கு ஒரு வருஷத்துக்கு ரூ.	150
அரைப்பக்கத்துக்கு ஒரு வருஷத்துக்கு ,,	80
கால் பக்கத்துக்கு ஒரு வருஷத்துக்கு	45

குறிப்பு :—அரை வருஷத்துக்கு ஷ விகிதத்தில் பாதி சார்ஜ் வாங்கப்படும். 6-மாதத்துக்கு குறைந்து விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

Address:— The Alliance Co., "Shanmuga Vilas" Mylapore.

A. (No. 963) **Aletris Cordial**

அல்லெட்ட்டரிஸ் கார்டியல்

ஸ்திரீகளின் பலஹீனத்தைத் தீர்க்கும் மருந்து

உலகெங்கும் வைத்தியர் யாவராலும் ஸ்திரீக ளின் சகலவிதமான நோய்களுக்கு உபயோகிக்கப் படுவது. ருது அடையாதிற்கும் சிறுமிகளுக்கும் இம்மருந்து மிகச் சிறந்தது.

அளவு:—தேயிலைக் கரண்டி மருந்தை, உண்ட பின்னும், நித்திரைக்குப் போவதற்கு முன்னும் உட்கொள்ளவேண்டும். உஷ்ணமான ஜலத்துடன் கலந்துகொண்டால் விசேஷ குணம் உண்டு.

Celerina

ஸிலரீனு

பலமற்றவர்க்குக் கைகண்ட மருந்து

உண்பதற்கும், உறங்குவதற்கும் ஒரு மணி முன்பு ஒரு தேயிலைக் கரண்டியளவு, நாளுக்கு மும்முறை சாப்பிட்டால், மனத்தளர்ச்சி, அலட் டல், புரட்டல், தூக்கமில்லாமை, மூர்ச்சை, மயக் கம், நரம்புக்கேடா லாகும் அஜீர்ணம், பல ஹீனம், குடிக்கேடால் விளையும் நோய்கள் இவை யாவும் ஒழிந்து உடம்பு புஷ்களமடையும். லாகிரி வஸ்துக்கள் கலவாது, மூளை வஸ்து விருத்தி யடைய, கவனத்துடன் செய்யப்பட்டது.

இப்பிரசித்திபெற்ற மருந்துபோல் போலியாக இருக்கும் மருந்துகளைப் பார்த்து ஏமாறாமல்

RIO CHEMICAL COMPANY, NEW YORK CITY, U. S. A.

என்ற லேபிலைப் பார்த்து வாங்கவும். இது மருந்துக்கடைகளில் எங்கும் கிடைக்கும்.

(A. No. 2278)

பாலாஜி அண்டு கம்பெனி, காசி.

புதிய சரக்குகள்! உடனே எழுதுங்கள்!! சகாய விலைகள்!!!

புதுமாதிரி பட்டுப் புடவைகள்

இந்தப் புடவைகள் மெல்லிய பட்டினுல் பளபளப்பாகவும் அழுத்தமாகவும் நெசவு செய்யப்பட் டுள்ளது. சிவப்பு, பச்சை, ரோஜா, பூநீலம் முதலிய கலர்களில் விழிம்பு முந்திகளும் அழகான ஜரிகை வேலையும் செய்யப்பட்டுள்ளது. 8 கஜம் 2½ முழம் அகலம், புடவை 1-க்கு விலை ரூ. 25, 30, 35-முதல் 45-வரை.

பட்டு ரவிக்கைகள்

உடல் சாதா விழிம்புக்கு அழகான ஜரிகைவேலை செய்யப்பட்டு பலவித புதுமாதிரி கலர்களில், ரவிக்கை 1-க்கு விலை ரூ. 3-முதல் ரூ. 5-வரை.

விளையாட்டுப் பாத்திரங்கள்

பித்தளை வெங்கலத்தால் செய்த 32-வித சாமான்கள் அடங்கியதும், குழந்தைகளுக்கு சந்- தோஷத்தை உண்டுபண்ணக் கூடியதுமானவை:

1 நெ. பெரிய செட் 1-க்கு	ரூ.	5 0 0
2 நெ. மத்திம செட் 1-க்கு	ரூ.	3 0 0
3 நெ. சிறிய செட் 1-க்கு	ரூ.	2 8 0

அன்னபூர்ணி அம்மன் ஸ்தோத்திரம் இனம்.

Balajee & Co., Silk Merchants,

Benares City.

விக்ரமசிங்கன் கோட்டை மர்மம்,

இப்புதிய நாவல் பெயர்பெற்ற துப்பனான ஷண்முக சுந்தரத்தின் துப்புத் திறத்தை நன்கு விளக்கிக் காட்டுகிறது. ஆரம்பத்தில் எவரும் பிரவேசிப்பதற் கரிதான கருங்கற்கோட்டையில் காவற்காரன் எஜமானியைக் கொன்றதாகத் தெரியவருகிறது. அச்சந்தர்ப்பத்தில் ஷண்முகசுந்தரம் அழைக்கப்பட்டு, அந்த அம்மாள் இறக்கவில்லையென்று அறிந்து அவளை உயிர்ப்பித்து, காவற்காரன் குற்றவாளியல்லவென நிரூபித்து, அப்பிராந்தத்தில் பேர்பெற்ற கொள்ளைக்காரனான சிங்கமாமுகனைத் தொடர்ந்து, அவன் தாசியை மயக்கி அவனதிருப்பிடத்தையறிந்து, சந்நியாசிவேடம் பூண்டு சிங்கமாமுகனுக்குச் சிகிச்சைசெய்யச் சென்று, அப்போது தன் மந்திர சக்தியால் தீரனான சிங்கமாமுகனையடக்கி வீழ்த்தி அவனைக் கொல்ல முயன்ற துருக்க சந்நியாசி யொருவனை தன்னுடைய நிகரற்ற மந்திர சக்தியால் அடக்கி, சிங்கமாமுகன்பூண்ட பலவேடங்களையும் துருக்கச் சந்நியாசியின் வேடத்தையும் எளிதில் ஊகித்து, அந்த அம்மாளது கணவனான துருக்கச் சந்நியாசியையும் சகோதரனான சிங்கமாமுகனையும் சிநேகப்படுத்தி, கற்பின் அவதாரமான அந்த அம்மாளது கற்பைச் சந்தேகித்து ஆராயாது செய்த செய்கைகளில் யாவருமுற்ற துயரத்தை எடுத்துக்காட்டுகிறான். மிகுவும் எளியநடையில் எழுதப்பட்டுளது. எடுத்தவர் படித்துமுடிக்காமல் கீழே வைக்கமுடியாது. நான்கு அழகிய சித்திரப்படங்கள் அடங்கியது. விலை ரூ. ஒன்றுதான். விவேக போதினி சந்தாதார்க்கு மாத்திரம், அணா 13.

சந்தாதார்க்கு மாத்திரம் மிகக் குறைந்த விலை

		ரூ.	அ
1.	இராமாயண வினாவிடை	1	8
2.	இராமாயண ஸாரம்	1	0
3.	ஸ்ரீமத் பாரத ஸாரம்	1	2
4.	ஸ்ரீமத் பாகவத ஸாரம்	1	0
5.	ஆரியமத உபாக்கியானம் I	0	8
6.	ஷை 2-ம் பாகம்	0	10
7.	ஸ்ரீமத் பாரத வினாவிடை II	1	4
8.	ஷை III	1	4
9.	ஜகஜ்ஜோதி	0	10
10.	புலவர் சரித்திரத் திரட்டு	0	8
11.	பீமலா அல்லது திவான் மகள்	0	8
12.	ஸ்திரீ ரத்னம்	1	4
13.	ஐரோப்பிய மஹா யுத்தம்	1	4
14.	வியாஸ விதானம்	0	12
15.	ருக்மிணி அல்லது பதி பக்தி	0	8
16.	ஸ்ரீ பால பாரதம்	0	8
17.	ஸ்ரீ பால ராமாயணம்	0	8
18.	நால்வர் சரித்திரம்	0	12
19.	பாண்டவ சரித்திரம்	2	4
20.	திருமூலர் திருமந்திரம்	2	4
21.	தஞ்சாவூர் ஜில்லா வரலாறு	0	8
22.	ஷண்முக விஜயம்	0	12
23.	பால ஷண்முக விஜயம்	0	8
24.	திருப்புகழ் பாராயணத் திருமுறை	1	0
25.	திருப்புகழ் இரத்தினமாலை	0	3
26.	திருஞான சம்பந்தர்	0	2½
27.	மாணிக்க வாசகர்	0	2
28.	சுந்தரர்	0	2
29.	மூர்த்திநாயனார் சரித்திரம்	0	3
30.	விசாரசன்மர்	0	3
31.	கந்தரலங்காரம், கந்தரனுபூதி	0	3
32.	பஞ்சரத்தினம்	0	12
33.	மரகதவல்லி	0	12
34.	கமலாகாந்தன்	0	2
35.	திருமயிலைச் சிறப்பு	0	2
36.	இயற்கை அற்புதங்கள்	0	10
37.	பூதத்வ போதினி	0	10
38.	ஹனுமப் பிரபாவம்	0	3
39.	தேடாத செல்வம்	0	3
40.	பிரபாவதி	0	3
41.	கிரிஸெல்டா	0	4
42.	பரதன் (நாடகம்)	0	12
43.	திருக்குறள் நீதிக்கதைகள்	0	10
44.	பாதாள வாசி	0	6
45.	தசகுமார சரித்திரம்	0	6
46.	கன்றும் கனியுதவும்	0	6
47.	தஞ்சைநாயகர் தாழ்வு	1	0
48.	விஜயபாஸ்கரன்	2	0
49.	ஷண்முகசுந்தரம்	2	0
50.	தனபாக்கியம்	2	0
51.	விக்ரமசிங்கன் கோட்டை மர்மம்	1	0
52.	மோகனாங்கி	1	4
53.	சிவகுமாரன்	1	0
54.	மைதிலி	0	12

குறிப்பு:—மேற்கண்ட புத்தகங்கள், சந்தாதார்களுக்கு மாத்திரம், "ரூபாய்க்கு 3 அணா வீதம்" கமிஷன் தள்ளி அனுப்பப்படும். ஒரு ரூபாய்க்குக் குறைந்த புத்தகங்கள் வி. பியில் அனுப்பப்படமாட்டா. புத்தக விலைக்கு தபால் தலைகள் அனுப்பினால் புத்தகங்கள் உடனே அனுப்பப்படும். சந்தாவை பாக்கியில் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு, புத்தகங்கள் குறைந்த விலைக்கு அகப்படாதென்பதைக் கவனிக்கவும்.

விலாசம்:— அல்லயன்ஸ் கம்பெனி, "ஷண்முக விலாஸம்" மயிலாப்பூர்.

மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்

திரு. வி. கலியாண சுந்திர முதலியார் எழுதியது.

[இரண்டாம் பதிப்பு]

மிகவிரிவாக எழுதப்பட்டது.

ருகஉ - 512 பக்கங்கொண்டது.

இந்நூல் காந்தியடிகள் வரலாற்றைக் கூறுவதன்று. இஃது அவர் வரலாற்றிலுள்ள நுட்பங்கள் மனித வாழ்க்கையோடியைந்து நிற்கும் முறையைக் குறிப்பது; அதாவது காந்தீயத்தை அறிவுறுத்துவது. இந்நூற்கண் விளங்கும் பொருள் மூன்று. (க) மனிதப் பிறவியின் விழுப்பமும் மனிதன் எவன் என்பதும் (உ) ஒருவன் மனிதனாக எத்தகை வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்பது (ங) மனித வாழ்க்கைக்கு இலக்கியர் மகாத்மாகாந்தி என்பது.

இந்நூற்கண் பெண்மக்கட்குரிய பொருள், ஆண்மக்கட்குரிய பொருள், இளைஞர்க்குரிய பொருள், அரசியலுக்குரிய பொருள், சத்தியாக்கிரகப் பொருள், சமயப்பொருள் முதலிய பல பொருள்கள் காணலாம். இல்லறம், தியாகம், அஹிம்சை, சுயராஜ்யம், சத்தியாக்கிரகம், சமய வாழ்வு முதலியன வாசிப்போர்க் கின்பூட்டுவன. சமய வாழ்வில் சமரச சன்மார்க்க நுட்பம் மிக விளக்கமாக ஓதப்பட்டிருக்கிறது.

அடிகள் அறவுரைகளைத் திரட்டி ஒவ்வொரு தலைப்பின் கீழும் அவைகளை முறைப்படுத்தியுள்ள ஒழுங்கும் பொருளும் வாசிப்போர்க்கு இன்பூட்டுவதோடு நேரியவாழ்வு நடாத்துமாறு அவரை அவைகள் தூண்டும். சன்மார்க்கத்துறைகள் பல இந்நூற்கண் காணலாம். விலை ரூபா **2**.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

பாதி விலை ! **ஒ ரு மா த ம் வ ரை** **பாதி விலை !!**



அசல் விலை ரூ. **14**.

பாதி விலை ரூ. 7.

22 காரட்ரோல்டு கோல்டு கைக் கெடியாரம் 5-வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயிருக்கும். இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பி வைக்கப் படும். பாதி விலை ரூ. 7.

ஒவ்வொரு கடியாரமும் ஒரு பட்டுப் பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

ஸ்வான் ஹவுஸ்,

தபால் பெட்டி 508,

பி. டி. மதராஸ்.

A. (No. 2700)

ஷண்முகம் மூக்குத்தூள்

70-வருஷ காலமாக குணத்தில் உயர்ந்ததாயும், மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயுமிருந்து, இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களில் ஏராளமாய் விற்பனையாய் வருகிறது.

4 பலம் **13** அண. **5** பலம் **15** அண.

ஆர். கே. பரிமள மூக்குத்தூள் **1**புட்டி அண **4.**

(போஸ்டேஜ் உள்பட)

மறந்துவிடுமுன் எழுதவும்

ஷண்முகம் ஸ்னப் கம்பெனி, லிமிடெட்.

தபாற்பெட்டி நெ. 140, சென்னை.

பெரிய கம்பெனி! பெரிய கம்பெனி!!

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி

நாணயமான சரக்குகள்.

சுத்தமான பட்டு! சகாய விலை!!

உயர்தரமான

பட்டு பீதாம்பர சேலைகள் ரவிக்கைகள்

துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், உருமால்கள் முதலிய எல்லாத் தினுசுகளும், சிவப்பு, ரோஸ், ஊதா, பச்சை, மஞ்சள், மேகவர்ணம், வெள்ளை, சிலேட் கலர், ஆரஞ்சு, கத்தரிப்பூக் கலர், கிரிம்ஸன் முதலிய எல்லா இங்கிலீஷ் கலர்களிலும் மிகவும் சரச விலைக்குக் கிடைக்கும்.

பட்டு பீதாம்பர கேட்லாக் இனம்.

உடனே எழுதுங்கள்.

Address.—Manager, (A. No. 2914)

Silk Pitamber Co., *Benares City.*

விலாஸம்:—மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி.

குணப்படுத்துவதற்கு மாத்திரமல்ல

(இன்னும்)

வியாதிகள் அணுகாவண்ணம் தடுப்பதற்கும்

எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

பேரும் புகழும் பெற்றிருக்கின்றன!

அஜீரணம், பலஹீனம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, மூளைக்கொதிப்பு இன்னும் இவைபோன்ற மற்ற வியாதிகளை குணப்படுத்தி அவைகளை அணுகாதபடி செய்யும்.

32-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூபாய் 1.

விவரம் வேண்டுவோர்

கீழ்க்கண்டவருக்கு எழுதவும்:—

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26-பிராட்வே, மதராஸ்.

இனாம்! இனாம்!! முற்றிலும் இனாம்!!!

'C' ரிஜிஸ்டர் டைம்பீஸ் இனாம்

'C' Regd. டைம்பீஸ் இனாம்

எங்களின் "தாராலீவர் 18 காரட்டு ரோல்டு கோல்டு, பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்ட பாக்கட் கடியாரம் வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக்கடியாரத்தில் உள்ள டயலின்பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது, முந்துங்கள்.

காப்டன் வாட்ச் கம்பெனி,

தபால் பெட்டி நெ. 265, மதராஸ்.

லோகோபகாரி

முப்பத்திரண்டு ஆண்டுகளாய் நிலவும்

வாரப் பத்திரிகை

பத்திராதிபர்:—பரலி - சு. நெல்லியப்ப பிள்ளை

தமிழர்கள் புத்துயிரும் புதுவாழ்வும் பெறுவதற்காகப் பாடுபட்டு வரும் வாரப் பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். சிறந்த பாடல்களும், சித்திரப் படங்களும் அவ்வப்போது வெளிவரும். பாரத தேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று, லோகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பதே லோகோபகாரியின் நோக்கம். உலகத்தில் அறநெறியும் அன்பு நெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங்காலமாக உழைத்து வருகிறது. இதனைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும்.

வருஷ சந்தா ரூபாய். 4—0—0 வெளி நாட்டுக்கு ரூபாய். 6—0—0.

மாதிரிப் பிரதி இனாம்.

லோகோபகாரி பத்திரிகாலயம்,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

உ. வேலுமயிலுந் துணை

ஷண்முக விஜயம்

திருப்புகழ் விருத்தியுரை

படங்களுடன்

விலை அணா 12

முதல் தொகுதி : : 6-படை வீடுகள்

டேமி அளவில், 64- பக்கங்கள்கொண்ட 12-சஞ்சிகைகளாக வெளிவருகிறது. கிளேஸ் காகிதத்தில் ஒரு பதிப்பும், பெதர்வெயிட் எனும் விலையுயர்ந்த காகிதத்தில் ஒரு பதிப்பும், ஆக இரண்டு பதிப்புகள் வெளிவருகின்றன.

வருஷ சந்தா (தபாற் செலவுடன்)

கிளேஸ் காகிதப் பதிப்பு	ரூ. 4	12	கிளேஸ் தனி சஞ்சிகை	அணா	8
பெதர்வெயிட் காகிதப்பதிப்பு	,, 6	0	பெதர் வெயிட் ஷை	,,	10

பத்திரிகை அபிப்பிராயங்கள்

சுதேசமித்திரன்:— * * நமக்குக் கிடைத்துள்ள விருத்தி உரை, முதனூலின் அழகிற் கியைந்ததா யிருக்கிறது. முருகன் அழகன், திருப்புகழ் அழகியது. இந்தப் புத்தகமும் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. * சில பாடல்களின் உரை, மிக்க விசேஷமானதென்று அறிவிக்கப்பட்டோம். ஆனல் ஒவ்வொரு பாட்டின் உரையும் அப்படியேதான் இருக்கிறது.

லோகோபகாரி:— * * இது கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் விளைக்கிறது. அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழின் பெருமையை நாம் சொல்லவல்லோ மல்லேம். அதனைத் தமிழ் மறை என்பார் அறிஞர். பண்டிதரும் பாமரரும் போற்றும் திருப்புகழுக்கு உரையில்லாத குறை நெடுநாளாக இருந்து வந்தது. அந்தக் குறை முருகன் அருளால் இப்பொழுது நீங்கிவிட்டது. * * இதனைப் படிப்போர் திருப்புகழின் உட்கருத்தைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம். * * முருகன் அடியார்களும் திருப்புகழ் விருப்புடையார்களுமான தமிழர்கள் இதனை ஆதரிக்கவேண்டு மென்பதை நாம் சொல்வது மிகையாம். * * இந்த நன்முயற்சியைத் தமிழர்கள் போற்றுவார்களாக.

ஸ்வராஜ்யா:— * * பெயர் மாத்திரையில் விருத்தியுரையாய் இராமல், உட்பொருளையும் பலரும் அறியக்கூறும் விருத்தியுரையாய் உளதென்பதைக் குறிப்பிடவேண்டும். பொருள் விளங்காது திருப்புகழைப் பாடவும் படிக்கவும் பேரவாக் கொண்டிருப்போர், இவ்விருத்தியுரை கண்டு இதயம் கனிவரெனக் கருதுகிறோம்.

குமரன்:— * * அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்போன்ற நூல்களுக்கு நல்ல பதிப்புகள் வெளியிடப் பெறுவதும் ஓர் ஆனந்தமே யாகும். இத்தகைய ஆவல் அல்லயன்ஸ் கம்பெனியாருக்கு ஏற்பட்டதைப்பற்றி நாம் மகிழ் வெய்துகிறோம். * * தமிழைப் புதிதாகக் கற்கும் மாணவருக்கும் திருப்புகழ் படிப்பதில் துணை செய்வதாகும். பொதுவாகத் தமிழ் மக்களும், சிறப்பாக முருகக் கடவுளது அடியார்களும் திருப்புகழுக்கு விருத்தியுரை காணும் நன்முயற்சியினை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

இந்து சாதனம்.—* * உரை மிக நுட்பமாகவும் விரிவாகவும் பல தக்க பிரமாண சகிதமாகவும் இனிது எழுதப்பட்டுள்ளது. பிரதி, கண்டோர் கண்கவரும் வனப்பினதாய் அழகுற அச்சிடப்பட்டிருக்கின்றது. சிவபெருமானுக்குக் குமாரக் கடவுள் பிரணவப் பொருளை ஓதிச் சிவகுருமூர்த்தமான திருவுருவப் படம் திருவருள் விலாஸத்தோடு கூடியதாய் எவ்வகைக் கன்னெஞ்சினரையும் கண்ட மாத்திரத்தே உருகச் செய்யும் பான்மையனவாய் அமைக்கப்பட்டுள்ளது.

ஸமரஸ போதினி.—* * * திருப்புகழுக்கு இதுவரை, நமக்குத் தெரிந்தமட்டில், இத்தகை உரை இலது. இவ்வுரை மிகவும் அழகிய நடையில், பொருள் நுட்பங்களை மழுப்பிவிடாது நன்கு விளக்கி எழுதப்பட்டிருக்கின்றது. பொதுவாகவே இஃது புலவர் விருந்தாகத் தக்கதே என நாம்கூறுவோம்.

விலாஸம் :— அல்லயன்ஸ் கம்பெனி, "ஷண்முக விலாசம்" மயிலாப்பூர்.

(A. No 1819)

THE MOST CHARMING PERFUME

OTTO DILBAHAR (Registered.)

எல்லோருடைய மனதையும் அதியுற்சாகப்படுத்தும் சுகந்தம்

ஆடோ தில்பஹார் (ரேஜிஸ்டர்ட்.)

நீடித்திருக்கக் கூடியதும், நிகரில்லாத உன்னத வாசனையுடையதும், மனதிற்கு சந்தோஷ முண்டாக்கக் கூடியது. ஆல்கஹால், சாராயம் முதலிய சம்பந்தமில்லாத பொறுக்கான சில சுகந்த புஷ்பங்களிலிருந்து இறக்கிய சத்தினால் சேர்க்கப்பட்டது. உம்முடைய கைகுட்டையில் சில துளிகள்விட, புஷ்பத்தோட்டத்தின் மத்தியிலிருந்து அனுபவிக்கக்கூடும் வாசனையை தரக்கூடியது. விவாக காலங்களிலும், பூஜாகாலங்களிலும், இன்னும் மற்ற செண்டுகள் அத்தர்களைவிட இந்த ஆடோ டில்பஹார் அதிக இன்பத்தைக் கொடுக்கும்.

அடியில் வருமாறு அளவு புட்டிகளில் நிறப்பி விற்கப்படுகிறது.

பெரிய புட்டி 1-க்கு	(4-டிராம் அல்லது ½-அவுன்ஸ்)	விலை ரூ.	2—0—0
வேறு ,,	(2-டிராம்)	,,	1—4—0
நடுத்தரம் ,,	(1-டிராம்)	,,	0—12—0
சிறிய புட்டி ,,	(½-டிராம்)	,,	0—8—0
மாதிரி ,,		,,	0—2—0
வாசனைக் கார்ட் 1-க்கு		,,	0—1—0

பிரசித்தமான எல்லா வியாபாரிகளாலும் விற்கப்படுகிறது. இதே மாதிரி அநேக பெயர்கள் மார்க்கட்டில் இருப்பதால், வாங்கும்போது புட்டிகள் பேரில் ஆடோ டில்பஹார் என்னும் பெயர் இருக்கிறதா என்று கவனித்துப் பார்த்து ஜாக்கிரதையுடன் வாங்கிக்கொள்ளவும்.

சோல் ஏஜண்டுகள்:—

ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,

155, ஜும்மா மஸித், மார்க்கட், பம்பாய்.

விவேகபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 18 } அக்ஷயஹு ஐப்பசிமீ :: 1926-ஹு அக்டோபர்மீ } பகுதி 10

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

தந்தன தந்தன தந்தன தந்தன
தந்தன—தந்ததான.

சங்கைதா னென்றுதா னின்றியே நெஞ்சிலே
சஞ்சலா ரம்பமாயன்
சந்தொடே குங்குமா லங்க்ருதா டம்பரா
சம்ப்ரமா நந்தமாயன்
மங்கைமார் கொங்கைசே ரங்கமோ கங்களால்
வம்பிலே துன்புறுமே
வண்குகா நின்சொரூ பம்ப்ரகா சங்கொடே
வந்துநீ யன்பிலாள்வாய் !
கங்கைசூ டும்பிரான் மைந்தனே அந்தனே
கந்தனே விஞ்சையூரா !
கம்பியா திந்த்ரலோ கங்கள்கா வென்றவா
கண்டலே சன்சொல்வீரா
செங்கைவேல் வென்றிவேல் கொண்டுசூர் பொன்
றவே; சென்றுமோ தும்பரதாபா !
செங்கண்மால் பங்கஜா னன்தொழா னந்தவேள்
செந்தில்வாழ் தம்பிரானே!

(ப-ரை.) கங்கை சூடும் பிரான் மைந்தனே-கங்கா நதியைச் சடாமுடியில் அணிந்துள்ள நாயகராகிய சிவபெருமானுடைய புதல்வனே! அந்தனே - அழகனே! கந்தனே - (அன்பாது) பகைவர்களை அழிப்பவனே! விஞ்சை ஊரா - கல்வியையே இருப்பிடமாகக் கொண்டவனே! கம்பியாது இந்த்ர லோகங்கள் கா என்று அ ஆகண்டலேசன் சொல்வீரா - இந்திரலோகம் பயந்து நடுங்காவண்ணம் அதைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்லி (அந்த உலகத்துக்கு இறைவனான) இந்திரனால் பிரார்த்திக்கப் பெற்ற வீரனே! செம் கை வேல் - நினது அழகிய கையில் பொருந்திய வேலாயுதத்தை, வென்றிவேல்-வெற்றியைத்தரும் வேலாயுதத்தை, கொண்டு சென்று - எடுத்துக்கொண்டு போய், சூர்போன்ற (எ-அசை) - சூரன் அழியும்வண்ணம், மோதும் ப்ரதாபா - எதிர்த்துத் தாக்கிக் கீர்த்தி பெற்றவனே! செம் கண் மால்- (தாமரை மலரை யொத்த) சிவந்த கண்களையுடைய திருமாலும், பங்கஜா(ஸ)னன் - தாமரையில் வீற்றிருக்கும் பிரமதேவரும், தொழு - வணங்கும், ஆனந்த வேள் - சச்சிதானந்த சொரூபியான முருகனே! செந்தில் வாழ் தம்பிரானே - திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் நாயகனே!, சங்கை தான் ஒன்று தான் இன்றியே - அளவு என்பதேயில்லாமல், நெஞ்சிலே - மனத்திலே, சஞ்சல ஆரம்ப மாயன்- சஞ்சலத்தை யுண்டுபண்ணும் மாயை நிரம்பப் பெற்றவன், சந்தொடு (எ - அசை) குங்கும அலங்க்ருத - சந்தனத்துடன் குங்குமத்தைக் கலந்த கலவைச் சாந்தை அணிந்து அலங்கரித்துக்கொண்ட, ஆடம்பர சம்ப்ரம ஆநந்தமாயன் - அலங்காரத் தோற்றத்துடன் இடம்பமாக நடந்து கொள்வதிலேயே ஆநந்தமடையச் செய்யும் மாயை நிரம்பப்பெற்றவன், மங்கைமார் கொங்கை சேர - பெண்களுடைய தனபாரங்களின் மீது பொருந்த (வேண்டுமென்று), அங்க மோகங்களால் - (தேகத்திற் பொருந்தியுள்ள) இந்திரியங்கள் மயங்கி விரும்புவதினால், வம்பில் (எ - அசை) - நிலையில்லாத வாழ்க்கையில் உழன்று, துன்பு உறுமே - வருந்தாமல், வண் குகா - வள்ளலான குகனே! நீ நின் ப்ரகாசம் சொரூபம் கொடு (எ - அசை) - நீ நினது ஜோதிமயமான சொரூபத்துடன் (சுயஞ்ஜோதி உருவத்துடன்) வந்து - அடியேனிடம் வந்து அன்பில் ஆள்வாய் - அன்பினால் அடியேனை அடிமையாக்கிக் கொள்ளவேண்டும்!

—திருப்புகழ் விருத்தியுரை 354 - 355-ம் பக்கங்கள்

தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த துண்ணலி னூங்கினிய தில்.

விவேக போதினி

தொ. 18] அக்ஷயஹூ ஐப்பசிமீ [ப. 10

ஆரியர்

THE ARYANS

ஆரியர் என்னும் பதத்துக்கு மேலோர் என்றர்த்தம். இப்பெயர் இவ்வர்க்கத்தினருக்கு ஒருவாறு பொருந்திய தென்னலாம். (ஐரோப்பிய வித்துவான்கள் கணக்கின்படி) சென்ற 4,000, 5,000 வருஷங்களாக உலகில் பெருமையும் அதிகாரமும் படைத்துத் தமது தைரியத்தாலும் சாமர்த்தியத்தாலும் தாம் சென்றவிடங்களில் எங்கும் கீர்த்திக்கொடி நாட்டியவர்கள் இவ்வர்க்கத்தினரே. பலமும் சௌர்யமும் மாத்திரம் அவர்கள் குணமெனச் சொல்லுவது அவர்களது மேன்மையை முழுவதும் எடுத்துக் காட்டப்போதாது. புத்திகூர்மையும் புதிதாக விஷயங்களை அறிந்து கொள்ளவேண்டு மென்னும் ஆசையும் மிகுதியாக வுடையவர்கள் இவ்வாரியர். தமது சாதுர்யத்தால் நவநவமாகத் தேசங்களைக் கண்டுபிடிப்பதிலும், அவற்றில் குடியேறி அங்குள்ளவர்களைத் தமது நாகரிகத்தில் ஈடுபடும்படி செய்வதிலும் சாமர்த்திய முடையவர்கள். தற்போது சரித்திர ஆராய்ச்சி எட்டியவரையில் புருஷசிரேஷ்டரெனப்படுவோர் அநேகமாக ஆரிய வர்க்கத்தினரே. சாஸ்திர ஆராய்ச்சி செய்து பிரகிருதி தத்துவங்களை யறிந்து அவற்றைத் தமக்குப் பயன்படுமாறு செய்து கொண்டிருப்பவரும் இவ்வாரியர்தாம்.

ஆயினும் இவர்கள் யார் ; எங்கிருந்து வந்தவர்கள் ; தற்காலத்தில் இப்பூவுலகிலுள்ள ஜனங்களில் இவ்வர்க்கத்தைச் சேர்ந்தோர் யார்; என்னும் கேள்விகளுக்குப் பதில் கிடைப்பது வெகு அரிது. ஒருதேசத்திலாவது அத்தேசத்திலுள்ள ஜனங்கள் கலப்பில்லாத ஒரே வர்க்கத்தினரென்று சொல்லுதல் இயலாது. பல வர்க்கத்தாரின் ரத்தக்கலப்பு எங்கும் விசேஷமாய் ஏற்பட்டு 'எனது ரத்தக்குழாயில் ஓடும்உதிரம் நீலத்திலும் நீலம்' என்று சொல்லும் ஆங்கில வாக்கியத்தைப் போல் அதிக ஏற்றத்தைக் கொண்டாடுபவர்கள் கூடக் கலப்பு வர்க்கத்தினராவர் என்னும் அபிப்பிராயம் பலகலை உணர்ந்தோருக்குள் ஏற்பட்டு வருகிறது. என்றாலும் ஐரோப்பாவின் பெரும் பாகத்திலும், தென் ஆசியாவின் பாகங்களிலும் வெகுநாளாக விருந்து, சென்ற நானூறு வருஷங்களாய்ப் புதிய வுலகங்க ளெல்லாவற்றிலும் பரவியிருக்கும் ஐரோப்பியரும், பாரசீகத்தாரும் இந்தியாவில் உயர்ந்த ஜாதியினரும் ஆரியரெனச் சொல்லப்படுகின்றனர்.

இவ்வர்க்கத்தாரின் பழைய இருப்பிடம் ஏதெனச் சொல்லுவதும் கடினமாகவே இருக்கிறது. இருபது வருஷங்களுக்குமுன் நமக்குள் வழங்கிய புஸ்தகங்களில் இவர்கள் மத்திய ஆசியாவில் இருந்தவரென்றும் அங்கிருந்து சில இனத்தினர் மேற்கு முகமாக ஐரோப்பாவுக்குச் செல்ல, வேறினத்தினர் தெற்கு முகமாய்ப் பாரசீகத்திலும் தென்கிழக்கு முகமாய் இந்தியாவிலும்வந்து குடியேறின ரெனச் சொல்லி யிருந்தது. அது மாக்ஸ் முல்லர் முதலோரது அபிப்பிராயமாம். அவர்களுக்குப் பின் இவ்விஷயத்தை ஆராய்ச்சிசெய்த பெரியோரில் சிலர், அவர்கள் ஐரோப்பிய ரஷ்யாவின் தென் பாகமாகிய புல்தரை பிரதேசத்திலிருந்து வந்தவர்க ளென்றும் மற்றும் சிலர் வட ஆப்பிரிக்காவிலிருந்து வந்தவர்களென்றும், இன்னும் ஒருவர் ஹங்கரி சார்ந்த பூமியிலும் அதைச் சுற்றியுமுள்ள பிரதேசத்திலும்இவ்வாரியரின்முன்னோர்கள்இருந்திருக்க வேண்டுமெனவும் அபிப்பிராயப்படுகின்றனர். இன்னும் வேறுஅபிப்ராயங்களும் உண்டு.

இவ்வர்க்கத்தாரின் பழைய தேசம் தெரியாமலிருக்கும் பொழுது எதைக் கொண்டு முன் சொல்லப்பட்ட பிரதேசங்கள் அதுவாக யிருக்கலாமென ஊகிக்கப்பட்டிருக்கின்றன வெனக் கவனிக்குங்கால் அம்மாதிரி பரவிய கெல்டியர் டியூடானியர் லாடினர், ஸ்லாவியர், பாரசீகர் இந்தியர் முதலியோரது பாஷைகளில் பல வார்த்தைகள் பொதுப்பட வந்திருக்கின்றன வெனத் தெரிகிறது. உதாரணமாக வேதபாஷை

யில் இருக்கும் தியாயுஷ்பித: என்னும் வார்த்தை கிரேக்க பாஷையில் ஸீயூஸ்பேதர் (Zeus Pater) எனவும், லாடினில் ஜுபிதர் (Jupiter), எனவும் ஆங்கில ஸாக்ஸனில் தியூவ் (Tiw) எனவும் மாறி வந்திருக்கிறது.

அம்மாதிரி இப்பலவினத்தாரின் பாஷைகளில் பொதுவாயிருக்கும் வார்த்தைகளைப் பார்த்துக் கவனிக்கும்பொழுது இவர்கள் இருந்த இடம் பல தானியம் விளையக்கூடியதாய், கன்றுகாலிகளுக்கும், குதிரைகளுக்கும் மேய வேண்டுமளவு புல் தரைகளுடையதாய், பன்றி முதலியவைகள் வளரப் போதுமான ஆகார முடையதாய், குளிர் விசேஷமாக வாய்ந்த இடங்களில்வளரும் பீச் (Beech) முதலிய மரங்களுடையதாயுள்ள பிரதேசமாக விருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. அது ஹங்கரித் தாழ்நிலமென்று சொல்லும் கனவான், குளிர்ப்பிரதேச மரங்கள் முளையாதவிட மாதலால் அது வட ஆப்பிரிக்காவாக இருக்கமுடியாதென்றும் வேறு காரணங்களைக் கொண்டு அது தென் ரஷ்யாவாகவாவது மத்திய ஆசியாவாகவாவது இருக்க முடியாதென்றும் தீர்மானத்துக்கு வருவதுடன், மேலே சொல்லிய பல குணங்களும் பொருந்தியவிடம் அத்தாழ்நிலமும் அதைச் சுற்றியுள்ள மலைப்பிரதேசமும் தான் என நிச்சயத்துக்கு வருகின்றனர்.

அங்கிருந்து இவ்வர்க்கத்தார் ஐரோப்பாவில் பரவிய சரித்திரம் இங்கு எழுதப்பட வேண்டியதில்லை. தெற்கிலும் கிழக்கிலும் வந்தவர்கள் ஹங்கரியிலிருந்து வலேக்கியா தாழ்நிலத்துக்கு டான்யூப் நதிவழியாய் வந்திருக்கலாம். அங்கிருந்து ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் நடுவிலுள்ள ஹெலெஸ்பான்ட் கான்ஸ்டான்டிநோபில் ஆகிற மிகக் குறுகிய ஜலசந்திகளைத் தாண்டி நமது கண்டத்தில் வந்து சேரலாம். இங்கு காப்போடோஸியா (Cappodocia) என்னும் மாகாணத்தில் ப்டேரியா (Pteria) என்கிற பழைய பட்டணம் இருந்த இடத்தை மண்ணைத் தோண்டிப் பார்க்குங்கால் இந்திய ஆரியர் வழிபட்டு வந்ததாக ரிக்வேதத்திலிருந்து தெரிகின்ற இந்திரன் வருணன் முதலிய தேவதைகள் இங்கும் கடவுளாகக் கருதபட்டனரெனத் தெரிகிறது. அப்படியே டைக்ரிஸ் (Tigris) யூப்ரடீஸ் (Euphrates) நதிகளுக்கு நடுவிலுள்ள சிறந்த வண்டல் நிலத்தின் வடபாகத்தில் முற்காலத்தில் வாழ்ந்துவந்த மி (ட்) டா (ன்) னியர் (Mittanni) என்னும் ஜாதியாரின் அரசர் சிலர் தஷ்ரதர் அர்த்ததமர் என்னும் பெயர்களை யுடையவர்களாய் இருந்திருக்கின்றனர். தஷ்ரதர் என்பது தசரதர் என்னும் பெயரின் மரூஉ என்று தெரிகிறது. ஆனால் இம்மிடானியர் ஆரியர் அல்லவென்றும், ஆரிய நாகரீகத்தை மேற்கொண்ட அநாரியவர்க்கத்தினர் என்றும் வேறு ஆதாரங்களைக்கொண்டும் நிச்சயித்திருக்கின்றனர்.

இது நிற்க; பாரசீகத்தில் பழைய காலத்தில் பேசின பாஷையும், அனுஷ்டித்த மதமும் ஆரிய சம்பந்தம் உடையவை. அங்குள்ளார் ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள 'ஸ' வுக்குப் பதிலாக 'ஹ' உபயோகப்படுத்துவது வழக்கம். அம்மாதிரியே அப்பாஷையில் வேறு சில மாறுதல்களும் ஏற்பட்டிருக்கவேண்டும். நமது தேசத்திலேயே ஸம்ஸ்க்ருதத்தைப் பேசுங்கால் நம்பூதிரிமார் 'த்' க்கு 'ல்' உபயோகப் படுத்துகிறார்கள். ('ப்ரசோதயாத்' என்பதை அவர்கள் 'ப்ரசோதயால்' எனச் சொல்வார்.) பாரசிக ஆரியரோ தகரவொற்றுக்கு றகரவொற்றை உபயோகப் படுத்துவார்கள். இம்மாதிரி இன்னும் பல வேற்றுமைப் பாடுகளை இவ்விரு பாஷைகளையும் ஆராய்ச்சி செய்தவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஸிந்துஸ்தானத்தை ஹிந்துஸ்தானமெனவும் 'அஸுர' என்னும் வார்த்தையை 'அஹுர' எனவும் அவர்கள் உபயோகிக்கின்றனர். இம்மாதிரியே 'ஹிம' என்னும் ஸம்ஸ்க்ருத வார்த்தையை அவர்கள் ஸி (Z) யம என்று சொல்லுகிறார்கள். பழைய பாரசீக மதத்துக்கும் ஆரிய மதத்துக்கும் அநேக விஷயங்களில் பொருத்தம் இருந்திருக்கின்றது.

பழைய இந்திய ஆரியர்களிடமிருந்து நமக்குக் கிடைத்திருக்கும் சிரேஷ்டமான நூல் ரிக்வேதமே. இது நம்மில் ஹிந்துக்களால் முதல்நூல் எனக் கருதப்படும் நான்கு வேதங்களில் முதலாவதாம். வேதத்தையும் அதன் பலசாகைகளையும் பற்றிப்பின்னர்விவரமாகக் கூறுவோம். ஆயினும் நாம் இங்கு கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. ரிக்வேத காலத்திய ஆரியர் இருந்துவந்த நாடு தற்காலத்தில் பஞ்சாப் எனப் பெயர்பெற்ற ஸிந்து நதியும் அதன் உபநதிகளும் பாயும் நன்னாடாகும். இங்கு அவர்கள் ஏற்கெனவே குடியேறி இருந்தவர்களை மடக்கி அடித்து அவ்

இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற் கரப்பா ரிரவன்மி னென்று.

விடத்தைத் தங்கள் சொந்த நாடாக்கிக் கொண் டனரென்பது ரிக்வேதத்திலிருந்து தெளிவாய் ஏற்படுகிறது. அவர்கள் பல பிரிவை உடைய வர்களாய் இங்கு வந்து சிறிது காலம் சென்ற பிறகு ஒருவரோடொருவர் சண்டையிட்டன ரென்றும் ஏற்படும். இவ்வேத பாஷை பின்னர் ஸம்ஸ்க்ருதம் எனப் பெயருடன் தன்னிலிருந்து மருவி வந்த பிற்கால பாஷையிலிருந்து சிறிது மாறுதலுடையது.

ஆகவே ஆரியருடைய பழைய இருப்பிடம் இன்னதென்று நிச்சயமாய்ச் சொல்ல முடிய வில்லை இவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்த வித்துவான்கள் அவர்கள் மத்திய ஆசியாவிலோ தெற்கு ரஷ்யாவிலோ, ஹங்கரியிலோ, வட ஆப் பிரிக்காவிலோ இருக்க வேண்டுமென நினைக்கி ருர்கள். பால கங்காதர திலகர் இவர்கள் வட சமுத்திரத் தருகில் இருந்திருக்க வேண்டுமெனவும், வேறு சிலர் இவர்கள் கிழக்கு ஹிமாசலத்தின் அருகில் இருந்திருக்கலா மென வும், மற்றும் சிலர் பூதலத்தின் கூரையெனப் பெயர்பெற்ற பாமிர் மேட்டு நிலமே அவர்கள் பழைய நாடு எனவும் சொல்வதுண்டு. எல்லோ ரும் உத்தேசமாக இவ்விஷயத்தை நிர்த்தாரணம் செய்கிறபடியால், அவற்றுள் சரி எது என நாம் சொல்வதற்கு இயலவில்லை. எங்கிருந்து வந்த போதிலும் இந்த ஜனங்கள் அதிக சாமர்த்திய முடையவர்களாய் எந்நாட்டிலும் பழைய ஜனங் களைத் துரத்தி அடித்தோ அல்லது தமக்குள் அடக்கியோ, தமது ஆதிக்கியம் ஏற்படுமாறு செய்துகொண்டனர். அவர்கள் போய்க் குடியே றினவிடமெல்லாம் பேசும் பாஷைகள் ஆரிய பாஷைகளே. அவர்கள் மதத்தையே அங்கெல் லாம் உள்ளோர்கள் வெகுகாலம் வரையில் அனு சரித்து வந்தனர். ஜயிக்கப்பட்ட நாடுகளில் உள்ள பழைய ஜனங்களுடன் இவர்கள் கலந்து கொள்வதில்லை. அவர்களைத் தனி ஜாதியாகப் பிரித்தனர். உதாரணமாக; இந்தியாவில் அவர்கள் வருமுன் இருந்த கரிய நிறமுடைய ஜனங்களு டன் அவர்கள் கலவாது தம்மிலிருந்து பிரித்து அவர்களைத் தாழ்ந்த ஜாதியார் எனச் செய்து வைத்த ஏற்பாடு இன்றும் நடந்து வருகிறது. ஜாதிக்கு வருணம் என்பது அந்தக் காலந் தொட்டு வழங்கிவரும் வார்த்தையாகும்.

பிற்காலத்தில் இவ்வாரியரில் குளிர்ந்த பிர தேசங்களாகிய ஐரோப்பிய நாடுகளில் இருப் பவர் தமது சாமர்த்தியத்தால் புது தேசங்களைக் கண்டுபிடித்து கலா ஞானத்தையும் சாஸ்திர அபிவிருத்தியையும் செய்து நாகரிகத்தை இதற்குமுன் உலகோர் கண்டிராவண்ணம் பர வச்செய்திருக்க, நம் இந்திய ஆரியர் வேறொரு வழியில் தமது உயர்வை ஸ்தாபித்திருக்கின் றனர். ஆரியரது பழைய மதங்களும் ஆசாரங் களும் இந்தியாவிலேயே இப்பொழுதும் நிலைத்து நிற்கின்றன. மற்றெங்கும் அவை ஒழிந்து விட்டன. அம்மதத்தைப் பலவழிகளில் உயர்த்தி வேறு தத்துவத்தை அறிந்து மனிதன் இவ்வுல கத்தில் நடந்துகொள்ள வேண்டிய வழிகளைக் கண்டு அனுசரித்து ஏற்படுத்திய விதம் இன் னும் ஆரிய பூமிகளில் நம் நாடு ஒன்றில்தான் இருந்துவருகிறது. ஏனைய ஆரியர் மதம் மாறி, ஆசாரங்களும் மாறிப் புதுக்கொள்கைகளைப்பின் பற்றி பழையவர்க்க வாசனை சிறிது மில்லாதவர் களாக ஆகிவிட்டனர். இதனாலல்லவா ஆரிய பாஷைகளெனப் பெயர்பெற்றவை யெல்லாம் ஒரே தாய்ப்பாஷையிலிருந்து வந்தன வெனவும் அவற்றுள் வேத பாஷையே அதற்கு நெருங்கிய சம்பந்தமுடையதெனவும் வேறு பாஷைகள் அத்தாயினின்றும் மருவி அதிக மாறுதல்களை யடைந்து விட்டன வெனவும் முதலில் கல்கத் தாவில் பெரிய நீதிபதி ஸ்தானம் வகித்த ஸர் வில்லியம் ஜோன்ஸ்என்பவர் 1786-ம்வூத்தில் செய்த பிரசங்கத்திலிருந்து ஏற்பட்டது. அவர் ஸம்ஸ்க்ருதம் கற்கத் தொடங்கி அதற்கும் ஐரோப்பிய பாஷைகளுக்கும் உள்ள நெருங்கிய பொருத்தத்தை உணர்ந்து அதை ஆராய்ச்சி செய்ய 'ராயல் ஆசிய சங்கம்' என்பதைக் கல் கத்தாவில் ஏற்படுத்தினர். அவ்வாராய்ச்சியின் பலனாக பாஷா சாஸ்திரம் (Philology) ஏற் பட்டு மனுஷ்ய வர்க்கங்களுக்குள் உள்ள சம்பந் தத்தை அறிய ஒரு பெரிய சாதனமாக ஏற்பட் டிருக்கிறது.

திருப்புகழ் விருத்தியுரை

முதல் தொகுதி : : 6-படைவீடுகள்

450-பாட்டுக்கள்—12-சஞ்சிகைகளாக வெளிவரு கிறது. வருஷசந்தா (தபாற் செலவுடன்.)

கிளேஸ் பதிப்புக்கு	ரூ	4	12	0
பெதர்வெயிட் பதிப்புக்கு	ரூ	6	0	0
தனிசஞ்சிகை கிளேஸ்	அ	0	8	0
,, பெதர்வெயிட்	அ	0	10	0

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

ஸரஸ்வதி பூஜை, நவராத்திரி, விஜயதசமி

THE SIGNIFICANCE OF NAVARATHRI FESTIVAL

நமது பரதநாட்டில் ஸேது முதல் ஹிமாசலம் வரையில் எல்லா இடங்களிலும் ஏக காலத்தில் கொண்டாடப்பட்டு வரும் பண்டிகைகள், புண்ணிய தினங்கள் இவற்றுள் நவராத்திரியும், விஜயதசமியும் முக்கியமானவை என்று சொல்லலாம். புரட்டாசிமீ அமாவாசைக்குப் பின்னர், பிரதமை முதல் நவமிவரையிலுள்ள ஒன்பது நாட்களும் நவராத்திரி என்றும், பத்தாவது தினமாகிய தசமி, விஜயதசமி என்றும் விவரிக்கப்பட்டு வருகின்றன. மைசூர் ஸமஸ்தானம் முதலிய சில இடங்களில் இக்காலமானது தசரா (பத்து ராத்திரி) என்று பொதுப் பெயருடன் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்விசேஷ கால சம்பந்தமான பூஜைகளும், கொலுவைத்தல் முதலிய கொண்டாட்டங்களும் பெரும்பான்மையும் இராக்காலங்களில் நடைபெறுவதால், இதற்கு நவராத்திரி, தசரா என்கிற விவகாரம் ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தத் தினங்களின் பகற்காலம் புண்ணிய காலமில்லையென்று நினைத்தல்கூடாது.

இந்த நவராத்திரியின் மகிமையானது தேவி பாகவதம், மார்க்கண்டேயம் முதலிய புராணங்கள், காமிகம் முதலிய சிவாகமங்கள் தேவியாமளம் முதலான சக்தி தந்திரங்கள் இவை போன்ற கிரந்தங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. இக்காலம் எவ்வாறு புண்ணியமானதென்றும், எந்தெந்த தேவதையை எவ்வெவ்விதமாய்ப் பூஜிக்கவேண்டும் என்பதும், இதிலடங்கிய தத்வார்த்தங்களும் மேற்கூறிய கிரந்தங்களில் பலவிதமாய்க் கூறப்பட்டுள்ளன. இந்நூல்களில் கண்டுள்ள விதிகளை முற்றிலும் அனுசரித்தே இப்போது நவராத்திரி சம்பந்தமான பூஜைகளோ, மற்றைய உற்சவங்களோ நடந்து வருகின்றன என்று நாம் சொல்வதற்கில்லை. காலபேதத்தாலும், தேசபேதத்தாலும் பல மாறுதல்கள் உண்டாகி, இப்புண்ணிய காலமானது இந்தியாவின் பல பாகங்களில் பலவாறாக அவரவர்கள் சக்திக்கும், மனப்பாங்குக்கும் ஏற்றவாறு கொண்டாடப்பட்டு வருகிறது இதன் தத்வார்த்தத்தை எல்லோரும் அறிந்திலார் எனினும், இது இம்மையில் ஐசுவர்யாதி சுகங்களையளித்து, மறுமையில் நற்கதிக்கு உதவக்கூடிய காலம் எனவே அனைவரும் நம்பி, இதைக்கொண்டாடி வருகிறார்கள் என்பதற்கு ஐயமில்லை.

இது தென்னிந்தியாவைவிட வடதேசங்களில் வெகு விமர்சையாய்த் திருவிழாவாக வழங்கப்பட்டு வருகிறது. தென்னிந்தியாவில் விஷ்ணு சிவாலயங்களிலும், மடங்களிலும் அம்மனுக்கு விசேஷ பூஜைசெய்து, கொலுமண்டபம் ஏற்படுத்தி, அம்மனை அங்கு எழுந்தருளப் பண்ணி, எல்லோரும் கண்ணுறக்கண்டு களிக்குமாறு விசேஷ உத்ஸவம் கொண்டாடுகிறார்கள். தனிகர்கள் கிருகத்தில் விசேஷ ஜபம், வேத பாராயணம், ஸ்ரீராமாயணம் முதலிய கிரந்த பாராயணம், பிராமண போஜனம் முதலியன நடைபெறுகின்றன. தனவான்கள் வீட்டிலும், எளியோர் வீட்டிலும் அவரவர் அந்தஸ்துக்கும், சக்திக்கும் தக்கவாறு கொலுமண்டபம் சிங்காரித்து, அதில் பலவித பொம்மைகள், படங்கள் வைத்து, ஒவ்வொருநாள்சாயங்காலத்திலும் பழம், சர்க்கரை, பணியாரம் முதலியவற்றை நிவேதனம் செய்கிறார்கள். ஆங்காங்குள்ள சுமங்கலிகள் தங்களுள் ஒவ்வொருவர் வீட்டுக்குச் சென்று, புண்ணிய கீதம் பாடி, புஷ்பம், தாம்பூலம், பழம் இவைபெற்றுக்கொண்டு போவார்கள். தனமதம் பாராட்டாது பெரிய மனுஷிய வீட்டு ஸ்திரீகளும் ஏழை வீடுகளுக்குச் சென்று, அங்குள்ளோருடன் ஸகோதரி பாவம் பாராட்டி, கூடிக் கலந்து, எல்லோருக்கும் பொதுவான இந்தப் புண்ணிய காலத்தைக் கொண்டாடுவது மிகவும் களிக்கத்தக்கதே. மற்றைய சமயங்களில் செல்வத்தால் உண்டாகக்கூடிய தாரதம்மியத்தால் நமது ஸ்திரீ ஜனங்கள் ஒன்றுகூடி கலக்காமலிருக்கக் காரணம் ஏற்படினும், அகமின்மை, சகோதரி பாவம், ஐகமத்யம் முதலிய நற்குணங்கள் இந்த நவராத்திரி காலத்தில் ஒருவருக்கொருவருள்ள போக்குவரத்தால் உண்டாகின்றன என்பதே இக்காலத்தின் விசேஷ மகிமையைக் காட்டக்கூடியதாயிருக்கிறது. வீடுகளில் இவ்வாறு 'பொம்மைக் கொலு' வைத்துக் கொண்டாடுவது சாஸ்திரங்களில் கூறப்படாவிடினும், காலக்கிரமேண இவ்வழக்கம் ஏற்பட்டு, அநேக நூற்றுக்கணக்கான வருஷகாலமாய் அனுஷ்டானத்தில் இருந்துவந்திருக்கிறது.

முற்கூறிய சக்தி தந்திரங்களிலும், ஆகமாதி

இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள வுள்ளதூஉ மின்றிக் கெடும்.

களிலும் விதித்கப்பட்டபடி, பராசக்தி, துர்க்கை, லக்ஷ்மீ, ஸரஸ்வதீ முதலான தேவதைகளை ஆராதிக்கத்தக்க அதிகாரிகளும், இவர்களின் பூஜை ஸம்பந்தமான முறைகளும் வெகு நிர்ப் பந்தமானவை. இத்தேவதைகளைத் தக்க மந்திர ங்களால் ஆவாஹனம் செய்து, சாஸ்திரோக்த விதிப் பிரகாரம்ஆராதிப்பது வெகு சிரமஸாத்திய மானதே. இதைச் சிலர்தான் செய்யக்கூடும். ஆனால் இத்தேவதைகளைப் பூஜிப்பதால் அடை யக்கூடிய ஐகிக, ஆமுஷ்மிக பலனைப் பலரும் கருதக்கூடும். முறைப்படிக்கான பூஜை செய்ய அதிகாரமில்லாத ஸ்திரீகளும் ஏதோ மூடபக்தி யால் இவர்களை ஆராதிக்க விரும்பி, லக்ஷ்மி, ஸரஸ்வதி, கௌரி, ராமன், கிருஷ்ணன், சங்க ரன், ஷண்முகன் முதலானோரின் உருவங்களைப் பொம்மை ரூபங்களாக அமைத்து, அவற்றைக் கொலுவில் வைத்து கீதம்பாடி, பழம் முதலிய தின்பண்டங்கள் நிவேதனம் செய்து, இதர ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் விநியோகம் செய்து உத்ஸவம் கொண்டாடத் தலைப்பட் டிருக்கவேண்டும். முதலில், தத்தம் மதாசாரத் துக்குரிய தெய்வங்களின் பிம்பங்கள் மாத்திரம் வைக்கப்பட்டு, இப்போது தற்கால நாகரிகத்தை அனுஸரித்து, வெள்ளைக்காரப் பொம்மைகளும், பூனை, நாய், நரிகளின் பிம்பங்களும் அக்கொலு வில் அமர்த்தப்பட்டுள்ளன. விந்தை என்னே! ஒரு கொலுவில் எவ்வளவுக்கெவ்வளவு மேற் கூறிய மேனாட்டுப் பொம்மைகளும், நவீன நாக ரிக அடையாளங்களும் ஜாஸ்தியாகக் காணப்படு கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு அதை ஒரு விசேஷக் கொலுவாகக் கூறி கௌரவம் பாராட்டி வருகிறார்கள். இது விஷயத்தில் ஒருவரை யொருவர் மிஞ்சி விளங்கவேண்டு மென்கிற அவாவானது விருத்தியடைந்து வரு கிறது. 'போன வருஷம் அடுத்தவீட்டில் வெள் ளைக்கார பொம்மைகளும், மற்றைய பீங்கான் பிரதிமைகளும் மிகுந்திருந்தன. இவ்வருஷம், எவ்வளவு சிரமப்பட்டாவது, அவ்விதப் பொம் மைகள் அநேகம் வாங்கி, அந்தக்கொலுவைவிட நம் வீட்டிலுள்ளது சிறந்தது எனப்பெயர்வாங்க வேண்டும்' என்னும் இவ்வித மனப்பாங்கானது எளிய ஸ்திரீகளிடமும் ஸகஜமா யிருப்பதைக் காணலாம். கொலுவின் தத்வார்த்தமறியாது, மத சம்பந்தமற்ற வெளியாடம்பரங்கள் விசேஷமாய் நடைபெற்று வருகின்றன என்பது விசனிக்கத் தக்கதாயினும், நமது நாட்டிற் கேற்பட்டுள்ள காலகதியால், உபாகர்மம் போன்ற மற்றைய மத ஸம்பந்தமான விஷயங்களிலும் இத்தகைய தசை காணப்படுகிறபடியால், இதுபற்றித் துக் கிப்பதிற் பயனில்லை. ஸ்வதேச பக்தியும், ஸ்வ ஆசார அபிமானமும் மிகுந்தால், அர்த்தமில்லா ஆடம்பரங்களும் குறைந்துவிடும். இக்கொலு ஏற்பட்டதற்கு இன்னொரு ஊகமும் உண்டு. நவராத்திரி முடிவுக்கு மறுதினமாகிய விஜய தசமி தினத்தில், பூர்வத்தில் நமது பரத தேச மன்னர்கள் திக்கு விஜயம் செய்யப் புறப்பட வேண்டும் என்பதும், அந்தத் தினத்தில் புறப்ப டுவது ஜயாவஹம் என்பதும் ஐதிஹ்யம். இவ் வாறு திக்கு யாத்திரைக்கு வேண்டிய சைந்நி யங்கள் முதலான முஸ்தீப்புகளைத் தயாரித்து, நவராத்திரி காலத்தில் அரசன் கொலு மண்ட பத்தில் மந்திரி முதலானோருடன் ஆடம்பரத்து டன் அமர்ந்து, அரசாங்க வைபவங்களை நேரில் நோக்கி, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது வழக்கம். இந்த நவராத்திரி காலத்தில் தக்க அதிகாரிகளைக்கொண்டு, மேற்கூறிய இஷ்ட தேவதைகளை ஆராதிக்கச் செய்துவந்தனர். இவ் வித பூஜையுடன்கூட, மேற்கூறியவாறு, 'அரச னது கொலுவும்' விசேஷமாய்க் கொண்டாடப் பட்டு வந்துளது. ராஜ்ய க்ஷேமத்தைக் கருதி ஆலயங்களிலும், அரண்மனைகளிலும் அனுஷ்டிக் கப்படும் 'கொலு' வழக்கத்தை ஒவ்வொரு வீட் டிலும் அவரவர் தத்தம் குடும்பச் சிரேயஸைக் கருதி அனுஷ்டித்து வந்திருக்கிறார்கள். சாதா ரணமான ஸ்திரீகளுக்கு, சாஸ்திரோக்தமான பூஜையில் அதிகாரமில்லாததால், இவர்கள் மந்திரமில்லாத கொலு ரூபமாய் இஷ்டதேவதை களைப் பஜித்து,இவ்வுலக ஐசுவரியத்தை விருத்தி செய்துகொள்ளக் கருதுவது ஒரு இயல்பான ப்ரவிருத்தியெனவே கூறவேண்டும்.

இந்த நவராத்திரியில், சாலிவாஹனன் என்பவன் பொம்மை ரூபங்களான சைநியங் களை ஏற்படுத்தி, யதோக்த தேவி பூஜை செய்த தாகவும், பராசக்தியின் அருளால் இப்பிரதிமை கள் உயிர்பெற்று, இச்சைன்னிய சகாயத்தால் சாலிவாஹனன் சத்துருக்களைத் தாக்கி ஜயித்து, பிரசித்திபெற்ற சக்கரவர்த்தியாக விளங்கினதா கவும் ஓர் ஐதிஹ்யம் உலாவிவருகிறது.

இந்த நவராத்திரி புண்ணியகாலத்தில், பொது வாய் எல்லாத் தேவதைகளும் பூஜிக்கப்பட்ட

போதிலும், தேவி ஆலயங்களுக்கும், தேவி உபாஸ கர்களுக்கும் இது மிகவும் முக்கியமானது. சக்தி பூஜை விசேஷமாய் நடந்தேறி வரும் வட இந்தியாவில், 'துர்க்கா பூஜை' என்னும் பெயருடன் நவராத்திரி வெகு கோலாகல மாய்க் கொண்டாடப்பட்டு வருகிறது. துர்க்கா பூஜை என்பது ஸாத்விகம், தாமஸம் என இருவகையானது. ஸாத்விகமாவது சாஸ்திர ரோக்தமான விதிகளால், சாதாரண அன்னாதிக ளைக் கொண்டு காளியைப் பூஜித்தல். மிருகங்க ளைப் பலிகொடுப்பதும், இறைச்சி, மதுவர்க்கம் முதலியவற்றை நிவேதனம் பண்ணித் தானும் புஜித்துக் களிப்பதும் தாமஸம் என்றும், இது அதர்மமான தென்றும் சாஸ்திரங்களில் கூறப் பட்டுள்ளது. வட தேசங்களில் சிலர் இதையும் அனுஷ்டிப்பதாகத் தெரியவருகிறது. வடக்கில் துர்க்கா பூஜை காலத்தில், கோவில்களிலுள்ள தேவி பிம்பங்களை அலங்கரித்து, ஊர் வலம் செய்து விசேஷ உற்சவம் கொண்டாடுகிறார்கள்.

நவராத்திரியானது சாரதா, அம்பிகை முத லான பெயர்களால் விவகரிக்கப்படும் தேவியின் அவதார விருத்தாந்தத்தையும், பலவித கல்ப பேதங்களுள் ஒரு கற்பத்தின் சிருஷ்டி விவ ரத்தையும் குறிப்பிடும்புண்ணியகாலமென மார்க் கண்டேய புராணாதிகளில் சொல்லப்படுகிறது.

தேவியின் அவதார ரகஸ்யம்.—எல்லா ஜகத்து க்குக்காரணமா யுள்ளவள் பராசக்தி ஒருவளே. அவளுக்கு மகா லக்ஷ்மி என்று பெயர். அவளுக்கு ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற மூன்று குணங்க ளுண்டு. அவள் உலகங்களைச் சிருஷ்டிக்க விரும்பி, முதலில் தானே மூன்றுமூர்த்திகளாகப் பிரிந்தாள். இம் மூர்த்திகளில் தமோ குணத் தைப் பிரதானமாக உடைய மூர்த்திக்கு மகா காளி என்று பெயர். ஸத்வ குணப் பிரதான மூர்த்திக்கு மஹா ஸரஸ்வதீ எனப் பெயர். முற்கூறிய மகா லக்ஷ்மி த்ரிகுணப் பிரதானை. இம் மூவரும் சிருஷ்டிக்கத் தொடங்கினார்கள். மகா லக்ஷ்மி யானவள் பிரும்மா, லக்ஷ்மி என் னும் ஆணையும் பெண்ணையும் சிருஷ்டித்தாள். மகா காளி ருத்திரர், சரஸ்வதி என்னும் மிது னத்தையும், மகா ஸரஸ்வதி விஷ்ணு, கௌரி என்னும் இரட்டையையும் உண்டாக்கினார்கள். பிறகு மஹாலக்ஷ்மி, பிரும்மாவுக்கு ஸரஸ் வதியையும், விஷ்ணுவுக்கு லக்ஷ்மியையும், ருத்தி ரருக்குக் கௌரியையும் விவாகம் செய்வித்து, அந்தப் பிரும்ம, விஷ்ணு ருத்திரர்களைக் கொண்டு ஜகத்தின் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹா ரங்களை நடத்தச் செய்தாள். இவ்விதம் பரா சக்தி ஸ்ருஷ்டிக்கத் தொடங்கிய காலமாகிய நவ ராத்திரியின் கடைசி தினமாகிய நவமிக்கு மகா நவமி என்று பெயர். மேற்கூறிய மஹாகாளி, மஹா லக்ஷ்மி, மஹா ஸரஸ்வதி என்னும் காரண பராசக்திகளுக்கு, துர்க்கா, லக்ஷ்மி, ஸரஸ்வதி என்று முறையே மூன்று அவதார மூர்த்திகளுண்டு. இவற்றுள் துர்க்கா என்னும் முதல் அவதாரமானது சிருஷ்டியின் ஆரம்பத் தில், மதுகைடபர்கள் என்னும் அஸுரர்களைச் சம்ஹரிப்பதற்காக ஏற்பட்டது; இரண்டாவது, மஹிஷாஸுரனை வதிப்பதற்காக அவதரித்த மஹிஷாஸுரமர்த்தினி; மூன்றாவது, சும்பன், நிசும்பன் என்னும் அஸுர சக்கரவர்த்திகளைக் கொல்வதற்குண்டாய அவதாரம். இந்த அவ தாரங்களும், அஸுர வதங்களும் நடந்த கால மும் நவராத்ரமேயாகும்.

துர்க்கா, லக்ஷ்மி, ஸரஸ்வதிகளுக்குச் சண்டி கா என்பது பொதுப்பெயர். ஆதலால், நவராத் திரிக்குச் சண்டிகா நவராத்திரி என்னும் பெய ரும் விளங்கி வருகிறது. இந்த நவராத்திரி ஒன்பது தினங்களுள், முதல் மூன்று தினங்க ளில் மகா காளியையும், அவளது அவதார மூர்த்தியாகிய துர்க்கா தேவியையும், இரண்டா வது மூன்று தினங்களில், மஹா லக்ஷ்மியையும் அவளது அவதார மூர்த்தியாகிய மஹிஷா ஸுரமர்த்தினியாகிய லக்ஷ்மியையும், கடைசி மூன்று நாளில், மஹா ஸரஸ்வதியையும் அவ ளது அவதார மூர்த்தியாகிய ஸரஸ்வதி தேவி யையும் பூஜிக்கவேண்டுமென்று புராணங்களும் ஆகமங்களும் கூறுகின்றன.

இது தவிர, ஒரு காலத்தில் பண்டாஸுரன் என்பவன் மூன்று உலகங்களையும் ஆக்கிரமித் துக் கொண்டபொழுது, தேவேந்திரன் பராசக் தியைக் குறித்துத் தவஞ் செய்ததாயும், அப் போது அவனது ஹோமகுண்டமாகிய சிதக்னி குண்டத்திலிருந்து லலிதாதேவி ஆவிர்ப்பவித்து, பண்டாஸுரனை வதம் செய்து, தேவர்களை அனுக்கிரகித்ததாயும் பிரமாண்ட புராணாதிகளில் கூறப்பட்டுளது. இந்த லலிதாதேவியின் ஆவிர்ப் பவ காலமும் நவராத்திரியின் கடைசிதினமாகிய மகா நவமியே என்று சொல்லப்படுகிறது. ஆகையால் பல சாஸ்திரப் பிரமாணங்களால்,

மக்களே போல்வர் கயவ ரவரன்ன வொப்பா ரியாங்கண்ட தில்.

தேவீ பூஜகர்களுக்கும், தேவி ஆலயங்களுக்கும் இது முக்கியமானது என்று ஏற்படுகிறது.

(2) மேற்கூறிய மஹா நவமியானது ஸ்ருஷ்டியின் ஆதிகாலமென்பதை நமது பஞ்சாங்கங்களில், அந்தத் தினத்தில் 'ஸ்வாயம்புவ மன்வாதி' என்று குறிப்பிட்டு வருகிறார்கள். ஸ்வாயம்புவ மன்வந்தரம் என்பது ஒவ்வொரு பிரம்ம கல்பத்திலும் முதலில் வரும் மன்வந்தரம். ஆதலால், இந்த நவமி, கல்பத்தின்முதல் ஸ்ருஷ்டிகாலம் ஆரம்பம் என்பது பொருள். இதுகாரணங்களால் நவராத்திரிகாலமும், மகா நவமியும் புண்ணியகாலங்கள் என்று தொன்று தொட்டுக் கொண்டாடப்பட்டு வருகின்றன. தேவர்களும், விசுவாமித்திர, வஸிஷ்டர், காசியபர் முதலான முனிவர்களும் இந்த நவராத்திரி விருதத்தை அனுஷ்டித்து, தத்தம் விருப்பங்களைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் புராணாதிகள் கூறுகின்றன.

ஸ்ரீராமசந்திரனும், ஸீதாதேவியை விட்டுப் பிரிந்து கிஷ்கிந்தையில் துக்கத்தால் வருந்தி வருகையில், இவ்விரதத்தை அனுஷ்டித்ததாயும், இதற்கு மறுதினமாகிய விஜயதசமி தினத்தில் வானரரது சைன்னியங்களுடன்புறப்பட்டுச் சென்று, ஸேது பந்தம் செய்து, லங்கைகையை யடைந்து ராவணாதிகளை வதித்து, ஸீதையை மீண்டு மடைந்து களிப்புற்றதாயும் சொல்லப்படுகின்றது. இங்ஙனமே, கோஸல தேசத்தில் ஸுசீலன் என்னும் வைசியன் வெகு குடும்பியாய் வறுமையால் மிக்க வருந்தித் தவித்ததாயும், பின்னர் இவன் நவராத்திரி விரதத்தை மிகச் சிரத்தையுடன் அனுஷ்டித்ததால், பெரும் செல்வமடைந்து சுகங்களனுபவித்ததாயும் கதை கூறுகிறது.

ஸரஸ்வதிபூஜை:—மேற்கூறியவாறு நவராத்திரியின் கடைசி மூன்றுநாள் ஸரஸ்வதி தேவியின் பூஜைக்காக ஏற்பட்ட தினங்கள். இந்தத் தேவியை மூலம் எனும் நக்ஷத்திரத்தில் ஆவாஹனம் செய்து, மூன்று நாள் சாஸ்திரோக்தமான பூஜை செய்து, பத்தாவது நாளில் சிரவண நக்ஷத்திரத்தில் விஸர்ஜனம் செய்ய வேண்டுமென்று விதியுளது. இவ்வாறு அனுஷ்டிப்பவர் சிலரே. பெரும்பான்மையோர் மஹாநவமி தினத்தில்தான் ஆவாஹனம் செய்து, மறுநாள் விஸர்ஜனம் செய்கின்றனர். சாதாரணமாய் 'ஸரஸ்வதிபூஜை' தினமென்று வழங்கிவரும் மஹாநவமிதினத்தில், 'புஸ்தகபூஜை' செய்யப்பட்டுவருகிறது. கல்விக்கு அறிகுறியான ஸ்தூலவடிவம் புஸ்தகங்கள். புஸ்தகங்களையும், ஏட்டுச் சுவடிகளையும், அவற்றின்மீது படிந்திருக்கும் தூசி நீங்கும்படித் தட்டித்துடைத்து, பலகையில் அடுக்காய் வைத்து, புஷ்பம், சந்தனம், மஞ்சள், அக்ஷதை இவற்றைக்கொண்டு அர்ச்சித்து, பழம்,, பணியாரம் முதலியன நிவேதனம் செய்கிறார்கள். அதன்பிறகு அன்றையதினம் ஒன்றும் படிக்காமல், மறுதினமாகிய விஜயதசமியில் அப்புஸ்தகங்களுக்குப் பூஜைசெய்து அவற்றில் சிலபாகங்களைப் படிக்கிறார்கள். இவ்வாறு செய்வதால் அறிஞருக்கும் வித்தியாபிவிருத்தி ஏற்படுவதுடன், நமது சிறுவர்க்கு ஐந்தாம் பிராயத்தில் செய்யப்படும் அக்ஷராப்பியாஸம் என்று சொல்லப் பட்டுவரும் கல்வியின் முதன்முதலான ஆரம்பத்துக்கு இந்த விஜயதசமி தினமே மிகச் சிறந்ததென்று நம்பி, இது எந்நாளில் வந்தாலும் நாழி, நக்ஷத்திரம் முதலிய சுபமுகூர்த்த லக்ஷணங்கள் இருக்கின்றனவா என்று கூட கவனிக்காமல், வித்தியாரம்பத்தை அநேகமாய் இந்தத் தினத்திலேயே ஆஸ்திக ஹிந்துக்கள் செய்து வருகின்றனர் 'அறிவே சக்தி', 'ஞானமே பலம்' என்ற கருத்தைக்கொண்டு, கலைகளுக்கு அதிஷ்டான தேவதையாகிய ஸரஸ்வதியைப் பராசக்தியின் வல்லமைகளின் ஒரு ஸ்வரூபம் என நினைத்து, மேற்கூறியவாறு புஸ்தகங்கள் மூலமாய் அத்தேவியைப் பஜிக்கிறார்கள் என்பது பொருள் கொள்ளவேண்டும்.

சக்தி தேவியின் வல்லமையை இன்னொருவிதமாகவும் தொழுவதுண்டு. வீரத்தன்மை, தைரியம், பராக்கிரமம் முதலியவற்றிற்குத் துர்க்கை அதிஷ்டான தேவதை . ஆயுதங்களும், கைத்தொழில், விவசாயம் முதலான வற்றிற்குரிய கருவிகளும் மேற்கூறிய குணங்களுக்கு அறிகுறியான ஸ்தூல வடிவங்கள் எனச் சொல்லலாம். சரீரபலத்திற்கும், போர்வீரத்திற்கும் உருவமாக ஏற்பட்டுள்ளவும், துர்க்கை, பத்ரகாளி, சண்டிகை, மாதவி, சாரதை, அம்பிகை, ஈசானி, விஜயை என்று பல நாமங்களால் குறிக்கப்பட்டுள்ளவுமான சக்திதேவியை, அவளது ஸ்தூல லக்ஷணமான ஆயுதங்கள் மூலமாய்ப் பூஜிப்பது வழக்கமா யிருந்துவருகிறது. பலவிதத் தொழிலாளிகள் தத்தம் ஆயுதங்களைச் சுத்திசெய்து, மஹா நவமியிலோ, மறு தினத்திலோ மிகச் சிரத்

தையுடன் அவற்றைப் பூஜையில்வைத்து, தேவித்தியானம் செய்து, தொழிலபிவிர்த்தி யாக வேண்டுமென்று பிரார்த்திக்கின்றனர். அதன் பிறகு அன்றையதினம் யாதொரு தொழிலும் செய்யார். பலவிடங்களில் இந்த ஆயுதபூஜை உத்ஸவமானது வெகு விசேஷமாய்க் கொண்டா டப்பட்டு வருகிறது.

விஜயதசமி:— நவராத்திரிக்கடுத்த தசமிக்கு விஜயதசமி எனப் பெயர். அந்தத் தினத்தில் சூரியன் அஸ்தமிக்கும் தருணத்தில், ஆகாயத் தில் நக்ஷத்திரங்கள் கொஞ்சம் பிரகாசிக்கும் சமயத்தில், சந்தியாகாலம் சென்றதும் நேரிடும் வேளைக்கு 'விஜயம்' என்று பெயர். இந்தக் காலமானது ஜனங்களுக்குச் சகல விதமான அபீஷ்டங்களையும் கொடுக்கக்கூடியது. இச்சம யத்தில், எவரெவர் தமக்கு ஜயத்தைக் கருதுகி றார்களோ அவர்கள் தமது இருப்பிடத்தை விட் டுக் கொஞ்சதூரம் வடக்கு நோக்கி யாத்திரை செய்யவேண்டும். சிரவணங் கூடிய இத்தினத் தில்தான் அரசர்கள் திக்கு விஜயத்திற்கான பிரயாணத்தைத் தொடங்குவது வழக்கம் என முன்னமே கூறப்பட்டது. விஜயதசமியில் நாள் நக்ஷத்திரம் நோக்காது, நமது சிறுவர்களைப் படிக்கவைக்கும் (வித்தியாரம்பம் செய்யும்) வழக்கமும் இக்கருத்தை உணர்த்துகிறது. இந் தத் தினத்தில் எல்லாக் கோயில்களிலும் பாரி வேட்டை என்னும் ஓர் உத்ஸவம் நிகழ்த்துகி றார்கள். அரசர்களுக்குரிய மரியாதைகளையும், விபவங்களையும் கோயில்களிலுள்ள அர்ச்சாரூபி யான பகவானிடத்தில் காட்டி அவரைப்பூஜிக்க வேண்டுமென்று ஆகமங்களில் கூறப்பட்டுள் ளது. வேந்தர்கள் திக்குவிஜயம் செய்யப் புறப் படுவதுபோல் பகவானும் குதிரை வாஹனத் தின்மீது ஏறி, பாரிவேட்டை என்னும் உத்ஸ வம் கண்டருளி, அவரைக் கண்ணாரக்கண்டு ஸேவிக்கும் பக்தகோடிகளைப் பாவனமாக்குகி றார் என்பது கருத்து. அச்சமயம் பகவான் வன் னிமரத்தில் அம்புபோட்டு அதை எரித்துத் தள் ளுகிறார் என்கிற ஐதிஹ்யமும் பாவனை செய்து காட்டப்படுகிறது. இப்பாரிவேட்டை உற்சவத் திற்கு உட்கருத்தும் உளது என்று சொல்லப்ப டுகிறது. வன்னிமரத்தைக் கடைந்தால் அதில் சீக் கிரம் நெருப்புண்டாகும் இந்த மரத்தில் அம்பு பாய்ச்சினால், அக்கினி உண்டாகி, அத்தீயால் அது எளிதில் எரிந்து போகக்கூடும். நெருப்படங்கிய வன்னிமரத்தை ஆத்மாவோடுகூடிய தேகமாகவும், பகவானைச் சத்ருருவாகவும், அம்பை ஞானமாக வும், வேட்டையில் அம்பு விடுவதை ஞானோபதேச மாகவும், மரம் எரிந்து விழுவதைக் கர்மசம்பந்த மான பந்தங்களை ஞானத்தழலால் சுட்டு வெண் ணீராக்குவதாகவும் கொள்ளலாம்.

முற்கூறியவற்றைச் சுருக்கிக் கூறில், நவராத் திரி காலம் மிகப்புண்ணியமானது. சைவ, வைஷ் ணவ, மதத்தவர்கள் என்ற திரிமதஸ்தர்க ளும் பூஜை முதலியவற்றால் இதைக் கொண் டாட வேண்டுவதற்கான புராண கதைகளோ, ஐதிஹ்யங்களோ அவரவர்களது ஆகமாதிக் கிரந் தங்களில் உள. ஆனால் இக்காலத்தை ஒரு சரி யான விரதமாக அனுஷ்டிப்பதற்கு, உபவாஸம் முதலிய கடுமையான நியமங்களும் நிர்ப்பந்தங்க ளும் உண்டு; மகாஜன சமூகத்துள் சிலர்தான் சாஸ்திரோக்த பூஜை செய்யத் தக்க யோக்கி யதை யுள்ளவ ராவர். இது ஆலயங்களிலும், சக்தி பூஜை உபாஸகர்களும் முக்கியமாய்ச் செய் யத்தக்கது. ஆனால், ஐசுவரியாதி சுகங்களை யளிக்கத்தக்க இச்சுபமான நவராத்திரி காலத் தைப் பொது ஜனங்கள் எல்லோரும் ஸ்தூலமா யாவது அவரவர்கள் சக்திக் கியன்றவாறு கொண்டாடி வருகிறார்கள். கொலு வைத்தல், வேத பாராயணம், ஸ்ரீராமாயணம், பாகவதம் முதலிய கிரந்தங்களைப் படித்தல், பிராமண சந் தர்ப்பணை செய்வித்தல், ஆலயங்களிலும், வீடுகளி லும் ஸஹஸ்ர நாமாதி அர்ச்சனை செய்தல் முதலி யன நவராத்திரி கொண்டாட்டத்தின் பலவிதப் பிராகாரங்களாகும். இதனால் ஐசுவரிய விருத் தியும், துக்க நாசமும் உண்டாகுமென நம்பப் பட்டு வருகிறது. இக் கொண்டாட்டமானது நமது பரத நாடெங்கும், ஹிந்துக்களுள் நாம் ஒரே மதஸ்தர்கள் என்ற ஐக்கிய புத்தி ஏற்ப டக் காரணமாயுளது. நமது மதத்திலுள்ள கதை களின் ஸாராம்சத்தை நாம் மறவாது ஞாபகத்தில் வைத்துக்கொள்ள உதவுகிறது. இதுபோல் மற் றெவ்விதப் பண்டிகையும் ஒரேகாலத்தில் இந்தி யாவின் எல்லாப் பாகங்களிலும் ஹிந்துக்களின் எப்பிரிவினர்களாலும் பொதுவாய்க் கொண் டாடப்படுவதில்லை.

நால்வர் சரித்திரம்.—திருஞான சம்பந்தர், சுந்த ரர், மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர் இவர்களின் சரித்திரம், மிக்க அழகாய் எழுதப்பட்டது. சீர்திருத் திய 2-ம் பதிப்பு, அட்டைபைண்ட், விலை அணா 12.

கேசவ சந்திரசேனர்

KESUB CHANDRA SEN

(339-ம் பக்கத் தொடர்ச்சி.)

மதப்பிரசாரம் செய்வதற்கென்று அவர் கல்கத்தாவைவிட்டு அயலிடங்களுக்குச் சென்றார். அப்படி அவர் முதலில் சென்றவிடம் கிருஷ்ணகர் என்னும் பட்டணம். இங்கு கிறிஸ்தவப் பாதிரிமார் வந்து இருந்துகொண்டு மனம்போனபடியெல்லாம் ஹிந்து மதத்தைப்பற்றிச் சொல்லிக்கொண்டும் ஏமாந்தவர்களைத் தம் மதத்தில் சேர்த்துக்கொண்டுமிருந்தனர். 1860-ம் வருஷத்தில் கேசவ சந்திரர் அங்கு போய் அவர்கள் கொள்கைகளை மறுத்துப் பிரசங்கம் செய்தனர். அங்குள்ள பாதிரிமார் பதில் பிரசங்கம் செய்து பார்த்தனர். ஆயினும் கேசவர் பேசிய வார்த்தைகள் எல்லாம் ஆணித்தரமாய் அவரைக் கேட்டவர் மனதில் பதியக் கிறிஸ்தவப் பாதிரிமார் வேலையே ஒருவாறு நின்றுவிட்டது. அதைக்கண்ட ஸநாதன தர்ம ஹிந்துக்கள் கூட்டம் கூடி கேசவரைப் பஹுமானித்து ஒரு தீர்மானம் செய்து கௌரவப்படுத்தினர்.

இதன் பிறகு இவர் தேவேந்திர நாதருடன் சிம்மளத்தீவுக்கு ஒருதரம் சென்றுவந்தார். ஆயினும் பிரம்ம சமாஜத்தில் இன்னும் இவருக்கு அதிகாரம் ஒன்றும் ஏற்படவில்லை. அதை விஸ்தாரம் செய்த ராம மோகனர் தம்மை ஆசாரியரென்று ஏற்படுத்திக்கொண்டு தமக்குக் கீழ் சிலரை உப ஆசாரியர்களாக வைத்துப் பூஜை முதலியவைகளை நடத்தி வந்தனர். அவர்களது பூஜாகிருகம் கிறிஸ்தவர் கோயில்களைப்போல் ஒரு பெரிய மண்டபந்தான். அதன் ஒரு மூலையில் வேதி யென்றொரு உயர்ந்த மேடையொன்று இருக்கும். விக்கிரகாராதனம் உதவாதென்று சொல்லிவந்த இவர்கள் அம்மேடையிலிருந்து எங்கும் நிறைந்த கடவுளைத் தோத்திரம் செய்வது வழக்கம். அவர்கள் அதற்கென்று உபயோகப்படுத்திவந்த மந்த்ரங்கள் வேத முதலிய ஆரிய மதப்புத்தகங்களிலிருந்தே அநேகமாய் வந்தன. ஆண்மக்கள் மாத்திரமே கர்மயோக்கியதை உடையவர்கள் என்று சொல்லியிருப்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. பெண்பிள்ளைகளும் காயத்ரீ முதலிய மந்த்ரங்களை உச்சரித்து ஜபம் செய்யலாம் என்று அவர்கள் சொல்லிவந்தனர். அம்மாதிரியே சிற்சில ஜாதியார்தாம் மந்த்ரங்களை உபயோகிக்கலாமென்பதையும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை.

ஆயினும் இதுவரையில் சமாஜத்தில் நியமிக்கப்பட்ட ஆசாரியர்கள் பிராம்மணராகவே இருந்தனர். ராமமோகனரே பிராம்மணர். அவர் இறந்தபின் அவர் பதவிக்கு வந்த தேவேந்திர நாதரும் அப்படியே. ஆனால் தேவேந்திர நாதர் முதலில் தாம் சமாஜத்துக்கு அக்கிராசனர் (president என்று சொல்லிக்கொண்டனரேயன்றி ஆசாரியர் என்று சொல்லிக்கொள்ளவில்லை. கேசவ சந்திரருடன் நெருங்கிப் பழகி அவர் சாமர்த்தியத்தையும் தியாக புத்தியையும் மதப்பற்றையும் அம்மதப் பிரசாரத்தில் அவருக்குள்ள உற்சாகத்தையும் கண்டு அவரால்தான் பிரம்ம சமாஜம் முன்னுக்கு வரக்கூடுமென்று நினைத்து அவரை ஆசாரியராக நியமனம் செய்வதென்று தீர்மானித்தார்.

அப்படிச் செய்வதற்குப் பல விக்கினங்கள் ஏற்பட்டன. கேசவர் பிராமணரல்லர். இதுவரையில் உப ஆசாரியர்களே ஏற்படுத்தப்பட்டு வந்தனரேயன்றி ஆசாரியர் என்னும் பட்டம் ஒருவருக்கும் கொடுபடவில்லை. ஆயினும் இவை ஒன்றையும் தேவேந்திர நாதர் லட்சியம் செய்யவில்லை. 1862வருஷத்தில் அவர் கேசவரை சமாஜ ஆசாரியராக நியமித்தார். அச்சமயத்தில் அரண்மனை போன்ற தமது கிருகத்தில் கூடத்தில் தோரணம் முதலியன கட்டி, தீபங்கள் மிக ஏற்றி அலங்காரமாக நிருமித்திருந்த மேடையிலிருந்து பூஜை முதலியன நடத்தினர். பிறகு ஒரு அழகிய ஆசாரிய நியமனப் பத்திரிகையையும், பிர்ம்ம தர்ம க்ரந்தம் என்னும் சமாஜ விதிகளடங்கிய புஸ்தகத்தையும் ஆசாரியரென்பதற் கறிகுறியாக ஒரு தந்த முத்திரையையும் கேசவருக்குத் தந்தனர். அவருக்கு 'ப்ரம்மா நந்தர்' என்னும் சிறப்புப் பெயரும் இடப்பட்டது.

இவ்வைபவத்தைக் கண்ணுற்று ஆனந்தமடைந்தவர்களில் இவர் பத்தினியாரும் ஒருவர் ஆவர். அப் பெண்மணிக்கு அப்பொழுது வயது பதினைந்து பதினாறிருக்கும். வங்க நாட்டு ஸ்திரீகள் எப்பொழுதும் அந்தப்புறத்திலிருப்பதே வழக்கம். அதைவிட்டு ஆடவர்முன் வருவதில்லை. பிரம்ம சமாஜத்தார் இவ்வழக்கத்தைக் கண்டித்திருந்தனர். கேசவரோ ஸ்திரீகளுக்குள் அறிவைப் பரவச் செய்வதற்காக எடுத்துக் கொண்ட முயற்சி ஏற்கெனவே சொல்லப்பட்

டிருக்கிறது ஆகையால் அவர் தமது பத்தினியை தம்முடன் அழைத்துச் செல்லப் பிரயத்தனப் பட்டார் அப்பொழுது அவர் அண்ணனும் சிறிய தகப்பனும் அது கூடாதென்று மறுத்த னர். கேசவர் அதைச் சிறிதும் கவனித்தாரில்லை. தமது அபிப்பிராயப்படி செய்து நிறைவேற்றி னர். அப்படிச் செய்தால் அவ்விருவரும் தமது வீட்டுக்குத் திரும்பிவரக் கூடாதென்று அவர் கள் சொன்னதையும் பொருள்படுத்தவில்லை. சிறிது காலம் அவர்கள் தேவேந்திரநாதருட னேயே இருந்தனர். பிறகு தம் உறவினருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தணிந்ததும் திரும்பி வந்தனராயினும் முன்போல் அவர்களுடன் ஒத்திருக்கவில்லை.

ஆசாரியராயிருப்பவர் வேதியிலிருந்து ஜபம் முதலியன முடிந்ததும் வங்க பாஷையில் உபந் நியசிப்பது வழக்கம். தேவேந்திரநாதர் இவ் வேலையில் கைதேர்ந்தவர். கேசவர் தமது தாய்ப் பாஷையில் போதுமான தேர்ச்சி யில்லாதவராக விருந்தார். அவருடைய பிரசங்கங்கள் சிறப் பாகவில்லை. வைத்திய ஜாதியைச் சேர்ந்தவ னென்றும், முன்னமே உத்தியோகத்தி லமர்ந் தவரைவிட உயர்ந்த ஸ்தானம் கொடுக்கப்பட் டனரென்றும் ஏற்பட்ட கோபத்துடன் இது வும் சேரவே அநேகர் பூஜைகளுக்கு வரு வதையே விட்டுவிட்டனர். ஆயினும் இருபத் தைந்து வயதுக்குட்பட்ட கேசவருடைய சமாஜ சகாக்கள் மட்டும் அவரிடம் எப்பொழுதும் சிறந்த பக்தியும் அபிமானமு முடையவர் களாகவே இருந்தனர்.

கேசவர் இச்சமயத்தில் மதப்பிரசாரத்துக் கென்று தேச யாத்திரையும் செய்தனர்; கல்கத் தாவைவிட்டு அவர் பல பட்டணங்களைப் பார்த்துக்கொண்டு பம்பாய், பூனா, கள்ளிக் கோட்டை, சென்னை முதலிய விடங்களில் பிரம்ம சமாஜக் கொள்கைகளைப்பற்றிப் பிரசங் கம் செய்ததுமன்றி அங்கெல்லாம் கிளை சமாஜங் களை நிலை நாட்டினர். இது முதலாக வங்கநாட் டில் மாத்திரமல்ல; இந்தியா முழுவதுமே பிரம்ம சமாஜக் கொடியை நாட்டி அதன் கொள்கை களைக் கற்பிக்க வேண்டுமென்னும் ஆசை அவ ருக்கு உண்டாயிற்று.

இதன் பிறகு இவர் ஆரம்பித்த வேலை கொஞ் சம் கொஞ்சமாக இவரை தேவேந்திர நாதரிட மிருந்து பிரித்து வைக்கலாயிற்று. இவர் கலப்பு விவாகங்களை ஆதரிக்கலானார். 1862௵த் தில் கேசவருடைய ஊக்கத்தின் பலனாக அம்மா திரி முதல் கலியாணம் நடக்க,இரண்டாவது கலி யாணமும் இன்னும் இரண்டு வருஷமாகு முன் னமே நடந்தது. இது மகரிஷிக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. அவருடன் கூடவே இருந்த வய தான சமாஜத்தாருக்கும் அது பிடிக்கவில்லை. சமூகச் சீர்திருத்தத்தை (Social Reform) மதப்பிரசாரத்தோடு சேர்ப்பது சரியல்ல வென் பது அவர்கள் அபிப்பிராயமாக விருந்தது.

ஸங்கத்ஸபா வென்று சமாஜத்தார் சபை ஒன்று இருந்ததல்லவா? அதில் சம்பந்தப் பட்ட ப்ரம்மர்கள் தங்களது சர்ச்சையின் பல னாக பிரம்ம தர்ம அனுஷ்டானம் என்றொரு புஸ்தகம் இயற்றினர். அதில் சமாஜத்தார் அனுஷ்டிக்க வேண்டுமென்று அவர்கள் தீர்மா னித்த விஷயங்கள் எல்லாம் கண்டிருந்தது. முத லாவது இம்மதத்தினர் பூணூலை வர்ஜித்து விட வேண்டுமென்று அதில் அபிபிராய மிருந்தது. பூணூல் ஜாதி வித்தியாசத்தையும் தேவதார்ச் சனையையும் குறிப்பதாக அவர்கள் எண்ணினர் கள். இதை தேவேந்திர நாதர் ஒப்புக்கொண்டு தமது பூணூலை எடுத்துவிட்டதுமன்றித் தமது வீட்டுச் சிறுவர்களுக்கு வெகுகாலம் வரையில் உபநயன காலத்தில் பூணூல் தாரணத்தை நிறுத்திவிட்டார். மேலும் கேசவருடைய கட் சியார் வற்புறுத்தினதன்பேரில் சமாஜ வேதியி லிருந்து பூஜைநடத்தும் பூணூல் தரித்த உபா சாரியர்களை விலக்கிவிட்டனர் இது பழைய சமாஜத்தாருக்கு அத்தியந்தம் வருத்தத்தைத் தந்தது. கேசவருடைய கட்சியைப்போல் அவ்வ ளவுதூரம் ஹிந்து மதத்திலிருந்து விலகிநிற்க அவர்களுக்கு இஷ்டமில்லை. சமாஜத்தைச் சேர்ந்ததால் ஜாதி ஆசாரம், பூணூல் ஸம்ஸ்கார காலங்களில் தேவபூஜை முதலியவைகளை விட்டு விடுவது சரியென்று அவர்களுக்குப் படவில்லை. கெட்ட வழிகளில் மனதைச் செலுத்தாமல் கட வுளை மனப்பூர்வமாகத் தொழுவதுதான் ப்ரம்ம மதமென அவர்கள் உணர்ந்திருந்தனர். இம் மாதிரி செய்ததற்கே அவர்கள் தமது இளமைப் பருவத்தில் எவ்வளவோ கஷ்டமனுபவித்திருந் தனர். ஹிந்து மதத்துக்கும் மற்ற மதங்களுக் கும் உள்ள வித்தியாசம் ஜாதிபேத மாதலால் அதை விட்டுவிட அவர்கள் மனமொப்பவில்லை. மகரிஷியும் அவர்களுடைய கொள்கைகளையே

அவலம்பித்து சமாஜ அதிகாரத்தைக் கேசவரிடமிருந்து பிடுங்கிவிடச் சமயம் பார்த்திருந்தனர்.

1864-ஹூ த்தில் புயலடித்து சமாஜ மந்திரம் சிறிது சேதமடைந்தது. அச்சமயத்தில் பூஜை, மகரிஷியின் வீட்டிலேயே நடந்தது. ஒருநாள் கேசவரும் அவர் சகாக்களும் வருமுன்னரே பூணூல் தரித்த வேதிய சமாஜத்தார் இருவர் வேதியேறிப் பூஜை யாரம்பித்துவிட்டனர். வந்தவர்கள் ஆக்ஷேபிக்க, மகரிஷி தமக்கு அதெல்லாம் செய்ய அதிகாரமிருப்பதாகச் சொல்லிவிட்டனர். கேசவர் கட்சிக்காரர் அதை ஒப்புக் கொள்ளவில்லை. அப்படியெல்லாம் செய்தால், தாம் தனி சமாஜம் ஏற்படுத்திக்கொள்ள நேருமென்று பயமுறுத்தினர். மகர்ஷியே ஸமாஜ ஆலோசனை சபையைத் திருத்தி யமைத்துத் தமக்கு வேண்டியவர்களுக்கே அதில் அதிகாரம் கொடுத்துத் தத்வபோதினி பத்திரிகையையும் கேசவரிடமிருந்து வாங்கி விட்டனர். இது முதல் சமாஜம் இரு பிரிவாகப் பிரிந்ததென்னலாம்.

ஆயினும் அப்பிரிவு முற்றிலும் நிலைக்க இரண்டு வருஷம் பிடித்தது. ஸமாஜ விஷயங்கள் ஒரே மனிதருடைய இஷ்டப்படி விடக்கூடாதென்றும் சமாஜத்தாரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சபையே எல்லாவற்றையும் மேர்பார்வையிட்டு வரவேண்டுமென்றும் கேசவரைச் சார்ந்தவர்கள் சொல்லிப்பார்த்தனர். கேசவரும் இதைப்பற்றி ஒரு உபன்யாசம் செய்து மகரிஷி கட்சியார் செய்தது அதிக்கிரமமெனச் சொல்லினர். உடனேயே மகரிஷிக்கு ஒரு கடிதமும் வரைந்து அதில் பூணூல் தரித்த ஆசாரியர்கள் பூஜை நடத்தலாகாதெனவும் அப்படிச் செய்யாத வரையில் தம்மைச் சார்ந்தவர் வேறொரு நாள் தமதிஷ்டப்படிக் கடவுளை வணங்க உத்தரவு தரவேண்டுமெனவும் கேட்டனர். மகரிஷி அதனை மறுக்க, கேசவ சந்திரஸேனர் வேறொரு சமாஜமேற்படுத்த முயன்று 1866-ம் ஹூ நவம்பர் மாதத்தில் தனி மண்டபம் ஏற்படுத்தி அதில் தமது இஷ்டப்படி பூஜை முதலியன நடத்தலுற்றார். அதற்கு இந்திய பிரம்ம சமாஜமென்று பெயரிட்டு அதன் காரியங்களை நடத்தவென்று பல பலப் புஸ்தகங்களிலிருந்து கோட்பாடுகளைத் தொகுத்து பிரம்மதர்மம் அதுதானென ஏற்படுத்தியும் வைத்தனர். இச்சமயம் இவர் செய்த உபந்நியாசங்கள் ஒன்றில் 'நிஜமாகவே கிறிஸ்துநாதர் அமானுஷாவதாரம்' எனச் சொல்லி முடித்தனர். இது கிறிஸ்தவர்களுக்கு மிக்கச் சந்தோஷத்தைத் தந்தது.

ஹிந்துமதப் புஸ்தகங்களிலேயே தத்வமுள்ளதெனச் சொல்லிவந்த மகரிஷிக்கும் கிறிஸ்துமதப் பற்றுள்ள கேசவருக்கும் உள்ள அபிப்பிராய வித்தியாசம் இதுதான். "முற்காலத்திலுள்ள மதங்களெல்லாம் தத்வத்தையே போதித்தனவென்றாலும் கடவுளனுக்கிரகத்தால் கேசவசந்திரசேனர் செய்த போதனைகளே புதுமார்க்கம் (New Dispensation)" என்பதுதான் இது முதல் அவருடைய கொள்கை.

மறுபடி பிரசாரத்துக்கென்று கேசவ சந்திரர் வங்கநாட்டின் கிழக்குப் பாகத்திலும், ஆக்ரா அயோத்தி மாகாணத்திலும், பஞ்சாபிலும் யாத்திரை செய்தார். பிறகு 1870-ஹூ த்தில் அவர் இங்கிலாந்துக்குப் போய் அங்கு ஏழுமாதம் தங்கினர். அவ்விடத்தில் ஏகத்வ கிறிஸ்தவ போதகர்களால் (Unitarian Christian Ministers) அவர் ஆதரவுடன் வரவேற்கப்பட்டனர். பதினாலு பெரிய பட்டணங்களில் அவர் உபந்யாஸங்கள் செய்தார். எங்கும் அவர் உபந்யாஸங்களைக் கேட்க வேண்டுமென்று வந்தவர்கள் வெகு அதிகம். நாற்பது பட்டணங்களிலிருந்து அவரை அங்கெல்லாம் வரும்படி அழைப்புக் கடிதங்கள் வந்தன. ஆனால் எங்கும் போக அவருக்கு அவகாசம் போதவில்லை. விக்டோரியா மகாராணியின் பேட்டி அவருக்குக் கிடைத்தது. மதவிஷயங்களைப் பற்றி மாத்திரமல்ல; இந்திய ராஜ்ய விஷயங்களைப் பற்றியும் சமூக வாழ்வைப்பற்றியும் அவர் உபந்நியாசம் செய்தனர்.

ஆயினும் இந்தியருக்கென்று அவர் செய்து வைத்த காரியங்களில் பெரியது 1872-ஹூல் ஏற்பட்ட விவாகச்சட்டமேயாம். ஜாதி வித்தியாசம் பாராமல் ஹிந்துக்கள் கலியாணம் செய்துகொள்ளலாமென்னும் தமது அபிப்பிராயத்தையும், பாலிய விவாகம் உதவாதென்னும் அபிப்பிராயத்தையும் அவர் ராஜப்பிரதிநிதியிடம் தெரிவித்து ஒரு மசோதா கொண்டுவரும்படி செய்தார். ஆனால் கலப்பு விவாகம் உதவாதென்று வைதிக தர்மத்தை அனுசரித்த ஹிந்துக்களும் ஆதி பிரம்ம சமாஜத்தாரும் சொல்ல, கடைசியாக எவரெவர்கள் தாம் ஹிந்து, கிறிஸ்தவ, முகம்மதிய, புத்த, ஜைன, சீக்கிய மதங்களைச் சார்ந்த

வர்களில்லையென்று சொல்லிக் கொள்ளுகிறார்களோ அவர்கள், ஆண் 18 வயதுக்குக் குறையாமலும் பெண் 14வயதுக்குக் குறையாமலுமிருந்தால் விவாகம் செய்து கொள்ளலாமென்றும், விதவா விவாகமும் கலப்பு விவாகமும் அவர்களுக்கு ஒப்புக்கொள்ளத் தகுந்தவை யென்றும் அச்சட்டத்தில் ஏற்பட்டது.

ஆதி பிரம்ம சமாஜத்திலிருந்து பிரிந்தது முதல், கேசவசந்திரர் புது சித்தாந்தங்கள் அநேகங்களைத் தமது மதத்துக்குள் கொண்டுவந்து சேர்க்கவானார். ஹிந்து மதக் கோட்பாடுகளுடன் அவர் கிறிஸ்தவ முதலிய மதக்கோட்பாடுகளைச் சேர்க்க வாரம்பித்ததை ஏற்கெனவே சொல்லி யிருக்கிறோம். நாளாகவாக அவர் பல மதங்களிலுமிருந்து பிரம்ம மதத்துக்கு அன்யமான பல கொள்கைகளைச் சேர்க்கலானார். இச்சமயத்தில் அவருடைய சகாக்களில் சைதந்ய தேவருடைய சந்ததியார் ஒருவர் இருந்தார். அவர் வைஷ்ண சமயத்துக்கு அங்கமான பக்தியின் மேம்பாட்டை எடுத்துக் காட்டவே, கேசவர் கடவுள் வழிபாட்டில் பக்தி முக்கியமெனச் சொல்ல வாரம்பித்தனர். யாராவது அதைப்பற்றி வாதித்தால், மதவிஷயங்களில் வாதம் கூடாதென்றும், கடவுளிடம் அபரிமிதமான அன்பும் பக்தியும் செய்து அவர் காட்டும் வழியையே சிறந்ததென நினைக்க வேண்டுமென்றும் சொல்லி வந்தார். இதனால் ஆதி பிரம்ம சமாஜத்தார் இவரை எதிர்க்க, இவரது சிஷ்யர்களில் அநேகர் இவர் கொள்கைகளை ஒப்புக்கொள்ளாமலிருக்க இடம் தந்தது.

இச்சமயத்தில் இவரது மூத்த குமாரிக்கும் கூச்பிகார் என்னும் ஸம்ஸ்தான ராஜனுக்கும் கலியாணம் நேர்ந்தது. அவ்வரசனுக்கு அப்பொழுது வயது பதினேழு. ஸமஸ்தான நடவடிக்கைகளை பிரிடிஷ் ராஜாங்கத்தார் மேல் பார்த்து வந்தனர். மேலும் அவர் ஸநாதன தர்ம ஹிந்து கலியாணச் சடங்குகளெல்லாம் ஹிந்து மதக்கோட்பாட்டின்படி நடக்கவேண்டுமென்று அவரைச் சேர்ந்தோர் நினைத்தனர். கேசவச் சந்திரர் பிரம்ம மதத்தின்படி நடக்க வேண்டுமென்று நினைத்தனராயினும் கலியாண காலத்தில் அதொன்றும் பலிக்கவில்லை. பெரிய சம்பந்தத்தை நாடித் தமது மதக்கொள்கைகளைக் கைவிட்டனரென்னும் பெயர் அவருக்கு வந்தது. ஏற்கெனவே அவருடைய நூதன கொள்கைகளுக்கு உடன்படாத சமாஜத்தார் அவரை ஆசாரிய பதவியிலிருந்து நீக்க முயன்றனர். அவர் அவர்களுடைய தீர்மானத்துக்கு இணங்காம லிருப்பதைக்கண்டு 1878-ஆம் மேமாதத்தில் சாதாரண பிரம்ம சமாஜ மென்னும் பெயரின்கீழ் புது சமாஜ மேற்படுத்திக் கொண்டு பிரிந்தனர். கேசவருடைய மந்திரத்தைவிட ஒரு பெரிய மண்டபம் கட்டிக்கொண்டு அவர்கள் 1881-ஆம் ஆண்டில் அங்கு பூஜை நடத்தலாயினர்.

இதுமுதல் கேசவருடைய சரீராரோக்யம் குறைந்துபோயிற்று அப்பொழுது அவருக்குப் பலமாக ஜுரம் கண்டது. ஜுரவேகத்தில் தமது மதம் சீர்குலைந்ததைப் பற்றி அவர் பிதற்றுவதுண்டு. உடம்பு சொஸ்தமாகியும், அவருக்குத் தேகத்தில் ஒரு பதைப்பு ஏற்படலாயிற்று. தமது சமாஜக் காரியங்களை ஒழுங்காக நடத்த வெகு பாடுபட்டனர். 1882-ஆம் ஆண்டில் அவருக்கு நீர் ரோகமும் கண்டது. ஆயினும் அவருடைய சுறுசுறுப்பு மாத்திரம் குறைய வில்லை. ஆதியில் இவர் சமாஜ ஆசாரிய ரானவுடன் வங்கபாஷையில் பேச அவருக்குத் தேர்ச்சி போதவில்லை யென்று சொல்லியிருக்கிறது. இப்பொழுதோ அவர்தம் தாய்ப் பாஷையில் வெகு நேர்த்தியாகவும் சுத்தமாகவும் பேசவாரம்பித்தனர். அவருடைய உபன்யாசங்களைக் கேட்கவந்து கூடின வித்துவான்கள் அநேகர் அவர் வாக்கைக் கேட்டு ஆச்சரிய முற்றனர். தமது கொள்கைகளிலும் பல மாறுதல்களை அவர் செய்யலானார். பல விரதங்களை தமது சமாஜத்தார் அநுஷ்டிக்க வேண்டுமென்று சொன்னார். இவற்றால் பிரம்ம தத்வங்கள் பரவ இடந்தருமென்பது அவர் அபிப்பிராயம். நவமார்க்கம் என்று ஒரு பத்திரிகையை ஏற்படுத்தி ஒவ்வொரு வாரமும் தமக்கு உதிக்கும் அபிப்பிராயங்களை யெல்லாம் அதில் பிரசுரித்து வந்தார். தமது கொள்கையை அநுஸரிக்க வேண்டிய வழிகளைத் தொகுத்து 'நவ ஸம்ஹிதை' என்றொரு புஸ்தக மெழுதினார். இக்காலத்தில் 'யோகம்' 'ஜீவனவேதம்' என வேறிரண்டு புஸ்தகங்களையு மியற்றினர். கடைசியாக 1884-ஆம் ஜனவரிமாதம் 8உ அவர் தேக வியோகமாயினர்.

கேசவ சந்திரர் பெரிய ப்ரம்மசமாஜத்தார் மாத்திரமென்று நாம் சொல்லுவது சரியன்று. உத்தம இந்தியர் என்பது இச்சரித்திரத்தை வாசித்தவர் எவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய

விஷயம். இவரது மதாபிப்பிராயம் எப்படியிருந்த போதிலும் அவருடைய தெய்வபக்தி, தியாக புத்தி, மனுஷ்ய சமூகத்து ஊழியம் முதலியன எல்லோராலும் பாராட்டத் தகுந்தவை. அவர் இறந்தவுடன் நமது தேசத்திலுள்ள ஆங்கிலர் நம்மவர் முதலிய எல்லோராலும் காட்டப்பெற்ற அநுதாபம் மிகவும் விசேஷமாயிருந்தது. மகாராணியிடமிருந்து ஒரு உபசாரத் தந்தி வந்தது. அக்காலம் ராஜப்பிரதிநிதியான ரிப்பன் பிரபுவும் வெகு உருக்கமாக ஒரு கடிதமெழுதினர். கல்கத்தா நகர மண்டபத்தில் நடந்த பெரிய மகா நாட்டில் ஸர் வில்லியம் ஹண்டர் அக்கிராசனம் வகித்தார் இந்தியாவிலுள்ள பல வகுப்பாரின் பிரதிநிதிகளும் அச்சமயம் அநுதாப உபன்யாசங்கள் செய்தனர். அவ்வருஷம் கல்கத்தா வித்யாபீடத்தில் யோக்கிய பத்திர தான மகோற்சவத்தில், உப அக்ராஸனர் பேசிய பொழுது கேசவருடைய ஆழ்ந்த புத்தியுடன் அவருக்கு மேனாட்டு நாகரிகமும் வித்யா ஞானமும் ஏற்பட்டிருந்தது வியக்கத்தக்கதெனவும், அவருக்குத் தத்துவத்தில் புத்தி சென்றபோதிலும் பெரிய காரியங்களை எடுத்துக்கொண்டு அவற்றுக்குப் பாடுபடும் குணமிருந்ததெனவும், எம்மதத்திலும் உண்மை யுண்டென்னும் அவரது தாராள சிந்தை பாராட்டத் தக்கதெனவும், அஞ்ஞானம், அநியாயம், குரூரம் இவற்றுக்கு இடங்கொடாது எப்போதும் அவற்றைப் போக்குவதில் அவருக்கிருந்த நோக்கம் அவர் மேன்மையைக் காட்டிற்றெனவும் சொல்லினர்.

கேசவர் நல்ல சரீர அழகுவாய்ந்தவர். ஆஜானுபாஹுவாய் ஆறடி உயரம் இருந்தார். நிறம் நல்ல சிவப்பு. ஐஹிக சுகத்தில் அவருக்கு அதிக ஆஸக்தி கிடையாது. யாரிடமும் அவர் ஸ்நேகபாவமுடையவர். தற்பெருமை அவரிடமில்லை. யோக்கியதை வாய்ந்த பெரியோரிடம் நெருங்கக்கூட அஞ்சும் குணமுடையவர். ராஜாங்கத்தார் அவருக்கு அநேக சமயங்களில் கௌரவம் செய்ய எண்ணினர். அவர் அவற்றை வேண்டாமென மறுத்துவிட்டனர். அவரது வாக் சாதுர்யம் போற்றத்தகுந்தது. பேசும் திறமை வாய்ந்த நம்மவரில் அவரே முதல்வரெனலாம். ஆங்கிலத்திலும் பிற்காலத்தில் தமது தாய்ப் பாஷையிலும் அவர் செய்த பிரசங்கங்கள் யாவராலும் முழு கவனத்துடன் கேட்கப்பெற்றன. மதவிஷயங்களைப் பற்றியும் தத்துவ விஷயங்களைப்பற்றியும் சிந்தனையில்லாமல் தீவிரமாய்ப் பேசும் அரிய சாமர்த்தியம் படைத்த இந்த வங்கநாட்டு சிரேஷ்டர்நமது இந்திய மாதாவின் சிறந்த புத்திர ரத்தினமென்பதில் ஐயமுண்டோ!

விநோத துணுக்குகள்

TIT-BITS

புருஷன் கடுகடுத்த முகத்துடன் இருந்தார். பார்த்தாள் கமலம். அருகிற் சென்று, 'நாதா! ஏன் கோபம். கல்யாணம் ஆன புதிதில் 'என் செல்வமே! தெய்வமே உன்னை எனக்களித்தது' என்பீரே. இப்பொழுது மாத்திரம்... என்று சொன்னாள்.

புருஷன்:—இப்பொழுதும் அப்படித்தான் சொல்லி நொந்துகொள்கிறேன்.

கமலம் (சிரித்து) "மணாளா! நன்றாகச் சோதிக்கிறீர். தெய்வம் கொடுத்த பொருளின் பேரில் கோபிக்கலாமா" என்று வினவினள்.

புருஷன்:—'தெய்வந்தான் என் பாபத்திற்குப் பிரதி பலனாக உன்னை அனுப்பியிருக்கின்றது' என்றான்.

* * *

சுந்தரமய்யர் மிகவும் ஷோக்காளி. நன்றாக அலங்கரித்து உயர்ந்த பூட்ஸ் (Boots) போட்டு, பீச் ரோட்டில் வெகு அந்தஸ்தாக நடந்து சென்றார். ஒரு வாழைப்பழத் தோலில் காலைவைக்க அது வழுக்கிக் கீழே விழுந்தனர்.

மைசூர் தலைப்பாகை மண்ணில் வீழ்ந்தது. அதற்குள் சுற்றிக் கூட்டமும் சேர்ந்தது கனவான் எழுந்து உட்கார்ந்து எல்லோரும் சிறிப்பதைப் பார்த்து, 'இந்தச் சோம்பேறிகளுக்கெல்லாம் இங்கென்ன வேலை ?' என்றார்.

அக்கூட்டத்தில் ஒருவன், ஒவ்வொருவராய்ச் சுட்டிக் காட்டி கீழ்வருமாறு சொன்னான்.

'சுந்தரமய்யாவா! இதோ இவர் தான் போலீஸ்காரர். நீர் வண்டி ரஸ்தாவில் தடங்கல் செய்ததற்கு தாணாவிற்கு தள்ளிக்கொண்டு போக வந்திருக்கிறார். இந்த மனிதர் வக்கீல், நீங்கள் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்றால் 'பீஸ்' பேசிக்கொள்ளலாம். நாங்களெல்லோரும் சாக்ஷி சொல்லத் தயார். எங்கள் ஒத்தாசையும் அவசியம் வேண்டியபதுதான். நன்றாகச் சொன்னீர்கள் சோம்பேரிகளென்று' என முடித்தான்.

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற் கொல்லப் பயன்படுங் கீழ்.

ஸ்ரீராமாவதார மகிமை

GREATNESS OF RAMA AVATARAM

உலகில் தருமம் குறைந்து, பாவம் மேலிட்டு, ஜனங்களுக்குப் பலவித கஷ்டம் நேரிடுங்கால், ஸ்ரீய:பதியான திருமால் அவதரித்து, துஷ்ட நிக்கிரகம், சிஷ்டபரிபாலனம் செய்து, தருமத்தை நிலை நிறுத்துகிறார் என்பது ஆஸ்திக ஹிந்துக்களின் முக்கிய கொள்கைளில் ஒன்று என்று முன் ஸஞ்சிகைகளில் கூறப்பட்டுளது. இவ்வாறு கல்பாதிகளிலும், யுகாந்தரங்களிலும் ஏற்பட்டுள்ள மத்ஸ்ய, கூர்மாதி பற்பல பகவதவதாரங்களுள், ஸ்ரீராமாவதாரம் பூர்ணாவதாரம் என்றும், இது முக்கியமாய் த்ரிலோக கண்டகனை இராவணனை ஸம்ஹரித்து, தேவர்கள் ரிஷிகள் முதலான ஸாது ஜனங்களை இரட்சிக்க ஏற்பட்டுள்ளது எனினும், இதில் பல வர்ணத்தாரும் தழுவி நடக்கவேண்டிய ஸாமான்ய விசேஷ தருமங்களும், உலக நீதிகளும், பொய்யாமை, பித்ருவாக்கிய பரிபாலனம், பொறுமை, வணக்கம், ஸர்வபூத தயை முதலிய நற்குணங்களும் நிறைந்துள. ஆகவே, ராமாயணம் என்னும் இச் சிறந்த இதிஹாஸமானது நமது பரத நாட்டில் ஆஸேது ஹிமாசலம் வரையில் இந்துக்களில் எவ்வர்ணத்தாராலும் கொண்டாடப்பட்டு வருவதுடன், இச்சரித்திரத்தைப் படிப்பதும், கேட்பதும் மகா புண்ணிய மென்றும், இம்மையில் ஸர்வ ஐசுவரியங்களையும், மறுமையில் மோக்ஷ ஸாம்ராஜ்யமும் அளிக்கவல்ல நல்லதோர் ஸாதனமென்றும் தொன்றுதொட்டு நம்பப்பட்டுவருகிறது.

இந்த அவதார கதையை இயற்றி, இப்புவியில் பிரசாரமாகும்படி செய்தருளிய வால்மீகி மகரிஷிக்குப் பிரம்மதேவன் வாக்களித்து உற்சாகப்படுத்தியதாய்ச் சொல்லப்பட்ட பிரகாரம், "இப்பூமியில் மலைகளும் நதிகளும் உள்ளவரையில், மகா புண்ணியமான ராமாயண கதையானது பிரசாரத்தில் இருந்து வரும்" என்பதற்கு ஐயமில்லை. கால வித்தியாசத்தால், நமது பரத நாட்டில் எவ்வித மாறுதல்கள் ஏற்படினும், ஜனங்களுக்கு ஸ்ரீராமாயணத்திலுள்ள கௌரவமும், பக்தியும் அடியோடு குன்றிப் போகாமல் நீடித்து நிற்கும் என்பது திண்ணமே.

ஆனால், இவ்விஷயத்தில் ஹிந்துக்களுக்கு இயல்பாய் ஏற்படக்கூடிய ஸ்தூல பக்தியும், கௌரவ புத்தியுமே இச்சிறந்த இதிஹாஸத்தால் ஏற்படக்கூடிய நற்பயனையளிக்கப் போதுமான ஸாதனமாகாது. நமது சிறுவர், சிறுமிகள் இதிலடங்கியுள்ள இந்துக்களின் இன்றியமையாத தர்மங்கள், நீதிநெறிகள், உலகதந்திர ஞானம் முதலியவற்றைச் சரிவரக் கற்றறிந்து, அதில் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ள ஸத்தியந் தவறாமை, புத்திரன், பத்னி, மித்திரன் முதலானோர் எக்காலத்திலும் கைப்பற்றி நடக்கவேண்டிய நற்குணங்கள் முதலானதைத் தமது உலக வாழ்க்கையில் செய்கைகளால் அனுஷ்டித்துக் காட்டவேண்டியது அவசியம். இவ்வாறு செய்வது நமது நாட்டின் ஐஹிக சுகசாதனமான பூர்விக நாகரிகச் சிறப்பும், பரத்தில் நற்கதி பெறுவதற்குரிய மனப்பாங்கும், உதார புத்தியும் செழித்தோங்கக் காரணமாகும்.

இவ்வுலகின் கண் இருந்துவரும் பலவித ஜாதியாருள், இப்பரத நாட்டிலுள்ளோரும் பல்லாயிரம் ஆண்டுகளாய்ப் பிரசித்திபெற்று வந்துள்ள ஒரு ஜாதியார் என்று சொல்வதற்கும், மற்றவரைப்போல் நாமும் நமக்குரிய பெருமையையும், கௌரவத்தையும் இழவாது, உலக சுகங்களைப் பெற்று அனுபவிக்க வேண்டுமென்று விரும்புவதற்கும் அடிப்படையான நமது பூர்விக நல்லொழுக்கங்களையும், மனோ நோக்கங்களையும் கைவிடாது, எவ்வித வறுமை நேரிடினும், இக்காலத்திலும், எக்காலத்திலும் நடந்துவர வேண்டுமென்கிற ஸத்புத்தியே தேச பக்திக்கும், பொதுஜன ஸேவைக்கும் தக்கதோர் அறிகுறியாகும். நமது இன்றியமையாத தர்மங்களையும், மதக்கொள்கைகளையும் அடியோடு ஒழித்து, பிறநாட்டு நவீன நாகரிகங்களை மட்டில் புகழ்ந்துகூறி, அவற்றை இந் நாட்டில் வேறூன்றி நிற்கச்செய்வதால் இகபரசுகங்களைத் தேடமுயல்வது சுயநலம் பாராட்டலையும், தேசாபிமானக் குறைவையுமே குறித்துக்காட்டும்.

சாதாரணமாய் நம்மவருள் பெரும்பான்மையோர் ராமாயண கதையை கர்ணபரம்பரையாய்க் கேட்டு ஸ்தூலமாய் அறிந்திருக்கக்கூடும். இதன் முக்கியாம்சங்களை நம் சிறுவர், சிறுமிகள் சரிவரத் தெரிந்துகொள்ளும் பொருட்டு, கதையின் சுருக்கமும் அதிலடங்கிய முக்கிய தர்மங்களும், நற்போதகங்களும், 'சிறுவர், ஸ்திரீகளுக்'கான பக்கங்களில் கூறப்பட்டுள்ளன.

வால்மீகி பகவானால் இந்த இதிஹாஸம்

248383

செய்யப்பட்டதாய்க் கூறப்பட்டிருப்பதையும், மற்றைய புராணங்கள் ஏற்பட்ட விவரத்தையும் கவனித்தால், இக்கிரந்தத்தின் பெருமையும், இந்த அவதார மகிமையும் நன்கு விளங்கும். அக்கினி, வாயு, ஸ்காந்தம், மாத்ஸ்யம், கூர்மம் முதலிய புராணங்களில், யாரோ ரிஷிமுதலானோர் அந்தந்த தேவதையின் மகிமையைக் கேட்க விரும்பியதாயும், மற்றொரு ரிஷியோ, தேவனோ அதை எடுத்துக்கூறியதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், இவ்வித புராணங்களில், அந்தந்தக் கதாநாயகனது மகிமையையும் குணகுணங்களையும் விசேஷித்துக் கூறுவதும், இதர தேவதை முதலானோரின் பெருமையைக் குறைத்துச் சொல்வதும் ஸகஜமே. சில விஷயத்தை வற்புறுத்துவதற்கான அர்த்த வாதங்கள் இவற்றில் இருக்கக் காரணமுண்டு. ஆகையால், இவற்றிலுள்ள விஷயங்களை மேலாகப் பார்த்தால், ஒரு சமயம் இவை பரஸ்பர விருத்தமாகக் காணப்படலாம். ஸ்ரீமத் ராமாயண கதையை வால்மீக மகரிஷி இயற்றி, இவ்வுலகில் பரவச் செய்ததாய்க் கூறப்பட்ட ரீதியானது, மற்றைய புராணங்களைக் காட்டிலும், அடியிற் கண்டவாறு வேறுபட்டிருக்கிறது.

நாரத முனிவர் தவம், வேதாத்யயனம், பரபிரம்மஞ்ஞானம் நிரம்பியவர்; பகவானது குணகுணங்களைப் பாடிக்கொண்டு மூவுலகங்களிலும் சஞ்சரித்து, நல்லுபதேசங்களாலும், செய்கைகளாலும் ஜனங்களின் அஞ்ஞானமாகிற இருளைப்போக்கி, தத்வஞ்ஞானமாகிற பேரானந்தத்தை யளிக்க வல்லவர். வால்மீகி மகரிஷியும் ஸ்வயம் தவத்தில் சிறந்தவரெனினும், பரம புருஷனைப்பற்றிய தத்வார்த்தத்தையும், அவரது அவதார மகிமையும் ஐயமற அறிந்து, இவற்றை வெளியிட்டு ஜனங்களை உஜ்ஜீவிக்கச் செய்யும் பொருட்டு, பிரம்ம நிஷ்டரான நாரத பகவானை ஒரு ஸத்குருவாக வரித்து, 'இவ்வுலகில், நற்குணம், தருமம், நிகரற்ற வீரியம், நன்றியறிவு, நன்னடத்தை, ஸத்தியம் தவறாமை, சீலம், ஸர்வபூத தயை, ஞானம், ஸாமர்த்தியம், பெருந்தன்மை, பொறுமை, இந்திரிய ஜயம், ஒப்பற்ற ஸௌந்தரியம், கோபவேளையில் தேவாதிகளும் நடுநடுங்கக்கூடிய பராக்கிரமம் முதலியன இப்போது எந்த மகா புருஷனிடத்தில் காணப்படுகின்றன. இவ்விதத் திவ்விய புருஷனை நீர் அறிந்து சொல்ல வல்லவராவீர். எனக்கு உபதேசித்தருளவேண்டும்" எனப் பிரார்த்தித்தார். திருமாலின் அவதாரமாகிய ஸ்ரீராம சந்திரனது மகிமையையும், கல்யாண குணங்களையும் வால்மீகி போன்ற ஸத்சிஷ்யன் மூலமாய் உலகில் பிரசாரப்படுத்தத் தக்க சமயம் வாய்த்ததென்று களிப்படைந்து, நாரதரும், "மகரிஷியே, நீர் கூறிய குணங்களும், ரூபலாவண்யமும் ஒரே பிராகிருத புருஷனிடம் காணத் தக்கவையல்ல. இருந்தாலும், எனது ஞானபலத்தால் ஆராய்ந்து பார்த்து, அவ்வித குண பரிபூர்ணனை திவ்விய புருஷனை அறிந்து, உமக்குச் சொல்லுகிறேன். ஸாவதானமாய்க் கேட்பீராக" என்று கூறி, இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த ஸ்ரீ ராமபிரானது குணாதிசயங்களையும், உத்தம புருஷ லக்ஷணங்களோடு கூடிய ஸௌந்தரியம், அவரது சீலம், தர்மாசரணம் முதலியவற்றையும் வர்ணித்துவிட்டு, இராவண வதம் முடிந்து, ராம ராஜ்யபரிபாலனம் வரையிலுள்ள கதையைச் சுருக்கி உபதேசித்தருளினார். வால்மீகியும் இவ்வுபதேசத்தை ஆதாரமாகக்கொண்டு, இச்சரித்திரத்தைக் காவிய ரூபமாக இயற்ற ஆரம்பிக்கையிலேயே, முதலில் ஏற்பட்ட சுலோகமானது அமங்களகரமாகத் தோற்றிற்று. அதனால் அவர் ஐயமுற்றுத் தயங்கினார். அப்போது பிரம்மதேவன் அங்கு எழுந்தருளி, அவர் செய்த செய்யுளானது ஸர்வமங்களமானதென்றும், ஸ்ரீமத் ராமாயணத்துக்குத் தக்கதோர் ஆரம்பமாக அமைந்துளதென்றும், கூறி, அவருக்கு ராமாயண விருத்தாந்தங்கள் யாவும் நடந்தது நடந்தவாறு புலப்படுமென்று அனுக்கிரகித்து, இச்சிறந்த இதிஹாஸத்தை இயற்றிப் பிரசாரம் செய்யுமாறு அவரை நியமித்தார். முதலில், ராமனது சிறப்பைச் சொல்லுமாறு வால்மீகி நாரதரைக் கேட்கவில்லை; பொதுவாய்க் கேட்க, நாரதர் ராமாவதார மகிமையைச் சொன்னார். பிரம்மன் அதை ஆமோதித்து ஸ்திரப்படுத்தினார். ஆகையால், ராவணன் அடைந்துள்ள வரத்தை அனுஸரித்து, அத்துஷ்டனது நிக்ரகத்தின் பொருட்டு இப்புவியில் மானிடரூபமாய் அவதரிக்க நேர்ந்துள்ள ஸ்ரீராமபிரானிடம், பரமபுருஷனுக்குரிய உத்தம குணம், ரூபலாவண்யம், தருமபுத்தி, சீலம், வீரியம் முதலியன நிறைந்துள என்பதும், பற்பல சாமான்ய விசேஷ தருமங்களும், உலக நீதிகளும் இராமாயண கதையால் தெரிந்துகொள்ளக் கூடுமென்பதும் சுலபமாய் ஊகித்தறியக்கூடிய விஷயமே.

எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால் விற்றற் குரியர் விரைந்து.

இரஞ்சிதம்

[ஸ்ரீமான் ஆ. இராமசாமி முதலியார், பீ. ஏ.]

(352-ம் பக்கத் தொடர்ச்சி.)

பதினேராம் அத்தியாயம்

இவ்வாலிபன் யார் ?

மதுரையில் அம்புஜம் குடியிருக்கும் ஆடித் தெருவில் ஒருநாள் மாலை விளக்கேற்றிவைக்குஞ் சமயம், சுமார் இருபத்தைந்தென்று மதிக்கத் தகுந்த வயதுவாய்ந்த ஒரு சுந்தரபுருஷன், தலையில் சரிகைத் தலைப்பாகை கட்டியும், பட்டங்கியை அணிந்தும், நீலவர்ணப் பட்டங்கவஸ்திரம் கழுத்திலிருந்து முழந்தாள்வரை தொங்கும்படி தரித்துக்கொண்டும் நன்ருகச் சலவை செய்யப்பட்ட வெள்ளை வஸ்திரத்தை இடையிற் கட்டிக்கொண்டும், பளபளப்பாகக் கருப்பு வர்ணம் பூசப்பட்ட சோடுகளைக் காலில் மாட்டிக்கொண்டும்,இருபக்கமும் வெள்ளைக் கட்டுகள் பிடிக்கப்பட்ட பிரம்பை வலது கையிற் பிடித்துக்கொண்டும், இடதுகையால் மீசையை முறிக்கிக்கொண்டும், அப்பக்கமு மிப்பக்கமும் பார்த்துக்கொண்டே வந்தவன் அம்புஜத்தின் வீட்டெதிரில் வந்ததும் ஒரு விநாடி நின்று குறிப்பாக உள்ளே பார்த்துவிட்டுத் தெருக்கோடி வரையுஞ் சென்று திரும்பிவந்தான். இவைகளையெல்லாம் கவனித்துக்கொண்டு மெத்தைமீது நின்றிருந்த அம்புஜம் கீழிறங்கிவந்து தெருவாசற் கதவைக் கொஞ்சம் சாத்தித் தன்முகமும் தேகத்தில்பாதியும் தெரியும் விதமாகக் கதவைப்பிடித்து நின்றுகொண்டிருந்தாள். திரும்பிவந்த வாலிபன் அம்புஜத்தைக்கண்டு நின்ருன். அவளும் வெட்கப்பட்டவள்போல் அபிநயித்து புன்முறுவல்பூத்த முகத்துடன் 'வரலாம்' என்று சொல்லிக் கதவை நன்ருகத் திறந்து வைத்துவிட்டு உள்ளே சென்ருள். நம் வாலிபனும் வீட்டில் நுழைந்து கூடத்திற்குச் செல்ல, அங்கு அம்புஜம் படிக்கட்டேறி மேன்மாடிக்குச் செல்வதைக் கண்டு அவளைப் பின்ருெடர்ந்து மேலேபோய் அவள் புகுந்த அறைக்குட் டானும் புகுந்தான்.

நமது வாசகர்களை இதற்குமுன் பன்முறை அவ்வறைக்கு அழைத்துச் சென்றிருக்கிருேமாதலின் அதன் சிங்காரத்தை நாம் இங்கு கூருமல் வாலிபனைப் பின் தொடர்வோம். ஆடவர்களை மயக்குவதில் மிக்கசாமர்த்தியம் வாய்ந்துள்ள அம்புஜம், வாலிபன் அறைக்குள் வந்ததும் "உட்காருங்கள்!" என்று சொல்லி வட்டமேஜையண்டை நாற்காலியை நகற்றி வைத்துவிட்டு, ஒருதட்டில் வெற்றிலைப் பாக்கையும், ஒரு வெள்ளிக்கிண்ணத்தில் நன்ருகக் காய்ச்சிக் கற்கண்டு போட்ட பாலையும் எடுத்துக்கொண்டு வந்து மேஜையின்மீது வைத்துத் தானும் எதிர்ப்புறமாயிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு "என்ன விசேஷமாக வந்தீர்கள் ?" என்று கேட்டாள்.

வா:—"கோவிலுக்குச் சென்றவர்களைப் பார்த்த பூஜாரி எங்கு வந்தீர்களென்று கேட்பது போலன்ருே இருக்கிறது உன்வினு" என்று கூறி நகைமுகத்துடன் வெற்றிலையை மடித்துக் கொண்டிருந்தான்.

அ:—அவ்விதமன்று. ஒருசமயம் வருகிறவர்களுக்கு முதலிற்பேசக் கூச்சமாகவிருக்குமேயென்று ஏதேனும் ஒன்றைச் சொல்லி வந்தவர்களின் வாயைத் திறக்கவைப்பது எங்கள் வழக்கம்.

வா:—"புதிதாகத் தாசிவீட்டிற்கு வருகிறவர்களுக்கு அது வேண்டியதுதான். என்போன்ருர்க்கு அது தேவையில்லை. ஆசாமியைப் பார்த்தவுடன் தெரியாதோ. இவ்வூரிலுள்ள தாசிகளைவிட நீயே அழகிலும் மற்றெல்லாவற்றிலும் சிறந்தவளென்று கேள்விப்பட் டிருக்கிறேன். அம்புஜத்தின் பெயரைச் சொல்லி அவளை நினைக்காதவர்கள் எங்களூரி லொருவருமில்லை. அவ்விதமிருக்க நீயே இவ்விதமிருந்தால் இவ்வூரிலுள்ள மற்றவர்களை நினைக்க வேண்டியதேயில்லை" என்று சொல்லி நகைத்தான்.

அ:—(புன்சிரிப்புடன்) தாம் என்னை யறிந்தவர்போற் காணப்படுகின்றீர் தங்களையும் நான் இதற்குமுன் எங்கேயோ பார்த்திருக்கிற மாதிரி நினைவிருக்கிறது. தங்களுக்கு எந்த ஊரோ ?

வா:—என்னை உனக்கு நன்ருக ஞாபகமிருக்க வேண்டும். நானிருப்பது திரிச்சிராப்பள்ளி. உங்கள் கம்பெனி அங்கு ஆடிக்கொண்டிருந்தபொழுது கம்பெனி வீட்டின் மெத்தைமேல் நீ உலாவிக்கொண்டிருந்ததைப் பன்முறை பார்த்திருக்கிறேன். நீங்கள் தங்கியிருந்த வீட்டிற்கு எதிர்ப்புறமாயிருப்பது எங்களுடைய மெத்தை வீடுதான்.

அ:—அவ்விதமா ? சந்தோஷம். தாம் எப்பொழுது இங்கு வந்தீர்?

வா:—நேற்றிரவுதான் இங்கு வந்தேன்.

அ:—நானும் நேற்றுத்தான் இங்குவந்தேன். இங்கு எவ்வளவு நாட்கள் தங்கியிருக்க உத்தேசம்?

வா:—நான் உத்தேசித்து வந்த காரியம் முடிந்தது. நான் இன்றே போயிருக்கவேண்டியவன். உன்னைப் பார்த்துப் போகலாமென்று தங்கியிருக்கிறேன். எப்பொழுது உத்தரவு கொடுக்கிறாயோ அப்பொழுது செல்லவேண்டியதுதான் என்று சொல்லி நகைத்தான்.

அ:—நான் போகக்கூடாதென்று சொன்னால் இங்கேயே தங்கிவிடுவீர்கள்போ லிருக்கிறது என்று நகைத்துக்கொண்டே கூறினாள்.

வா:—அதிற் சந்தேகமென்ன? உன்னைப் போன்ற சுந்தர ஸ்திரீகளின் கோரிக்கையை என் போன்றாரால் மறுக்கமுடியுமா? பொடிடப்பியை எங்கேயோ வைத்துவிட்டேன்போலிருக்கிறது என்று சொல்லிக்கொண்டே சட்டைப் பைகளிலுள்ளவற்றை எடுத்து வெளியில் வைத்தான். அவைகளில் ஐந்து நூறு ரூபாய் நோட்டுகள் தாசியின் மனதைக் கவர்ந்தன. அத்துடன் ரிவால்வரைக்கண்ட அவளுடைய மனம் திடுக்கிட்டது. "காணப்படவில்லை. கைமறதியாக வைத்துவிட்டேன்போல்தான் தெரிகிறது. உன்னிடமிருந்தாற் கொஞ்சங்கொடு" என்று நகைமுகத்துடன் சொல்லிக்கொண்டே மேஜையின் மீது வைத்தவைகளை மீண்டும் எடுத்துத் தன் சட்டைப்பையில் வைத்துக்கொண்டான்.

அ:—(பொடிமட்டையைக் கொடுத்து) கைத்துப்பாக்கியை எப்பொழுதும் தங்களிடத்திலேயே வைத்திருக்கும் வழக்கம்போலிருக்கிறது.

வா:—சதா வைத்துக்கொள்ளும் வழக்கமில்லை. அவசியமா யிருக்கும்பொழுதுதான் கொண்டுவருவேன்.

அ:—தாசிகளைச் சுட்டுவிட்டு அவர்களிடத்திலுள்ளதைக் கொள்ளையாடுவதற்குத் துப்பாக்கி அவசியம் வேண்டியதுதான் என்று சிரித்துக்கொண்டே சொன்னாள்.

வா:—(நகைத்துக் கொண்டே) ஆம். தாசிகள் வீட்டிற்கு வருபவர்களைக் கொள்ளையடிக்கும் உத்தமர்களை சுடுவதற்கு உபயோகப்படுமென்றுதான். நீ கொடுத்தபொடி மிகவும் நன்றாகவிருக்கிறது உள்ளூர்ப் பொடிதானா? இன்னுமொரு சிட்டிகை கொடு என்று கேட்டான்.

அ:—(பொடியைக் கொடுத்து) தாங்கள் சொன்னமாதிரி இங்கொருவருமில்லையே என்றாள்.

வா:—"நான் என்ன சொன்னேன்?" என்று அலட்சியமாகக் கேட்டான்.

அ:—இங்கு வருபவர்களை யாரோ கொள்ளையடிப்பதாகச் சொன்னீரே.

வா:—"ஆம். எங்களூரில் இதைப்பற்றி அதிகம் பேசிக்கொள்ளுகிறார்கள். இங்கும் என் நண்பரொருவர் இது விஷயமாக எனக்கு எச்சரிக்கை செய்தார். யாரோ மதனகோபனென் றொருவனிருக்கிறானாம். சில துஷ்டர்களுடன் சவகாசஞ் செய்துகொண்டு இக்காரியத்தைச் செய்துவருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மேலும் இவர்களுக்கு விரோதமாகச் சிலர் சேர்ந்து இரகசியத்தில் வேலை செய்வதாகவும், கூடிய சீக்கிரத்தில் இவர்களைத் தண்டனைக்குட்படுத்துவார்களென்றும் கேள்வி. இன்னும் ஏதேதோ என் காதிற் கெட்டியது. ஆனால் அம்மதனகோபனின் வல்லமை இந்த வீட்டில் மாத்திரம் செல்லாதென்றுங் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆதலின் நாம் இதைப்பற்றி வீணாக ஏன் பேசிக்கொண்டிருக்க வேண்டும். வந்த காரியத்தைப் பார்ப்போம் என்று சொல்லிச் சிரித்தான்.

அ:—மதனகோபனுக்கு விரோதமாகக் கிளம்பக்கூடியவர்கள் இவ்வூரிலிருக்கிறார்களா! நம்பத் தகுந்ததல்ல.

வா:—ஏன் அவ்விதஞ் சொல்லுகிறாய்?

அ:—அவனைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பெயர்களிருக்கிறார்களென்பதைக் கணக்கிட்டுச் சொல்ல என்னால் முடியாது. அவனுடைய சிநேகர் எண்ணிறந்தோர். மேலும் போலீஸ்காரர்களெல்லாம் அவன் வசத்திலிருக்கிறார்கள். தவிர போலீஸ் இன்ஸ்பெக்டர் அவனுடைய தந்தைக்கு நெருங்கிய சிநேகராயிருந்ததின் நிமித்தம், அவனுடைய பிதா இறந்தபின்னும் சிநேகத்தை மறக்காமல் இவனுக்கு அநுசரணையாகவிருக்கிறாராம். இவ்வித மிருக்கும்பொழுது அவனை யார்தான் என்ன செய்யமுடியும்?

வா:—இன்ஸ்பெக்டர் சுந்தரம் பிள்ளை அத்தகையோ ரன்று. இவர் எனக்குச் சிற்றப்பன் முறையாக வேண்டும். குற்றஞ்செய்தவன் தன் மகனென்று கண்டபோதிலும் தண்டிக்காமல் விடார். நான் இன்று கேள்விப்பட்டதை யோசிக்கு மிடத்து அவர் ஒருதக்க சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பது நன்

ருக விளங்குகிறது. அத்தகைய சமயமும் கூடிய சீக்கிரத்தில் அவருக்கு அகப்படுமென்றே நினைக்கிறேன்.

அ:—தாம் என்ன கேள்விப்பட்டீர்? எத்தகைய சமயம் கிடைக்குமென்கிறீர்கள்?

வா:—மதனகோபன் செய்யும் அக்கிரமங்களைப் பற்றிக் கையெழுத்தில்லாத மனுக்கள் அநேகம் இன்ஸ்பெக்டருக்கு வந்து கொண்டிருப்பதாகவும், அவரும் அவனை அந்தரங்கமாகக் கவனித்து வருகிறாரென்றும் கேள்விப்பட்டேன். தவிர, மதனகோபனின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவனான மாணிக்கம் பிள்ளை என்பவனுக்கும் இம் மதனகோபனுக்கும் ஏதோ விரோதமேற்பட்டிருப்பதாகவும், தன் பழியைத் தீர்க்கும் நிமித்தம், மதனகோபனும் மற்றுஞ் சிலரும் சேர்ந்து ஒரு வாலிபனுக்கும் பெண்ணுக்கும் செய்திருக்குந் தீங்கைத் துரைத்தனத்தாருக்குத் தெரிவித்து அவர்களைத் தண்டனைக்குட்படுத்துவதாகவும் மாணிக்கம் பிள்ளை என் நண்பனிடம் சொல்லிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன்.

அ:—அந்த மாணிக்கம் பிள்ளையும் இவ்விஷயத்தில் சம்பந்தப் பட்டிருக்கிறானென்று எதிரிகள் சொன்னால் இவருக்கே கெடுதலாக முடியுமே.

வா:—அவ்வித மேற்படுவதற்கு நியாயமில்லை. இவர் மதனகோபனின் இரகசியத்தை வெளியிட்டதின் நிமித்தம் அவன் இவர்மீது அபாண்டமான குற்றத்தை ஏற்படுத்துகிறானென்று நினைக்க இடந்தருமேயன்றி மாணிக்கம் பிள்ளைக்கு யாதொரு கெடுதலு முண்டாகாது.

அ:—உண்மையில் அம்மாணிக்கம் பிள்ளை சம்பந்தப்பட் டிருந்தாலுங் கூட என்று கேட்க,

வா:—மாணிக்கம் பிள்ளையே மதனகோபனுக்குத் துணையாக விருந்து ஒரு கெட்ட காரியத்தைச் செய்திருந்தாலுங்கூட மதனகோபனின் துர்நடத்தையைக் கேள்விப்பட்டுள்ள துரைத்தனத்தார் அவனுடைய வார்த்தையை நம்பமாட்டார்கள் என்று சொல்ல அம்புஜம் ஆழ்ந்த யோசனைக்குள்ளானாள். "அம்புஜம்! உன்னை ஒன்று கேட்கவேண்டு மென்றிருந்து மறந்துவிட்டேன்" என்றான்.

அ:—என்ன அது? என்று ஆததிரத்துடன் கேட்டாள்.

வா:—திரிச்சியில் உங்கள் கம்பெனியில் ஆண்வேடந்தரித்து அன்றிரவு ஆடின பெண்பிள்ளை அன்று நாடகம் முடியுமுன்னமேயே எங்கேயோ ஓடிவிட்டாளாமே. அது என்ன சமாச்சாரம்? திரிச்சியில் பலர் பலவிதமாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். இவ்வூரில் அதைப் பற்றி வேறுவிதமாகச் சொல்லுகிறார்கள். உனக்கு அதனுண்மை நன்கு தெரிந்திருக்க வேண்டுமே

அ:—திரிச்சியில் என்ன பேசிக் கொள்ளுகிறார்கள்? இங்கு அதைப்பற்றித் தாம் கேள்விப்பட்டதென்ன?

வா:—நீ ஏதேனும் சொல்லுவாயோ என்று உன்னை நான் கேட்டால் என்னையே திருப்பிக் கேட்கிறாய். இந்த விவகாரமெல்லாம், இதில் சம்பந்தப்படாத நமக்கெதற்கு? எவன் எக்கேடு கெட்டுப் போனாலும் நமக்காவதென்ன?

அ:—அவ்வாறன்று. தாம் கேள்விப்பட்டதைத் தயவுசெய்து சொல்லவேண்டும்.

வா:—அப்பெண் உன்னிடமிருந்த இரத்தினம் பிள்ளையை அழைத்துக்கொண்டு ஓடிவிட்டதாகத் திரிச்சியிற் பேசிக்கொண்டார்கள். ஆனால்—என,

அ:—ஆம் அதுதான் உண்மையான சமாச்சாரம்.

வா:—(தேகங்குலுங்க நகைத்து) இவ்வளவுதானா உன் சாமர்த்தியம். உன் கண்ணெதிரில் நடந்ததையே உன்னாற் கண்டுகொள்ள முடியவில்லையே. ஆமாம். நீ கொட்டகையிலிருந்திருப்பாய். வெளியில் நடந்தது உனக்கொன்றுந் தெரிந்திருக்காது பிறர் சொன்னதை நீயும் நம்பவேண்டியதுதானே. அம்புஜம்! நான் வந்த காரியத்தைக் கவனிக்காமல் வீண்காலம் போக்குகிறாயே!

அ:—நான் சொன்னது பொய்யென்றா கூறுகிறீர்கள்?

வா:—நீ என்ன சொன்னாய்? என;

அ:—அப்பெண் விஷயந்தான் என்று சொல்ல,

வா:—அது பிரமாதமாக முடியும்போலிருக்கிறது. அதைப்பற்றி நமக்கேன்?

அ:—தங்களுக்கு இதைப்பற்றிக் கவலையில்லையெனினும் நான் கொஞ்சம் சம்பந்தப்பட்டிருக்கிறேன் என்பதை மறந்து பேசுகிறீர்கள். எங்கள் கம்பெனியில் நடித்த பெண்ணுக்கு எங்

கள் கம்பெனியிலிருக்கும் பொழுதே ஏதேனுங் கெடுதலுண்டாகுமாயின் அது என்னையும் பாதிக்குமன்றோ !

வா:—ஆமாம். இன்னுமொரு விஷயம். அந்தப்பெண் இவ்வூரில் நாடகக் கொட்டகையில் நடித்ததைப் பார்த்திருக்கிறேன். அவள் உங்கள் கம்பெனிக்கு வந்த தெவ்விதம் ?

அ:—நான்தான் அவளை இங்கிருந்து அழைத்துப்போனேன். என் குடியைக்கெடுக்க அவள் தோன்றினாள்.

வா:—எனக்கு அதைப்பற்றிச் சந்தோஷமே. எப்பொழுது நீ எனக்குக் கிடைப்பாயோ என்று எதிர்பார்த்திருந்தேன். இனி நீ எனக்குச் சொந்தமாய் விடுவாயல்லவா ?

அ:—அதற்கென்ன உங்களிஷ்டம்போ லிருக்கலாம். ஆனால் நீர் சுயநலப் பிரியரென்று எனக்குத் தெரிகிறதேயன்றி என் நலத்தைக் கருதக் கூடியவராகத் தோன்றவில்லை.

வா:—அம்புஜம்! என்ன திடீரென்று அவ்விதஞ் சொல்லிவிட்டாய். என் உடல் பொருள் ஆவி மூன்றையும் உனக்குத் தத்தஞ் செய்யக் காத்துக்கொண் டிருக்கும்பொழுது என் மீது இத்தகைய அபிப்பிராயப்படுகிறாயே. உன் இஷ்டப்பிரகாரம் இவ்வூரிலேயே தங்குவதென்று மாதமொன்றுக்கு ஐம்பது ரூபாய் வீதம் ஒரு மெத்தை வீட்டைக் குடிக்கூலிக்குப் பேசியிருக்கிறேன். அவ்வீடு விலைக்குக் கிடைக்குமென்று என் நண்பர் சொன்னதால் உன்னுடைய இஷ்டத்தின் மேல் அதைச் செய்யலா மென்று எண்ணி யிருக்கிறேன். எவ்வித மிருப்பினும் அடுத்த சித்திரா பௌர்ணமி மகோத்சவம் வரைக்கும் இங்குத் தங்கவேண்டி யிருக்குமாதலால் அவ்வீட்டிற்கு ஒரு மாத வாடகையை அட்வான்சாகக் கொடுத்திருக்கிறேன். உனக்கிஷ்டமானால் அதை விலைக்கு வாங்குவதென்றும் இல்லாவிடில் உன்னை யழைத்துக்கொண்டு திரிச்சிக்குப் போவதென்றும் உத்தேசித்திருக்கிறேன்.

அ:—எனக்குச் சொந்தமான வீடிருக்கும் பொழுது வாடகை வீடெதற்கு? என்றுகேட்க;

வா:—உத்சவத்தின் பொழுது வருவார் போவார் அதிகமிருக்கக் கூடும். உன் வீடு சிறியதாக விருக்குமோ என்ற சந்தேகத்தால் அவ்விதஞ் செய்தேன். உனக்கிஷ்டமில்லாவிடில் இங்கேயே இருக்கலாம். ஐம்பது ரூபாய் போனாற்போகிறது. நான் சென்று வீடு தேவையில்லை யென்று சொல்லி விடுகிறேன். அம்புஜம்! நீ என்னை என்ன காரணத்தால் சுயநலப்பிரியனென்று சொன்னா யென்பதைத் தயவுசெய்து சொல்ல வேண்டும்.

அ:—காரணமில்லாமலன்று. எங்கள் கம்பெனியில் நடித்தபெண் காணமற்போனதைப் பற்றி என்ன பேசிக் கொள்ளுகிறார்களென்று நான் பன்முறை தங்களைக் கேட்டும், அதைச் சொல்லாமல் தங்கள் காரியத்திலேயே கண்ணாக விருக்கின்றீர்களே!

வா:—(சிரித்துக் கொண்டே) இதற்குத் தானா! நமக்குச் சம்பந்த மில்லாத விஷயத்தைப் பேசிக் காலத்தை ஏன் வீணாகக் கழிக்கவேண்டுமென்று பார்த்தேன் நீ அதைப்பற்றிச் சொல்லும்படி கட்டாயப் படுத்துவதால் அதை உனக்குத் தெரிவிப்பதில் எனக்கு யாதொரு தடையுமில்லை. உங்கள் கம்பெனியில் நடித்த பெண்பிள்ளை பெரிய குடும்பத்தைச் சார்ந்தவ ளென்றும், அவள் ஏதோ ஒரு காரியத்தை முன்னிட்டு நாடகத்திற் சேர்ந்தாளென்றும், அக்காரியத்தை முடிக்கவே திரிச்சிக்கு வந்தாளென்றும், அவள் நடித்த அன்றிரவு மதனகோபன் அங்குவந்து அவள் யாரென்பதை யறிந்து ஒரு பெண்ணின் உதவியால் அவளை எங்கேயோ தூக்கிக்கொண்டு போய் வைத்திருப்பதாகவும், அவ்வாறு தூக்கிச் செல்லும்பொழுது கண்ட உங்கள் எஜமான் அவளைக் காப்பாற்ற முயற்சி செய்ததின் நிமித்தம் அவனையும் தூக்கிக் கொண்டுபோய் ஓரிடத்தில் அடைத்து வைத்திருப்பதாகவும், நான் முன்னுரைத்த மாணிக்கம்பிள்ளையே இதையுஞ் சொன்னான்.

அ:—அவன் இன்னுமென்ன சொன்னான் ?

வா:—அவனுடைய நண்பனொருவனை இது விஷயமாக எவ்விடத்திற்கோ அனுப்பியிருப்பதாகவும், அவன் திரும்பி வந்தவுடன் போலீசாருக்குத் தெரிவித்து மதனகோபனையும் அவனுக்குதவி செய்த பெண்ணையும் தண்டனைக்குட்படுத்துவதாகவும் சொன்னான். உதவியாயிருந்த பெண் யாரென்று நான் கேட்டும் அவன் சொல்ல மறுத்துவிட்டான். இத் துன்மார்க்கன் மதனகோபன் தண்டிக்கப்பட்டால் பலர் சந்தோஷப் படுவார்கள். இவனால் பெண்ணொருத்தியு மன்றோ அநியாயமாகத் தண்டனை யடையவேண்டி யிருக்கிறது. அப்பெண் இன்னவள் என்பது தெரிந்தால் ஒருசமயம் அவளைக் காப்பாற்ற முயற்சி

கண்டாரு யிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப் பேதைக் கமர்த்தன கண்.

செய்யலாமென்று எண்ணினேன். ஆனால் அதை அவன் சொல்லவில்லை. அப்பெண் மதனகோபனின் தூண்டுதலால் ஏதேனுஞ் செய்திருப்பாளேயன்றி அவளாக இதிற் செய்யக்கூடியதும் செய்ய வேண்டியதுங் காணோம்'' என்று சொன்னான்.

அ:—இப்பொழுது தாம் சொன்னது மெய்யென்றேற்பட்டு மதனகோபனும் அவனுக்குத் துணையாயிருந்த பெண்ணும் பிடிபடுவார்களானால் துரைத்தனத்தார் அவர்களுக்கு எத்தகைய தண்டனையை விதிப்பார்கள் ?

வா:—ஒரு பெண்ணைப் பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டு போனதற்குப் பன்னிரண்டாண்டுகள் சிறையிலிருக்க வேண்டிவரும் பிறகு உங்கள் கம்பெனி எஜமானனைத் தூக்கிக்கொண்டு சென்ற குற்றம் வேறிருக்கிறது.

அ:—மதனகோபனுக்கு உதவிசெய்த பெண்ணைத் தாம் அறிந்தால் அவளைக் காப்பாற்றலாமென்று சொன்னீரே அது எவ்வாறு முடியும்?

வா:—என்ன அம்புஜம் இவ்விதங் கேட்கிறாய். கொலைக்கேசில் சம்பந்தப்பட்டவர்கள் தப்பித்துக்கொள்ளும்பொழுது இது ஒரு பிரமாத காரியமா ? மதனகோபனுக்கு இந்த விஷயத்தில் உதவியா யிருந்தவள் ஒரு தாசியாகவேயிருக்கவேண்டும். இவ்வூர்த் தாசிகளெல்லோரும் எவ்விதம் இவனுக்கு அடங்கி யிருக்கிறார்களென்பது எல்லோருக்குந் தெரியும். ஆகவே ஒரு கணிகைமாது அவனுடைய மனதிற்குச் சிறிதும் ஒவ்வாத காரியத்தை இவனுடைய தொந்திரவைப் பொறுக்க முடியாமலும், அவனுடைய வார்த்தைக்கு மறுத்துக்கூற வல்லமையில்லாமலும் இவன் சொல்லிற்கிணங்கிச் செய்திருக்கலாம். பிறகு மதனகோபனில்லாத சமயம் பார்த்து அவள் போலீஸ் சாவடிக்குச் சென்று அவனுடைய காரியச்சை விவரமாகத் தெரிவிப்பாளாயின் அவள் தன் குற்றத்திற்காக மன்னிக்கப்படுவது மாத்திரமன்றிப் பெரும் பரிசளிக்கப் படுவதுடன் புண்ணியமும் புகழும் அவளுக்குண்டாகும்.

அ:—அவள் அவ்விதஞ்சென்று சொன்னாலும் அவளுடைய வார்த்தையைப் போலீசார் நம்பவேண்டுமே அவர்கள் நம்பாமற் போனால் அவளுக்கு மதனகோபனால் எவ்வளவு கஷ்டமேற்படுமென்பதை நான் சொல்ல வேண்டியதில்லை.

வா:—நீ சொல்வது மெய்யே அவள் வார்த்தையை நம்பும்படி செய்வதற்கு ஒருவர் வேண்டும்.

அ:—அதைத்தான் தாம் செய்வதாகச் சொன்னீரோ ?

வா —ஆம், என்று சொல்ல—

அ:—தாங்கள் இதை எவ்வாறு செய்வீர்கள்? தாங்கள் இவ்வூராருமல்ல வென்கிறீரே. ஒரு சமயம் உமக்கும் இன்ஸ்பெக்டருக்கு முள்ள உறவால் தாம் இதைச் செய்வீரோ அல்லது வேறேதேனும் வழி யிருக்கிறதோ? என்று வினவினாள்.

வா:—உன் வினாக்களைக் கருதிப் பார்க்குமிடத்து மதனகோபனுக்குதவியாயிருந்த பெண் உனக்கு நன்றாகத் தெரியுமென்றாயினும், அல்லது அந்தப் பெண் நீயே யென்றாவதும் எண்ண இடந்தருகிறது என்று நகை முகத்துடன் கூறினான்.

அ:— அவ்வாறே வைத்துக்கொள்ளும். தாம் அதில் எவ்வாறு உதவி செய்யமுடியும்?

வா:—எவ்வாறு வைத்துக்கொள்வ தென்கிறாய்? நீதான் அந்தப் பெண்ணென்று எண்ணிக் கொள்வதா ?

அ: — அவ்வாறே வைத்துக்கொள்வது.

வா: — என்னைப் பரிகாசஞ் செய்கிறாய்போலிருக்கிறது. எனக்கு அப்பெண்ணைக் காப்பாற்றக்கூடிய வல்லமை யிருக்கிறதினால் அவ்வாறு சொன்னேனேயன்றி டம்பமாகக் கூறின வார்த்தையன்று

அ:—தம்மை ஏளனஞ் செய்வதாக நினைத்துக் கொள்ளக்கூடாது. மதனகோபனுக்குத் துணையாயிருந்தவள் நான்தான்.

வா:—மறுபடியும் என்னைப் பரிகாசஞ் செய்கிறாயென்றே நான் நினைக்கிறேன். காக்கை வெள்ளையா யிருக்கிறதென்று சொன்னாலும் நம்பிவிடுவேனேயன்றி நீ இக்காரியத்திற் சம்பந்தப்பட்டிருக்கிறா யென்பதை நானொருகாலும் நம்பமாட்டேன். தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம்செய்திருந்தவருக்குத் துரோகஞ்செய்து அவரை மதனகோபன் தூக்கிக் கொண்டு செல்வதை நீ பார்த்துச் சகிப்பாயா. அம்புஜம் ! என் இத்தகைய அபாண்டமான பொய்யை என்னிடங் கூறுகிறாய் ?

அ:—தாங்கள் நினைப்பதுபோல் அத்தகைய தூய்மைவாய்ந்தவளல்ல நான். என்னிடத்திற் பெரிதும் அன்புவைத்திருந்த துரைக்குத் துரோ

கச் செய்ததுமாத்திரமன்றி அவரைக் கட்டித் தூக்கிக் கொண்டுபோக உதவி செய்த பெரும் பாதகி நான்தான் என்று சொல்லித் தலை குனிந்து கண்ணீருதிர்த்தனள்.

வா:—அம்புஜம்! நீ சொல்வதுண்மைதானா?

அ—ஆம் நான் சொல்லப்போவதை முற்றுங் கேட்பீராயின் என்மீது பரிதாபங் கொள்ளுவீர்களேயன்றி வெறுப்படைய மாட்டீர் என்று விசனத்துடன் கூறினாள்

வா:—அம்புஜம்! நீ விசனப்படவேண்டாம் உன் மனதிற்கு மாறாகவே இக்காரியத்தைச் செய்திருக்கிறாயென்பது எனக்கு நன்றாக விளங்குகிறது. நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். உனக்கு எத்தகைய ஆபத்துவரினும் அதினின்று உன்னைக் காப்பாற்றுகிறேன். நடந்த விருத்தாந்தங்களை விபரமாகக் கூறு.

அ.—மதனகோபனுக்கு நாங்களெல்லோரும் அடிமைகளா யிருக்கிறோ மென்பதை மாத்திரம் தாம் கேள்விப்பட்டிருப்பீரேயன்றி அவன் எங்களை எவ்வாறு அடக்கிவைத்துத் துன்புறுத்துகிறானென்றும் உண்மையைத் தாமறியீர். அவனைச் சேர்ந்த துஷ்டர்கள் அநேகரிருக்கின்றனர். இவர்களிலொருவனுக்கேனும் தெரியாமல் தாசி வீட்டுக்கு எவரும் வரமுடியாது எவ்வளவு இரகசியமாக வந்தாலும் எவ்விதமோ தெரிந்து கொள்ளுகிறார்கள். எங்களுக்கு வரும் வரும்படியில் நான்கில் மூன்று பாகம் அவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். இதற்கு மாறாக எவளேனும் நடப்பாளாயின் அவள் பட்டினி கிடந்து இறக்க வேண்டியதுதான். வரும்படியில்லாத சமயங்களில் இவர்கள் எங்களுக்குப் பணங்கொடுத்தும் உதவி செய்கிறார்கள். இப்பொழுது மதனகோபனுக்கும் எங்களுக்குமுள்ள சம்பந்தம் தமக்கு நன்றாக விளங்கி யிருக்குமென்று நினைக்கிறேன். இவனிடமிருந்து தப்பக்கூடிய தாசி இவ்வூரில் எவளுமில்லை ஆகவே நானும் அவனுக்கு அடிமைதான் என்பதை நான் தங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. இம் மதனகோபனுக்குத் தன் அத்தை மகளான இரஞ்சித மென்பவளைக் கலியாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்னும் விருப்பம். ஆனால் அவளுடைய மனமெல்லாம் தன் அத்தை மகனை இரத்தினமென்பவர் பேரிலிருந்தது. இதையறிந்த மதனகோபன், சற்புத்திரனான இரத்தினத்தைக் கெடுத்துத் தன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றக் கருதி என்னைத் தூண்டிவிட்டான் என்று சொல்லி தான் இரத்தினத்தைக் கொட்டகையிற் சந்தித்ததும், கொட்டகையில் நெருப்புப் பிடித்ததும், தன்னை அவன் அழைத்துச்சென்றதும், அவன் தன் வீடு சேர்ந்ததும், அவனுடைய சொத்துக்கள் விரயமானதும், திரிச்சியில் நாடகக் கம்பெனி வைத்ததும், இரத்தினமணியைத் தான் அழைத்துச் சென்றதும், அச்சமயம் அங்கு வந்த மதனகோபனால் இரத்தினமணிதான் இரஞ்சிதமென்று தெரிந்ததும், பிறகு இரத்தினத்தையும் இரஞ்சிதத்தையும் தூக்கிக் கொண்டு சென்றதுமான விஷயங்களை ஆதியோடந்தம் விபரமாகக் கூறி, இராமனாதபுரத்திலிருக்கும் எனக்குச் சொந்தமான வீட்டில் இரஞ்சிதத்தைக் கொண்டுபோய் வைத்திருக்கிறான். இரத்தினத்தை இவ்வீட்டில் இரண்டு நாட்கள் அடைத்து வைத்திருந்து பிறகு மதன கோபனின் உத்தரவின் பேரில், மதன கோபன் வீட்டிலேயே அவரைக் கொண்டு போய் வைத்திருக்கிறார்கள். மதனகோபனின் வஞ்சகத்தை யறிந்ததினாலோ, அல்லது இரஞ்சிதத்தின்மீதுண்டான காதற் பெருக்கினாலோ, அன்றி வேறெக்காரணத்தினாலோ இரத்தினத்திற்குப் பைத்தியம் பிடித்திருப்பதாகவும், 'இரஞ்சிதம்' என்னும் சொல்லைத் தவிர வேறெவ்விதமான வார்த்தையும் பேசாமலும், சரியான ஆகாரமின்றி உடல் மெலிந்து கிடப்பதாகவும் கேள்வி. ஐயா! இதுதான் விஷயம். பிறரெவருக்குந் தெரியாத இரகசியங்களை, மதனகோபனிடமிருந்து விலகவேண்டுமென்னும் பேரவாவால் தூண்டப்பட்டுத் தங்களிடம் நம்பிக்கை வைத்துச் சொல்லிவிட்டேன். இனி என் உயிர் தங்களுடைய கையிலிருக்கிறது. மதனகோபனுக்கு இதுசங்கதி தெரியுமானால் அந்தக்ஷணமே நான் உயிரையிழக்க வேண்டியதென்பது திண்ணம். தாம் எவ்விதம் விட்டாலுஞ் சம்மதமே என்று சொல்லி வருந்தினாள்.

வா.—என் விஷயத்தில் நீ யாதொருவிதமான சந்தேகத்தையுங் கொள்ள வேண்டியதில்லை. இனி நீ அதிக நாட்கள் மதனகோபனுக்கு அடிமையாக இருக்கவேண்டிய நிமித்தமிராதென்று உறுதியாகச் சொல்லுவேன் உனக்கு யாதொரு கெடுதலும் வராமற் பார்த்துக்கொள்ளுகிறேன். எவ்வகையினும் நீ கவலைகொள்ள வேண்டிய

தில்லை நான் இப்பொழுதே சென்று வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வருகிறேன். சிறிது தாமதமானாலும் நீ வருத்தப்படக்கூடாது. எனக்கொரு சந்தேகம். நானிங்கு வந்தது மதனகோபனுக்குத் தெரிந்திருக்குமென்று நினைக்கிறாயோ?

அ:—தற்சமயம் மதனகோபன் இராமனதபுரத்திலிருக்கிறான். அவனில்லாத சமயத்தில் அவனைச் சேர்ந்தோர் எதையுந் துணிந்துசெய்ய மாட்டார்கள். மேலும், அவர்களுடைய வழக்கப் பிரகாரம் இதுவரையில் இங்கு எவரும் வராததால் தாம் அவர்களுடைய கண்களுக்கு அகப்படவில்லையென்றே நினைக்கிறேன் தாங்கள் சென்று திரும்பி வரும்பொழுது கொஞ்சம் சாக்கிரதையாக வருவது நலம்.

வா:—இடையில் எவரேனும் இங்கு வந்திருந்தால் நான் அதை எவ்வாறு தெரிந்து கொள்வது?

அ:—ஆமாம் அதையுங் கவனிக்க வேண்டும். வெளியில் வைத்திருக்கும் விளக்கு அணைக்கப்பட்டிருந்தால் தாம் திரும்பிச் சென்று நாளைய தினம் காலையில்தான் இங்கு வரவேண்டியது. தாங்கள் செய்யப்போகும் காரியம் இன்னதென்பதைத் தெரிவித்தால் என்மனம் கொஞ்சம் சமாதான மடையுமென நினைக்கிறேன்.

வா:—காரியம் மிஞ்சிப் போயிருப்பதால் எதையும் சாக்கிரதையாகச் செய்ய வேண்டியிருக்கிறது. உன்னைக் காப்பாற்றுவதுதான் என் முழுநோக்கம். திரும்பிவந்து எல்லாவற்றையும் விவரமாகக் கூறுகிறேன் என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு நீங்கினான்.

அவ்வாறு நம்வாலிபன் அம்புஜத்திடம் விடைபெற்றுக்கொண்டு வெளியில் வரும்பொழுது சுமார் ஒன்பது மணியிருக்கும். இருண்ட ஆகாயத்திலிருந்து மழை தூறிக்கொண்டிருந்தது. தூர தூரமாக வைக்கப்பட்டிருந்த முனிஸிபாலிடி விளக்குகள் சரியாகத் தூண்டப்படாமல் மங்கலாக மினுக்மினுக்கென்று எரிந்துகொண்டிருந்தது. நம் வாலிபன் மழைத் தூற்றல்களுக்கஞ்சி அங்குத் தங்குவது சரியல்ல வென்றெண்ணி விரைவாக நடந்து சென்றான். எனினும் மழை பலமாகப் பெய்ய வாரம்பிக்க அத்தெருவின் கோடியிலுள்ள ஒரு வீட்டின் திண்ணையிற் சற்று தங்கிச் செல்லலாமென்ற உத்தேசத்துடன் அங்குப்போ யுட்கார்ந்தான். அவன் அங்குவந்த மறுநிமிடம் இருவர், வாலிபனுட்கார்ந்திருந்த திண்ணைக்கு எதிர்ப்புறமாயுள்ள திண்ணையில் மழைக்காக ஒதுங்கிப் பின்வருமாறு வார்த்தை யாடிக்கொண்டிருந்தனர்.

அவர்களில் ஒருவன்:—இவ்வளவு வேகமாகத் தாம் எங்குச் சென்றுகொண் டிருந்தீர் என்று கேட்டான்.

அ-மற்றவன்:—தாம் ஒரு சமயம் வந்திருப்பீரோ என்ற எண்ணத்தால் அம்புஜத்தின் வீட்டிற்குப் போனேன். தாங்கள் அங்கு வரவில்லையென்பதையும் ஆனால் ஒரு அந்நியன் வீட்டிற்குள்ளிருக்குஞ் சங்கதியையுந்தெரிந்து, வேட்டை கிடைத் திருக்கிறதென வெண்ணி மாணிக்கம் பிள்ளைக்குச் சமாச்சாரத்தைத் தெரிவிக்கலாமென்ற உத்தேசத்துடன் வரும்பொழுது தங்களைச் சந்தித்தேன். இஃதிருக்கட்டும். தங்களுடைய முகம் எனக்குப் புலனாகவில்லை யெனினும், தங்களின் தளர்ந்த நடையையும், உற்சாகங்குன்றின வார்த்தைகளையுங் கருதுமிடத்துத் தமக்கு ஏதோ வியாகூல மேற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. தாம் மதனகோப பிள்ளையா அல்லவா வெனச் சந்தேகிக்கவேண்டியு மிருக்கிறது என்றான்.

மத:—கோபால பிள்ளை! தாம் அவ்வாறு சந்தேகிப்பது ஆச்சரியமல்ல. வெளிச்சத்தில் என்னுடைய முகத்தைப் பார்த்தால் இன்னும் உமக்குச் சந்தேகம் அதிகரிக்கும். மதனகோபன் ஒரு பெண் விஷயத்தில் தோல்வியடைந்தான் என்று சொன்னால் தாம் நம்புவீரா?

கோபால பிள்ளை:—சூரியன் மேற்கே உதித்தானென்று சொன்னாலும் நம்புவேனே யன்றி மதனகோப பிள்ளையை ஒரு பெண் ஏமாற்றி விட்டா ளென்றால் சிறிதும் நம்பமாட்டேன்.

மத:-எனினும் தாம் உண்மையையே கூறினீர். அச்சிறுக்கி என்னை ஏமாற்றி ஓடிவிட்டாள்.

கோ:—தாம் யாரைக்குறித்துப் பேசுகின்றீர்? இரஞ்சிதமா ஓடிவிட்டாளென்று சொல்லுகிறீர்? என்று வியப்புடன் கேட்டான்.

மத:—ஆம்! அவளுக்குச் சாப்பாடு கொண்டு வந்த மங்கம்மாளைக் கட்டி உருட்டி வாயில் துணியை வைத்தடைத்து விட்டு ஒருவருக்குந் தெரியாமல் ஓடிப்போனாள்.

கோ:—அந்தத் தடியர்களிருவ ரிருந்தும் எவ்விதம் விட்டார்கள்? இதில் ஏதோ சூது நடந்திருக்கு மென்று நினைக்கிறேன்

மத:—அவ்விதஞ் சந்தேசிக்க இடமில்லை. அவள் அவ்வளவு சாமர்த்தியமாகத் தன் காரியத்தைச் செய்து விட்டாள். விஷயங்களும் அவளுக்கு அனுகூலமாக விருந்தன என்று சொல்லி நடந்தவற்றை விவரமாகக் கூறி, மறுநாட்காலையில் வீட்டிற் கெதிர்புறமுள்ள செடி மறைவில் வைக்கப்பட்டிருந்த பாத்திரங்களைக் கண்டு சந்தேகமுண்டாகிப் பார்த்தபிறகுதான் அவள் ஓடிவிட்ட சங்கதி தெரிந்தது.

கோ:— அந்தத் தடியன்களுக்கு அவ்வளவு வெறியா? அவர்களைச் சும்மா விடக்கூடாது. மறபடி என்ன செய்தீர்கள்? எங்கேனுந் தேடிப் பார்த்தீர்களா?'

மத:—என்னாலியன்றவரைக்கும் பல விடங்களுக்கு ஆட்களையனுப்பித் தேடும்படி செய்தேன். பயனற்றதாய்ப் போயிற்று எனக்கும்இக்காரியத்தில்ஏனோதலையிட்டோ மென்றிருக்கிறது. இஷ்டமில்லாத பெண்ணை வற்புறுத்தி அவளுக்கு வீண் கஷ்டத்தைக் கொடுத்ததைப்பற்றி நான் மிகவும் விசனப்படுகிறேன்.

கோ:— மதனகோபபிள்ளையின் வாயிலிருந்தா இத்தகைய வார்த்தைகள் வருகின்றன! இவ்வளவு தூரஞ் செய்தபின் சும்மாவிட்டால் அது நமக்குக் கேவலமல்லவா. இரத்தினத்திற்கோ பைத்தியம் பிடித்துவிட்டது. அவனுடைய தேக நிலைமையைப்பார்த்தால் அதிக நாட்களுக்கு உயிருடனிருப்பானென்றுஎண்ணுவதற்கில்லை இரஞ்சிதம் எங்குச் சென்றிருந்தாலும் இங்குத்திரும்பி வர வேண்டியவள்தானே. பிறகு அவளுக்குத் தங்களைத்தவிரவேறுயாரிருக்கிறார்கள். அவளைத்தாம் அடையவேண்டுமென்னும் நோக்கத்துடன் இவ்வளவு காரியங்களையெல்லாஞ் செய்தும் தமக்கு அனுகூலமாக முடியப்போகுஞ் சமயம் கோழைத்தனப்பட்டு மனங்கலங்கி நின்றுவிடுவது நகைப்பிற் கிடமுண்டாகும். ஒருகாரியத்தை யாரம்பித்தோம். முடித்தோ மென்று இதுகாறு மிருந்ததற்கு விரோதமாகத் தோல்வியடைந்தோ மென்றால் அதைவிடக் கேவலமானது வெறொன்றுமில்லை. இவ்விஷயம் வெளியில் வருமானல் நம் பிழைப்பிற்கே திண்டாட்ட மாகிவிடும். பிறகு தம்முடைய இஷ்டம் என்று சொன்னான்

மத:—தாம் சொல்வதும் உண்மையே எனினும் இப்பொழுது என் மனோநிலைமை சற்று மாறுபட்டிருக்கிறது. என் மனதிலுள்ளதைச் சொல்லுகிறேன். இரஞ்சிதத்தை இனித் தேடிப் பிடிப்பதென்பது முடியாத காரியம். திரும்பி வந்தபொழுதுங்கூட அவளைக் கட்டாயப் படுத்தக்கூடாது. அதுவரையும் இரத்தினம் நம் வீட்டிலேயே இருக்கவேண்டியது. அவள் இஷ்டப்பட்டால் விவாகஞ் செய்துகொள்வது. இல்லாவிடில் வேண்டாம். இரத்தினத்தை அவளிடம் ஒப்பித்துவிடுவோம்.

கோ:—ஆகவே கலியாணம் வேண்டுவதில்லையென்று தீர்மானித்துவிட்டீரா?

மத:— அவ்விதமல்ல. இரஞ்சிதம் இஷ்டப்பட்டால் அவளை விவாகஞ் செய்துகொள்வது. மறுப்பாளாயின் திரிச்சியிலிருக்கும் சோமசுந்தரம் பிள்ளையின் குமாரத்தி இரதிதேவியை எவ்விதமேனும் மணம்புரிந்து கொள்வது.

கோ:—நாம் அன்று தங்கியிருந்தோமே அந்த வீட்டுப்பெண்ணைச் சொல்லுகின்றீர்களோ. அவளும் ரூபவதியே. மேலும், அன்று நான் பார்த்த பொழுது இரஞ்சிதந்தானோ அவள் என்று சந்தேகித்தேன் இருவரும் ஒரே மாதிரியாக இருக்கிறார்கள். தாம் சொன்னபிறகுதான் என் சந்தேகந்தீர்ந்தது.ஆதலின் தாம் அப்பெண்மீதுகாதல் கொண்டிருப்பது ஆச்சரியமன்று. எனினும் தாம் அவ்வளவு தூரம்போகவேண்டியிராதென நினைக்கிறேன். இரஞ்சிதத்தையே தாம் மணப்பீரென்று உறுதியாகச்சொல்வேன். அவள் திரும்பி வரும்வரையும் இரத்தினம் உயிருடனிருப்பானென்று எண்ணுவதற்கில்லை.

மத:—தெய்வ சங்கற்ப மெவ்விதமோ. அதை யாராலறிய முடியும். நிற்க, நம் சுப்பனுடைய சமாச்சாரமென்ன?

கோ:—அவன் படுகிடையாய்க் கிடக்கிறான். வேறொரு நம்பிக்கையான ஆளை யமர்த்துவது அத்தியாவசியகமா யிருக்கிறது. தங்களைக் கேட்டுச் செய்யலா மென்றிருக்கிறேன்.

மத:—நாளையதினம் எவனேனு மொருவனை யமர்த்துவோம் மழை நின்றுவிட்டதுபோ லிருக்கிறது. புறப்படுவோம்.

கோ:—எங்குச் செல்லலா மென்கின்றீர்?

மத:—ஏதேனுமொரு தனியிடத்திற்குப் போனால் நிம்மதியாயிருக்கு மென்று நினைக்கிறேன். தாம் என்ன சொல்லுகிறீர்!

கோ:—ஏது, இரத்தினத்திற்குப் பிடித்திருக்கும் இரஞ்சிதத்தின் பைத்தியம் தங்களையும் பற்றிவிடும்போ லிருக்கிறதே. இவ்வாறு மனச்சோர்வுபடுவது சுத்த மூடத்தனம். எழுந்திரும்

போவோம் என்று சொல்லி, மதனகோபனின் கையைப் பிடித்திழுத்துக்கொண்டு அம்புஜத்தின் வீட்டை நோக்கி நடந்தான்.

இவர்களுடைய சம்பாஷணை முழுவதையுங் கேட்டுக்கொண்டிருந்த நம் வாலிபன் அவர்கள் எங்குச் செல்லுகிறார்களென்பதை அவர்களுக்குத் தெரியாமற் பின்சென்று கவனித்துக்கொண்டு பெருமூச்செறிந்து ஆகவே நானும் நல்ல சமயத்தில்தான் அம்புஜத்தின் வீட்டைவிட்டுக் கிளம்பினேன். இல்லாவிடில் இவ்விஷயங்கள் எனக்குத்தெரியாமற் போவாது மாத்திரமன்றி இத்துஷ்டர்கள் கையிலும் அகப்பட்டுக்கொண்டிருப்பேன். என் எண்ணம் பலிதமாகாமல் போவதன்றி மற்றவர்களுக்குங் கெடுதலுண்டாகக்கூடும். நான் நினைத்ததுபோல் மதனகோபன் அவ்வளவு துர்க்குண முடையவனாகக் காணப்படவில்லை. இயற்கையில் சற்புத்திரன்போலவே விளங்குகிறான். சகவாச தோஷத்தாற் கெட்டு நிற்கிறான். இனி நான்காலதாமதஞ் செய்யக்கூடாது. என் எண்ணங் கைகூடுமென்றே நம்புகிறேன். இன்று மழை வந்தது கடவுள் எனக்குத் துணை செய்கிறாரென்பதற்கு அறிகுறியா யிருக்கிறது. இரஞ்சிதம் எங்குச் சென்றிருப்பாள்? என்று சிந்தித்துக் கொண்டே தன் இருப்பிடத்தை நோக்கிச் சென்றான். இடைநடுவில் தோன்றின இவ்வாலிபன் யார்? இவனுடைய எண்ணம் என்ன?

பன்னிரண்டாம் அத்தியாயம்

போக்கிஷத்தின் அதிசயம்

முன்னொரு அத்தியாயத்திற் குறிப்பிக்கப் பட்டிருக்குந் தீவில் ஏகாந்த வாசஞ் செய்யும் பெரியவர் ஒருநாட் சாயங்காலம் வழக்கம்போல் கடற்கரையோரத்தில் மணல்மேற் படுத்த வண்ணமாய்த் தலையைத் தன் கையில் தாங்கிக்கொண்டு சமுத்திர அலைகள் ஒன்றன்பின்னொன்றாகக் கிளம்பி வந்து மோதும் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது வானம் கொசகும் மப்பும் மந்தாரமுமாக விருந்தது. காற்றும் மும்முறமாக அடித்துக்கொண்டிருந்தது. ஆழியின் அமைப்பைக் கண்டானந்தித்துக் கொண்டிருந்த பெரியவர் சட்டென்றெழுந்துட்கார்ந்தார். பிறகு துள்ளிக் குதித்தெழுந்து நின்றார். அவர் முகத்தில் அநேக நாட்களாகக் கண்டறியாத ஒருவிதமான சந்தோஷக்குறி தோன்றிற்று அவருடைய பார்வையெல்லாம் சமுத்திரத்தினிடையில் வெகுதூரத்திற் காணப்படும் ஒரு கறுமையான வஸ்துவின் மீதிருந்தது. "ஆச்சரியம்! ஆச்சரியம்!! வியந்து புகழக்கூடிய விஷயமே இது! எனத் தனக்குத் தானே கூறினவுடன் அவருடைய முகத்திலுண்டான சந்தோஷக் குறியும் ஆச்சரியக் குறியும் திடீரென மறைந்து ஒருவிதமான பயங்கரத் தோற்றம் அவர் முகத்திற் காணப்பட்டது. "ஈசா! நான் சென்று உதவி செய்யும் வரையில் அப்பெண்ணிற்குப் போதிய தைரியத்தைக் கொடுத்துக் காப்பாற்றவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு இரண்டு மூன்று மரத்துண்டுகளை யொன்றாகச் சேர்த்துப் பிணைக்கப்பட்டிருந்த ஒரு கட்டுமரத்தைக் கடலிற் றள்ளி அதின் மீதேறிக்கொண்டு சென்றார்.

இப்பெரியவரின் இத்தகைய ஆச்சரிய செய்கைகட்குக் காரணமா யிருந்ததென்னவென்று பார்க்கும்பொழுது கடலின் மத்தியில் சுமார் ஒரு மைல் தூரத்திற் கப்பால் புலனாகும் ஒரு சிறு கப்பலே என்பது விளங்கும். ஆனால் இவருக்குண்டான அச்சத்திற்குக் காரணமின்னதென்பது இப்பொழுது விளங்கவில்லை. ஆதலின் தற்சமயம் நம் பெரியவர் என்ன செய்கிறார் என்பதைக் கவனிப்போம். மிகவும் சாமர்த்தியமாகவும் துரிதமாகவும் தன் கட்டுமரத்தைச் செலுத்திச்சென்ற பெரியவர், கப்பலண்டை போனதும் ஏதோ ஒன்றைக் கையிற்பற்றிக் கப்பலின் மீதேறி மறைகிறார். கொஞ்சநேரம் அவருடைய உருவம் நமக்குப் புலனாவதில்லை. பிறகு அவர் சுக்காணைத் தானே பிடித்துக் கப்பலை நடத்திக்கொண்டு வருவது போல் காணப்படுகிறது. ஆம், உண்மையில் அவரே கப்பலைச் செலுத்திக்கொண்டு வருகிறார். அவருடைய சாமர்த்தியத்தாலும் வாயுபகவானின் உதவியாலும் கப்பல் அதிவிரைவாகக் கரையை நோக்கி வருகின்றது. நம்பெரியவரைத் தவிரக் கப்பலில் வேறொருவரும் காணப்படவில்லை. சீக்கிரத்திற் கப்பலும் நங்கூரம்போட்டு நின்றது. உயிருடனிருக்கிறாளோ அன்றி இறந்துவிட்டாளோ என்று சந்தேகிக்கக் கூடிய ஒரு பெண்ணை அபாயகாலத்தில் உதவுவதற்காகக் கட்டப்பட்டிருந்த படகொன்றில் படுக்க வைத்துக் கீழேவிட்டுத் தானும் அதிலேறிக்

பிணையேர் மடநோக்கு நாணு முடையாட் கணியெவனோ வேதில தந்து.

கொண்டு கரையோரம் வந்ததும் பெரியவர் கீழே யிறங்கிப் படகை இழுத்துக் கரையின் மீது விட்டுவிட்டுக் குழந்தையைப்போல் அப்பெண்ணைத் தூக்கிக்கொண்டு தன் குகைக்குச் சென்றார்.

பெரியவர் தன்னாலியன்ற வரைக்கும் வேண்டின சிகிச்சைகள் செய்தும் அப்பெண் மூர்ச்சையினின்றுந் தெளிந்தாளில்லை. சுரத்தாற் பீடிக்கப்பட்டு நான்கு நாட்கள்வரை சித்த சுவாதீனமற்றுக்கிடந்தாள். பிறகு சுரங்குறைந்து கண்களைத் திறந்து மிரள மிரளப் பார்த்தாள். எழுந்திருக்க முயன்றாள்; முடியவில்லை. ஏதோ பேச வாயைத் திறந்தாள்; இயலவில்லை. கண்களை மூடிப்படுத்துக் கொண்டாள். ஐந்தாம் நாட் காலை சுரம் முற்றிலும் நீங்கிப் படுக்கையை விட்டெழுந் துட்கார்ந்தாள் தன்னருகிலிருந்த பெரியவரைப் பார்த்து மிக்க விநயமாக "ஐயா! தாங்கள் எனக்குச் செய்துள்ள உதவியின் பூரண தன்மையையும் என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை யெனினும் என்னைப் பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றியிருக்கிறீர்க ளென்பது மாத்திரம் என் மனதிற்குப் புலப்படுகிறது. ஆனால் அது எத்தகையதென்பது எனக்கு விளங்கவில்லை. எனினும் என் உயிரைக் காப்பாற்றி யிருக்கிறீர்களென்று என் மனதில் ஏதோ ஒன்று கூறுகிறது. அதற்காக வேண்டித் தங்களைப் போற்றுகிறதா; அன்றித் தூற்றுகிறதா என்ற சந்தேகமும் எனக்குண்டாகிறது. ஏனெனில் எனக்கு இவ்வுலக வாழ்க்கையில் அவ்வளவு வெறுப்புண்டாகி யிருக்கிறது எனவுரைத்தாள்.

பெரியவர்:—"அம்மா! இன்னுங் கொஞ்ச நேரம் நீ பேசாம லிருந்தால் நல்லதென்று நினைக்கிறேன். உன் புத்தி மிகவும் சலனமுற்றிருக்கிறது. கஞ்சி வைத்திருக்கிறேன். அதிற் கொஞ்சங் குடித்துச் சற்றுநேரம் அயர்ந்து நித்திரை செய்தால் உன் புத்தி ஒரு நிலைக்கு வருமென்று நினைக்கிறேன்" என்று சொல்லிக் கஞ்சியைக் கொடுக்க மறுவார்த்தையாடாமல் அப்பெண்ணும் அதை வாங்கிக் குடித்தாள்

பெண்:—ஐயா! இவ்விடத்தைப் பார்த்தால் ஒரு குகைபோ லிருக்கிறது. தங்களைப் பார்த்தாலும் முற்றுந் துறந்த துறவிபோற் காணப்படுகின்றீர். நாம் இப்பொழுது எங்கிருக்கிறோம்? இது எந்தவூர்? உண்மையில் இது ஒரு குகைதானா; அல்லது என் கண்களுக்குத்தான் அவ்விதம் தோன்றுகிறதா? தங்களுக்குப் பெண்டு பிள்ளைக ளிருக்கின்றார்களா?

பெரி:—அம்மா! நீ சற்றுநேரம் தூங்கினால் நல்லதென்று நினைக்கிறேன். நானும் சென்று அதற்குட் சமைத்து வைக்கிறேன். இருவரும் சாப்பிட்டபின் உன்னுடைய வினாக்களுக்குத் தக்கவிடையளிக்கிறேன்.

பெ:—என்ன! தாங்கள் சமைக்கிறீர்களா! நான் இப்பொழுது படுத்தாலும் தூக்கம் வராது. தயவுசெய்து என்னை மன்னித்து என் சந்தேகங்களை நிவர்த்திக்க வேண்டுகிறேன். என்னுடைய நலத்தைக்கோரும் தங்களுடைய வார்த்தையைக் கடந்து நடப்பதாக நினைத்து விடக்கூடாது.

பெரி:—சரி; உன் இஷ்டப்பிரகாரமே செய்கிறேன். இப்பொழுது உனக்கு நான் என்ன சொல்லவேண்டு மென்கிறாய்?

பெண்:— இப்பொழுது நான் எங்கிருக்கிறேனென்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

பெரி:—குழந்தாய்! பயப்படாமற் கேள். நாற்புறமும் சமுத்திரத்தாற் சூழப்பட்டதும் நிர்மானுஷ்யமானதுமான ஒரு தீவிலிருக்கிறாய். என்னையும் உன்னையுந் தவிர இத்தீவில் வேறெவருமில்லை.

இதைச் செவியுற்ற மங்கை சற்றுநேரம் மௌனமாகவிருந்து பின்பு திடுக்குற்றுப் பெரியவரை ஏற இறங்கப் பார்த்துவிட்டு மெதுவாக எழுந்து நின்று "ஆம், இப்பொழுது எனக்கு எல்லாம் விளங்குகின்றன. தாம் யார்? என்னை எதற்காக இங்குக் கொண்டுவந்து வைத்திருக்கிறீர்? என்று ஆத்திரத்துடன் கேட்டாள்

பெரி:—குழந்தாய்! இதை யுத்தேசித்துத்தான் உன்னைச் சற்றுநேரம் படுத்துறங்கும்படி சொன்னேன். நீ ஏதோ கள்வர்கையிலகப்பட்டுத் தப்பி வந்திருக்கிறாய்போ லிருக்கிறது. என்னையும் அத்திருடர் கூட்டத்தைச் சேர்ந்தவனென்று சந்தேகிக்கிறாய். அது தவறு. நான் கள்ளனன்று. ஏதோ காலவித்தியாசத்தாற் சிறிது காலமாக இங்கு வசித்துவருகிறேன். உனக்கு நன்மை செய்யக்கூடியவனே யன்றிக் கெடுதலைக் கனவிலும் நினைக்க வல்லவன் அல்லன். என் விஷயத்திற் சந்தேகங் கொண்டதைப்பற்றிப் பின்னால் நீயே வருத்தப்படுவாய். என் வார்த்தையை நம்பு. நான் திருடனன்று.

கண்ணிமைக்காமற் பெரியவரைப் பார்த்துக்

கொண்டு நின்றிருந்த வனிதை, "தாம் சொல்வது உண்மைதானா? தாங்கள் திருடர் கூட்டத்தைச் சேர்ந்தவரல்லவா?" என்று கேட்டாள்.

பெரி:—இன்னும் நீ சந்தேகிக்கிறாயா? எல்லாம் வல்ல ஈசனின் பாத சாட்சியாக நான் கொள்ளைக்கார னன்று. இப்பொழுதேனும் என்னை நம்புகிறாயா?

பெ:—(கை குவித்து) ஐயா! என்னை மன்னிக்க வேண்டும். தங்களைச் சந்தேகித்ததில் நான் பெரிய அபசாரத்தைச் செய்ததாகவே என் மனதிற்குப் படுகிறது; இப்போதுதான் என் உண்மையான நிலைமை எனக்கு விளங்குகிறது. நான் தங்களுக்கு எவ்வளவுதூரம் கடமைப்பட்டிருக்கிறேனென்பதும் இப்போது தான் நன்கு புலப்படுகின்றது. என் குற்றத்தைப் பொறுத்தருளி என்னைத் தாங்கள் எவ்விடத்தில் எந்நிலைமையிற் கண்டெடுத்து வந்தீர்களென்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன் என்று சொல்லியுட்கார்ந்தாள்.

பெரி:—அம்மா! தெரிவிக்கிறேன் கேள். காலப்போக்கின் நிமித்தம் மரக்கட்டைகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டிக் கட்டுமரம் ஒன்றுண்டாக்கிக்கொண்டு தினந்தோறுஞ் சாயங்கால நேரத்தில் இத்தீவை ஒருமுறை சுற்றிவருவதுண்டு. வழக்கப் பிரகாரம் இன்றும் கட்டுமரத்தி லேறிக்கொண்டு கொஞ்சதூரம் சமுத்திரத்தில் வேடிக்கையாகச் சென்று வந்து கடற்கரையோரத்திற் படுத்துக்கொண் டிருந்தேன். அச்சமயம் சமுத்திரத்தினிடையில் கொஞ்ச தூரத்தில் கறுத்துச் சிறுத்த ஒரு வஸ்து என் கண்களுக்குப் புலப்பட்டது. சற்று நேரத்தில் அச்சிறிய உருவம் பெருத்துக் காணப்பட்டது. நான் கப்பற் பிரயாணங்கள் பல செய்திருக்கிறேனாதலின் அவ்வாறு தோன்றின உருவம் ஒரு கப்பலே என்பதை உடனே தெரிந்துகொண்டேன். பிறகு எழுந்து நின்று பார்த்த பொழுது அக்கப்பல் இத்தீவின் திக்கை நோக்கிவருகிற தென்பதை யுணர்ந்து அடங்கா மகிழ்ச்சி கொண்டேன். அதன் காரணம் என் சரித்திரத்தைச் சொல்லும்பொழுது உனக்கு விளங்கும். பிறகு கொஞ்ச நேரத்திற்குள் அக்கப்பலின் அமைப்பும் அதிலிருந்த வஸ்துக்களும் என் வழக்கப்பட்ட கண்களுக்குத் தெளிவாகத் தோன்றின. ஒரு பெண் தனியாகச் சுக்கானைப் பிடித்துக் கப்பலைச் செலுத்துவதைக் கண்ணுற்றுப் பெரிதும் ஆச்சரியமடைந்தேன். மிகு சாமர்த்தியமாகப் பிடித்திருந்த அப்பெண்ணின் கை சோர்வடைந்து சுக்கானை விட்டு விடும்போ லிருந்தது. அவ்விதம் நேருமானால் காற்றால் கப்பல் உதைப்பட்டுச் சற்று தூரம் கிழக்கே சென்றால் அங்குள்ள பாறையில் மோதப்பட்டுக் கப்பலுடைந்து விடுமே என்ற எண்ணம் என் மனதில் தோன்றத் திகிலையும் பயத்தையுங் கொண்டேன். அப்பெண்ணுக்குத் துணையாக வேறெவரும் கப்பலி லிலர்போலும் என்று நினைத்து ஆலசியஞ் செய்யாமல் என் கட்டுமரத்திலேறிக்கொண்டு கப்பலை நோக்கிச் சென்றேன். கப்பலருகிற் போனபொழுது சுக்கானைப் பிடித்திருந்த பெண் காணப்படவில்லை. கப்பல் மாத்திரம் காற்றின் துணையால் வந்துகொண்டிருந்தது. மிகுதியும் அச்சங்கொண்டு என் கட்டுமரத்தை விட்டுக்கப்பலில் ஏறிப்பார்த்தபொழுது சுக்கானுக்கருகில் மூர்ச்சையுற்றுக் கிடந்த உன்னைக் கண்டு ஒருவாறு என்மனம் தேறுதலடைந்தது; உடனே கப்பலோட்டுந்தொழிலை நான்மேற்கொண்டு கப்பலைச் செலுத்திவந்து ஓரிடத்தில் விட்டு உன்னை எடுத்துப் படகிற் படுக்கவைத்து நானும்ஏறிக்கொண்டு கரைவந்து சேர்ந்தபொழுதும் நீ மூர்ச்சை நீங்காமலிருக்க என் கைகளால் உன்னை மறுபடியும் தூக்கிவந்து இங்கு படுக்கவைத்தேன். உன் மூர்ச்சை தெளிவிக்க என்னாலியன்றவரை முயற்சி செய்தும் பயன்பெறாமல் உன் உடம்பு காய்ந்து சுரங்கொண்டது. பிறகு நான் கப்பலிருக்குமிடந் திரும்பிச் சென்று அதிலிருந்த பண்டபதார்த்தங்களிற் சிலவற்றையும், போர்வையையுங் கம்பளியையும் எடுத்துவந்து உனக்குப் படுக்கை வசதி செய்துவிட்டு ஒரு கஷாயம் போட்டுவந்து உன் வாயிலூற்றினேன். சுரம் சற்றுத்தணிந்ததெனினும்மறுபடியும் ஆரம்பித்தது. நான்கு நாட்கள் விடாமற் சுரமடித்தது. நேற்றுச் சாயங்காலம் சற்றுத் தணியவே கொஞ்சம் அரிசிக் கஞ்சியை உனக்கு வார்த்தேன். பிறகு சுரம் நீங்கி நன்றாக அயர்ந்து நித்திரை செய்கிறா யென்பதை யுணர்ந்து இனிப் பாதகமில்லை யென்றெண்ணிச் சந்தோஷமடைந்து எப்பொழுது கண்விழிப்பாயோ என்று ஆவலுடன் பார்த்துக் காத்துக்கொண்டிருந்தேன். கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் நீ உன் கண்களைத் திறந்தாய். கஞ்சியைக் குடித்தாய். என்

னைக் கள்ளனென்று உரைத்தாய்என்று சொல்லி முடித்தார்.

பெரியவர் சொன்னவற்றை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மங்கை அவர் தன் வாயை மூடின பிறகு பதிலொன்றுங் கூறாமலும், கண் கொட்டாமலும் அவரையே உற்று நோக்கிப் பின் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு மறுபடியும் விறைக்க விறைக்கப் பார்த்தாள். அவள் முகத்தில் அச்சமும் ஆச்சரியமும் சந்தோஷமும் மாறிமாறித் தோன்றி மறைந்தன.

பெரி:—(நகை முகத்துடன்) இன்னும் உன் சந்தேகம் தீரவில்லை போலிருக்கிறதே!

பெண்:—ஆம். ஆனல் இப்பொழுதுதான் புதியதொரு சந்தேகம் தோன்றுகிறது. எனக்குத் தக்க சமயத்திற் பேருபகாரஞ் செய்த தமக்கு வந்தனங்கூட அளிக்காமல் இருக்கிறதால் என்னை ஒரு நன்றிகெட்ட மடப்பெண் என்று எண்ணிவிடாமல் தயவுசெய்து என்னை மன்னித்து நான் கேட்க விரும்பும் சில கேள்விகளுக்கு உண்மையான பதிற் கூறுமாறு தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பெரி:—ஆகா. எனக்குத் தெரிந்தவரைக்கும் உண்மையான பதிலையே கூறுவேன்.

பெண்:—தாங்கள் இவ்விடத்தில் எவ்வளவு காலமாக இருந்து வருகிறீர்கள்? தாங்கள் சொல்வதுபோல் மனித சஞ்சாரமில்லாத இத்தீவில் வசிக்க வேண்டிய காரணமென்ன? தாங்கள் எந்த ஊர்? தங்களுடைய பெயரென்ன? தயை கூர்ந்து சரியான உத்தரமளிக்கவேண்டும்.

பெரி:—(சிரித்துக் கொண்டே) பேஷ்! நீ சாமர்த்தியமுள்ள பெண்தான். உன் வரலாறுகளை நான் கேட்டறிய வேண்டிய தொருபுறமிருக்க என் விஷயத்தைச் சொல்லும்படி நீயே முதலிற் கேட்டுவிட்டாய். இதுவும் உன் இஷ்டம் போலவே யாகட்டும். நானொரு கப்பல் வியாபாரி. சுமார் இரண்டு வருடங்களுக்கு முன் வியாபார விஷயமாகக் கப்பலேறி வந்தபொழுது இத்தீவிற் கருகாமையிலுள்ள ஒரு பெரிய குத்துப் பாறையில் நான் வந்த கப்பல் மோதுண்டு உடைய, கப்பலிலிருந்தோர் எல்லோரும் இறந்தார்கள். நானொருவனே எஞ்சி நின்றவன், தெய்வ சங்கற்பத்தாற் பலகைத் துண்டொன்று என் கையிலகப்பட அதைப் பிடித்து நீந்திக் கொண்டு இத்தீவிற்கு வந்துசேர்ந்தேன். அது முதல் இதுவரை இங்குக் கிடைக்கக்கூடிய கனி கிழங்குகளைத் தின்றுகொண்டு இவ்விடத்தில் வசித்து வருகிறேன். நான் இருந்த ஊர் மதுரை. என்னை வீரபத்ர பிள்ளை யென்று அழைப்பார்கள்,

பெண்:—என்னசொன்னீர்கள்! தாங்கள் மதுரையா! வீரபத்ர பிள்ளையா! தாம் ஏறி வந்த கப்பல் உடைந்ததாலும், இதுகாறும் இவ்வழியாக வேறு கப்பல் வாராததாலும் இங்குத் தங்கி யிருப்பதாகவா சொல்லுகிறீர்கள்!

வீரபத்ரபிள்ளை (பெரியவரின் பெயர் தெரிந்துவிட்டதால் நாமும் அவ்வாறே கூறுவோம்) என் என்னை இவ்வாறு பார்க்கிறாய்? உன் சுற்றத்தார்களில் என் பெயரையுடைய எவரேனும் என் போன்ற துரதிஷ்டசாலியாக விருக்கிறாரோ? என்று கேட்டார்.

பெண்:—ஆம் அவரே இவர் என்று தனக்குத்தானே வாய்விட்டுச் சொல்லிக் கொண்டு, "மாமா! நான் யாரென்பது தங்களுக்குத் தெரியவில்லையா? தங்களுடைய தங்கையின் புத்திரியல்லவா நான்" என்று சொல்லிக் கீழேவிழுந்து வீரபத்ர பிள்ளையின் கால்களைப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

வீர:—(பெண்ணைத் தூக்கி உட்காரவைத்து) இரஞ்சிதம்! உன்னை நான் முதன்முதற் கப்பலிற் பார்த்த பொழுதே நீ யாவளென்பதை யறிந்து கொண்டேன். நான் சொல்லாமல் நீயே என்னைக் கண்டு கொள்ளுகிறாயா இல்லையா என்பதைப் பார்க்கும் பொருட்டே இதுகாறும் மறைத்து வார்த்தையாடினேன். மிகச் சுலபமாக நீ என்னைக் கண்டு கொண்டதால் அதிகமான வேறுபாடுகள் என்பால் ஏற்படவில்லையென்று நினைக்கவேண்டியிருக்கிறது என்றுரைத்தான்.

(வாசகர்களே! தன்னந் தனியாகக் கப்பலில் வந்த பெண் நம் கதாநாயகியான இரஞ்சிதந்தான். அவள் எவ்வாறு இங்கு வந்தாளென்பதை அவளுடைய வாய்ப்பிறப்பாலேயே அறிந்துகொள்ளுவீர்கள்.)

இரஞ்சிதம்:—மாமா! அவ்விதமன்று. தங்களுருவம் முற்றும் மாறியிருக்கிறது. தங்களை யறிந்தோ ரெவராலும் தாங்களின்னாரென்பதை யுணர்ந்துகொள்ள முடியாது ஆனல் நான் தங்களைக் கண்டுபிடித்துக் கொண்டதற்குக் காரணமிருக்கிறது. நான் மூர்ச்சை யடைந்ததற்கு முன் கடைசியாக என் மனதிலிருந்த உருவம் தங்களுடையதானதினலும் மூர்ச்சை தெளிந்த

பின் முதலாகக் கண்ட உருவமும் தங்களுடையதே யாதலினாலும் நான் தங்களை எளிதாகத் தெரிந்துகொண்டேன் தாங்கள் உயிருடனிருக்கிறீர்களெனினும் இவ்வுலகம் தங்களை இறந்தோர்களி லொருவராகக் கருதி யிருக்கிறது. சமுத்திரத்தைப் பார்த்தவுடன் தங்கள் நினைவு எனக்கு வந்த தெனினும் கடைசியாக நான் சோர்வடைந்து மயக்கமுறுஞ் சமயம்'என் மாமா அவர்கள் எவ்வாறு இக்கடலுக்கு இரையானாரோ அவ்விதமே நானும் ஆகவேண்டும்போலிருக்கிறது'என்று நினைத்தேன். இதுவேயன்றித் தங்களை நினைப்பதற்கு வேறுகாரணமு மிருக்கிறது. அதைச் சொல்ல வேண்டுமென்றால் முதலிலிருந்து ஆரம்பிக்கவேண்டும். ஏன் தங்களுடைய கண்கள் சொருகுகின்றன? நித்திரை மயக்க முற்றவர்போல் காணப்படுகிறீர்கள் என்று சொன்னாள்.

வீரபத்ர:—(புன்முறுவல்பூத்து) 'ஆம்! நிஜமாகக் கொஞ்சநேரம் படுத்திருந்தெழுந்தால் நன்றாக விருக்குமென்று நினைக்கிறேன். நான்கு நாட்களாகத் தூக்கமில்லை. நீ மூர்ச்சை தெளிந்தெழுந்தால் புதிய விடத்தைக்கண்டு பயமுறுவாயே யென்று விழித்துக்கொண்டே உன்னருகிலுட்கார்ந்திருந்தேன். இப்பொழுது கவலை நீங்கியதால் தூக்கம் வருகிறது. நீயும் சற்று சயனித்துக்கொள். பிறகு நீ உன் விஷயத்தைக் கூறலாம் என்று சொல்லிப் படுத்தவுடன் தூங்கிவிட்டார்.

"என்னே இவ்வுலகின் தன்மை! தந்தைக்கும் பிள்ளைக்கும் எவ்வளவு பாரதூர வித்தியாசமிருக்கிறது!'' என்று நினைத்து நித்திரை செய்யும் வீரபத்திரபிள்ளையின் பாதங்களைத் தொட்டுத் தன் கண்களில் ஒத்திக்கொண்டு இரஞ்சிதம் சமையல் செய்ய ஆரம்பித்தாள் கப்பலிலிருந்து எல்லா சாமான்களும் அங்கு கொண்டுவரப்பட்டிருந்ததாலும் ஒரு பெரிய பாத்திரத்தில் சுத்த ஜலமுமிருந்ததினாலும் சமையல் வேலை சீக்கிரத்தில் முடிவு பெற்றது. வீரபத்ரபிள்ளை அப்பொழுதும் தூங்கிக்கொண்டிருந்ததால் இரஞ்சிதம் குகையை விட்டு வெளியிற் சென்று அதற்கணித்தாயுள்ள ஒரு மரநிழலிலுட்கார்ந்து இயற்கைக் காட்சிகளைக் கண்டு ஆனந்தித்துக் கொண்டிருந்தாள்.

இயற்கை மாதாவின் இன்னமுதை மனமாறப் புசித்தபின் இரஞ்சித மெழுந்து திரும்பிவரும் பொழுது வீரபத்ரபிள்ளை குகையின் வாயிலண்டை நின்றுகொண்டிருந்ததைக் கண்டு "இப்பொழுதுதான் எழுந்திருந்தீர்கள் போலிருக்கிறது'' என்றாள். "ஆம். சற்றுமுன்தான் எழுந்து வந்து பார்த்தபொழுது நீ அங்கு உட்கார்ந்திருந்ததைக் கண்டு வனத்தின் வனப்பினைக் கண்டு களிக்கும் உன்னை ஏன் தொந்தரவு செய்ய வேண்டுமென்று இங்கேயே நின்றிருந்தேன். நீயும் சயனித்துக்கொண்டிருப்பாயென்று நினைத்தேன். அவ்விதமல்லாமல் சமையல் வேலையெல்லாம் முடித்துவிட்டு இங்குவந்து உட்கார்ந்திருக்கிறாய். சாப்பிடுவோம் வா, என்று வீரபத்ரபிள்ளை சொல்லி இரஞ்சிதத்தையழைத்துக்கொண்டுபோய் இருவரும் சாப்பிட்டபின் "இரஞ்சிதம்! உன்னுடைய கைப்பாகம் மிக நேர்த்தியாக விருக்கிறது. இத்தகைய சுவை பொருந்தின ஆகாரத்தை நான் என்றும் புசித்ததில்லை என்றார்.

இரஞ்சிதம்:—அவ்வாறன்று காய்கனிகளைத் தின்று கடந்த மூன்றாண்டுகளாகக் காட்டில் வசித்துவரும் தங்கள் நாவின் குற்றமேயல்லாமல் என் கையின் சாமர்த்தியமன்று என்று சொன்னாள்.

வீ:—இம்மாதிரியான மறுமொழி தான் வருமென்பது எனக்கு முன்னமேயே தெரியும். இருக்கட்டும். நீ சற்று நேரம் சயனித்துக் கொள் என்று சொன்னான்.

இரஞ்சிதத்திற்கும் கொஞ்சம்ஆயாசமாயிருந்ததால் குகைக்கு வெளியில் வந்து மர நிழலில் புற்றரையின்மீது படுத்து அயர்ந்து நித்திரை செய்தாள்.

அன்றுமாலை இருவரும் கடற்கரைக்குச் செல்லும்பொழுது வழியில் ஆங்காங்கு காணப்படும் இயற்கைக் காட்சியின் சிறப்பை வீரபத்ரபிள்ளை இரஞ்சிதத்திற்குக் காட்டிக் கொண்டு வந்து கரை சேர்ந்ததும் மெத்தென்றிருக்கும் மணல்மீது உட்கார்ந்தபின், "இரஞ்சிதம்! இந்த இடத்தைப் பற்றி உன்னுடைய அபிப்பிராயமென்ன?'' என்று கேட்டான்.

இரஞ்:—நான் இத் தீவின் அமைப்பை முற்றும் பார்க்கவில்லை யெனினும் இதுசெழித்துச் சிறந்ததோர் தீவென்றே நினைக்கிறேன். உலக வாழ்க்கையில் வெறுப்புற்றவர்களுக்கும், இல்லறத்தில் இச்சையற்று இறைவனின் இணையடிகளைச் சேர விரும்புவோர்க்கும், இயற்கை

வனப்பின் மாண்பைக் காண மனங்கொள்வோர்க்கும், தகுந்த இடமே யாகும். இவ்விடத்தில் என் வாணுள் முழுமையும் நான் இருக்கும்படி நேரிடுமானல் அதைப் பெரியதொரு பாக்கியமாகக் கருதுவேன். தங்களுக்கும் இத்தகைய ஏகாந்த வாசத்தை நீத்துச் செல்வ தென்றால் தாயை விட்டுக் குழந்தை பிரிவது போலிருக்குமென்றெண்ணுகிறேன்.

வீர: — இரஞ்சிதம்! நீ ஓர் அபூர்வமான பெண்ணாக இருக்கிருய். பூலோக வாழ்க்கையின் சுக துக்கங்களை யெல்லாம் அனுபவித்து மூன்று வருடங்களாக இங்கு வசித்து வரும் எனக்கே மனிதசஞ்சாரமுள்ள வாசஸ்தலங்களை எப்பொழுது பார்ப்போமோ என்றிருக்கும் பொழுது உலக ஆசையே இன்னதென்றறியாத நீ, உன் கால முழுவதும் இங்கு இருந்து விட இச்சை கொள்வது வியப்பே யாகும். எனினும் உனக்கு இத்தகைய விருப்ப முண்டாவதற்கும் உலகத்தின்மீது அவ்வளவு வெறுப்புக்கொள்வதற்கும் போதிய காரணமிருக்குமென்று நினைக்கிறேன். நிற்க, நம்மவர்களின் க்ஷேம லாபங்களைப் பற்றியும் நீ இங்கு வந்த வரலாற்றையும் விவரமாகக் கூறுவாயாக.

இரஞ்சிதம்: — மாமா! நான் சொல்லப் போகும் விஷயங்கள் தங்களுக்குத் துக்கத்தைக் கொடுக்கக் கூடியனவே யன்றி இன்பத்தை யளிக்க வல்லன வன்று. சொல்லத் தகுந்த நன்மையான சமாசார மொன்றேனு மில்லையே என்பதைப் பற்றி என் மனம் மிகவும் வருந்துகின்றது.

வீரபத்ரபிள்ளை. — விசனத்தைத் தரக்கூடிய விஷயங்களைத்தான் சொல்லப்போகிருய் என்று என் மனதிற்கே தோன்றுகிறது.

இரஞ்சிதம்:—"அந்தோ! விசனத்தை மாத்திரங் கொடுத்தாற் பாதகமில்லையே. சகிக்க முடியாத வருத்தத்தையு மன்றோ கொடுக்கும். என்னல் அதைத் தங்களுக்குத் தெரிவிக்காமலிருக்கவும் முடியாது. மாமா! தாங்கள் ஏறிச் சென்ற கப்பல் உடைந்து அதிலிருந்தோ ரெல்லோரும் இறந்து தாமும் அவர்களுடன் மாண்டீரென்னும் வதந்தி மதுரைக் கெட்டவே அதைக் கேள்வியுற்ற என் அத்தையவர்கள் சகிக்க முடியாமல் உயிர் துறந்தனர். தங்களுடைய ஏககுமாரனை என் அத்தான் அவர்தம் வாலிபச் சேஷ்டையிற் கட்டுப்பட்டுத் துர்ச்சனர் சகவாசத்தால் துன்மார்க்கத்தி லீடுபட்டுச் செல்வத்தைத் துர்வினியோகஞ் செய்யத் தலைப்பட்டார் என்று சொல்லிப் பின், தன் தந்தையின் செல்வமழிந்த விதத்தையும் அதனல் மனமுடைந்து அவர் இறந்ததும், அதைப் பொறுக்கமாட்டாமல் தன் தாய் மரணமடைந்ததும், மாணிக்கவாசகம் பிள்ளை விண்ணுலகடைந்ததும், பிறிவாற்றாமையால் அவர் தம் பத்நி பரமபதமடைந்ததும், மதனகோபன் தன்னை விவாகஞ் செய்து கொள்ள விரும்பியதும், தான் அதற்கிணங்காததும், அதன் காரணமும், அதையுணராமல் மதனகோபன் இரத்தினத்தைக் கெடுக்க ஆரம்பித்ததும், சுப்பன் மூலமாகத் தான் அறிந்துகொண்ட விஷயங்களும், தான் நாடகத்திற் சேர்ந்ததும் அதன் காரணமும், பிறகு தான் திரிச்சிராப்பள்ளிக்குச் சென்று நாடகத்தில் நடித்ததும், இரத்தினத்தைச் சந்தித்ததும், அங்கு நேர்ந்த விபத்தையும், தன்னை இராமனுதபுரத்திற்குக்கொண்டு வந்து வைத்திருந்ததும், மங்கம்மாளால் தான் தெரிந்துகொண்ட சங்கதிகளும், மதன கோபனைச் சந்தித்ததும், தான் அவ்விடமிருந்து தப்பி வந்ததும், வழிதவறிக் கள்வன் கையிலகப்பட்டுத் தப்பினதும், வழிப்போக்கரிருவரின் துணைகொண்டு சென்றதும், வெற்றிலை மண்டபம் வந்து சேர்ந்ததும் ஆகிய இன்னோரன்ன விஷயங்களை ஆதியோடந்தமாக ஒன்றேனும் விடாமற் சொல்லி, "மாமா! நான் மதுரையை நோக்கிச் செல்வதாக எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது வெற்றிலை மண்டபம் என்ற பெயரைக் கேட்டவுடன் என் நல்லுணர்வையிழந்துபிரமையடைந்து நின்ற சமயம் எனக்குப் பின்னலிருந்த அவ்விருவரில் ஒருவன் என் மூக்கண்டை ஒரு துணியை வைத்தான். பிறகு நடந்ததொன்றும் எனக்குத் தெரியாது. மறுபடியும் நான் விழித்துப் பார்த்தபொழுது சமுத்திரத்தினிடையில் கப்பலிற் போய்க்கொண்டிருப்பதை யுணர்ந்தேன். நான் துணைபற்றிச் சென்ற அவ்விருவரில் ஒருவன் சுக்கானைப் பிடித்துக் கொண்டிருந்ததையும் மற்றவன் அவனருகில் நின்றிருந்ததையுங் கண்டு, முன் நடந்தனவைகளெல்லாம் நினைவிற்குவர அவ்விருவரும் உண்மையான வழிப்போக்கர்களல்ல வென்றும், திருடர்களென்றும், என்னை எவ்விடத்திற்கோ தூக்கிக்கொண்டு போகிறார்களென்றும் என் மனதிற்குப்பட்டது. நான் மயக்கந் தெளிந்ததை அவர்

களுக்குத் தெரிவித்துக் கொள்ளாமல் அவர்களின் சம்பாஷணையைக் கவனித்தேன். ஆனால் அவர்கள் தமிழில் வார்த்தை யாடாமல் சிங்கள பாஷையில் உரையாடினதால் எனக்கொன்றும் விளங்கவில்லை. எனினும் அவர்களுடைய செய்கைகளினாலும் நான் இருந்த இடத்தைச் சுட்டிக் காட்டிப் பேசினதினாலும் இருவர் முகத்திலும் கோபக்குறி காணப்பட்டதினாலும் என்னைக் குறித்துத்தான் ஏதோ தர்க்கித்து வார்த்தையாடுகிறார்க ளென்று தோன்றிற்று. பிறகு என்னை யறியாமலே என் பார்வையெல்லாம் சுக்கான்மீது சென்றது. அதை எவ்வாறு உபயோகிக்கிறா னென்பதைக் கவனித்தேன். அதுவரையும் தெற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்த கப்பல் கிழக்கு முகமாகத் திரும்பிச் சென்றது. எவ்வாறு திருப்பினானென்பதையும் நன்றாகக் கவனித்துத் தெரிந்துகொண்டேன். இவ்விதம் திருப்பினதற்குக் காரணம் தெரியவில்லை. ஆனால் அவ்விருவரும் என்னைப் பார்ப்பதும் தெற்கில் நோக்குவதுமாகச் சற்றுநேரமிருந்து பின் அவர்களுடைய சம்பாஷணையைத் துவக்கினார்கள். அவர்களுக்குத் தெரியாமல் நான் தெற்கிற் பார்த்தபொழுது வெகுதூரத்தில் ஒரு கப்பல் வருகிற மாதிரி தெரிந்தது. அக்கப்பலின் எதிர்ப்படாம லிருக்க வேண்டியே இவர்கள் திசை திரும்பிச் செல்கிறார்களென்பதை யறிந்துகொண்டேன். அக்கப்பலிலிருப்போர்க்குச் சைகை செய்தால் நான் இவர்களிடமிருந்து தப்பிவிடக்கூடுமென் றெண்ணினேன். ஆனால் அக்கப்பல் அதிக தூரத்திலிருந்ததால் அவ்வாறு செய்தல் எனக்கே கேட்டைவிளைக்குமென அஞ்சி அவ்வெண்ணத்தை விலக்கினேன். இவ்வா றிருக்கும்பொழுது இவர்களுடைய சண்டை பலமாயிற்று. வாய்ச்சண்டையை யொழித்துக் கைகலந்தார்கள். அதாவது கப்பலை யோட்டிக்கொண்டு வந்தவன் நின்றிருந்தவனைத் தூக்கிக் கடலில் தள்ளினான். அவ்வாறு தள்ளப்பட்டவன் விழுஞ் சமயம் மற்றவனுடைய கைகளை நன்றாகப் பிடித்துக் கொண்டதினாலும், இவன் அவ்வாறு நேருமென்று எதிர்பாராததினாலும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியாமல் அவனுடன் இவனும் கடலில் விழுந்தான். இவைகளை நான் சொல்வதற்கு நேரமாயிற்றே யன்றி ஒரு விநாடியில் நடந்தேறின. ஆதலின் என்னால் ஒருவருக்கேனும் உதவிபுரிய வியலாமற் போயிற்று. பிறகு நான் எழுந்து வந்து சமுத்திரத்தைப் பார்த்தபொழுது ஒருவருடைய உருவமும் வெளியில் தெரியவில்லை. அதிக நேரம் மேலே வராததால் இருவரும் இறந்தாரகளென் றுணர்ந்தேன். எவ்விதத்திலும் அவ்விருவருக்கும் சொந்தமில்லாத என்னை அக்கிரமமாகத் தூக்கிவந்து சொந்தமாக்கிக்கொள்ள எண்ணினதால் இருவரும் உயிர்துறந்தனர். இஃதிவ்வாறாக என்னுடைய நிலைமை எவ்வாறிருந்தது. கடற் பிரயாணமே செய்தறியாதநான் ஆழியின் மத்தியில் மும்முரமான காற்றாலலைக் கப்படும் கப்பலில் தனியாகநின் றுகொண்டு சாகரத்தின் அகண்ட நீர்ப்பரப்பைப் பார்த்தபொழுது எனக்குண்டான மன நெகிழ்ச்சியை இத்தகையதென்று விரித்துக் கூற என்னா லியலவில்லை. வந்த வழியே திரும்பிச் செல்லக் காற்று இடையூறாயிருந்ததாலும் எங்குத்தான் செல்வதென்பதும் எனக்குத் தெரியவில்லை யானதினாலும் சர்வ வல்லமையுள்ள மீனாம்பிகையின் பாதாரவிந்தமே கதியென்று சுக்கானைப் பிடித்து உட்கார்ந்து கப்பலைச் செலுத்திக்கொண்டு வந்தேன். எனக்கு உதவியாகக் காற்றும் பலமாக அடித்துக்கொண்டிருந்தது. அன்று பகல் முழுவதும் எனக்கு அதிகமாக வருத்தம் தோன்றவில்லை. சூரியன் அஸ்தமித்தபின் பேய்போன்ற கரிய இருள் சூழ்ந்து கொள்ளவும் அலைகளின் சப்தம் காதுகளைத் துளைக்கவுமே என்மனம் சற்று அதைரியமடைந்து கலக்கமுற்றது. முன்னதாகவே எடுத்து வைத்திருந்த விளக்கை ஏற்றிக் கப்பலில் வெளிச்ச முண்டாக்கிக்கொண்டேனெனினும் இருண்ட ஆகாயத்தைப் பார்க்கப் பயமாகவே யிருந்தது. எவ்வாறோ இரவுங் கழிந்தது. ஆதித்தனின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்தேன். அன்று பகல் முழுவதும் கப்பல் விரைவாகவே சென்றுகொண்டிருந்தது. அன்று மாலை என் கண்கள் இத்தீவை வெகு தூரத்திலிருந்து கண்ணுறவே மனித சஞ்சாரமுள்ள ஊராயிருக்குமென்று என் மனமெண்ணிக் கரைகாணக் களிப்பெய்தியது. உடனே கப்பலை இத்தீவின் முகமாகத் திருப்பினேன். காற்று விரோதமா யிருந்தது. எனினும் எதிர்த்துப் போர் புரிந்தேன். தோல்வியடைந்து உயிர்துறக்குஞ்சமயம் தாங்கள் வந்து உதவிசெய்துஉயிர்ப்பிச்சை தந்தீர்கள் என்று சொல்லி முடித்தாள்.

வீர:— இவ்வுலக வாழ்க்கையின் தன்

மையை என்னென் றுரைப்பது! இவ்விரண்டு மூன்று வருடங்கட்குள் நம் குடும்பங்கள் மூன்றும் முற்றும் சீர்குலைந்து நாதனற்றுப் போய்விட்டனவே. நீரின்மேற்குமிழியன்ன நிலையில்லா வாக்கையைச் சதமென்று நம்பிச் சற்புத்திரர்களைத் துன்புறுத்தித் திரியும் சண்டாளர்களின் மனோபாவத்தை என்னென்று சொல்வது! இப்படிபாவியான துஷ்டன், தான் அழிந்ததுமன்றிப் பிறரையுங் கெடுத்துத் தன் குலத்திற்குப் பெருத்த அபகீர்த்தியை யுண்டாக்கிவிட்டானே. ஏனோ இவன் எனக்குப் பிள்ளையாய்ப் பிறந்தான்? இவனையும் என் மகனென்று சொல்வேனா? இரஞ்சிதம்! இறந்தோரை நினைத்துத் துக்கப்படுவதா? அன்றி இத்துன்மார்க்கன் சற்குண சிகாமணியான இரத்தினத்தைத் தன் சகோதரனென்றுங் கூடக் கருதாமல் படுகுழியில் தள்ளினதை நினைத்து வருந்துவேனா! அல்லது மூர்க்கத்தனமுடைய அத்துஷ்டன் குணவதியான உனக்குச் செய்த தீங்குகளை நினைத்துத் துக்கிப்பேனா. இவ்வயோக்கியப் பயல் முகத்திலும் விழிக்க வேண்டுமா! சீ! சீ! மதுரையைப் பார்க்க வேண்டுமென்னும் ஆசையை இன்றுடன் ஒழித்துவிட்டேன். கடவுளால் எனக்களிக்கப்பட்ட இவ்விடத்திலேயே இருந்து மிகுதியாயிருக்கும் என் வாணாட்களைக் கழிப்பேன்.

இரஞ்: — "மாமா! என் அத்தானின் மீது வீண் பழியைச் சுமத்துகிறீர்களென்றஞ்சுகிறேன். அவர் செய்த காரியங்களை மறைப்பதற்கில்லை யெனினும் அவைகளைக் குற்றமாகக் கொள்வதற்கில்லை யென்று நினைக்கிறேன். உலக அனுபவமில்லாத வாலிபர்களுக்குச் செல்வமிருந்து அடக்குவோரில்லாத விடத்து சிநேக தோஷத்தால் அவர்கள் கெட்டலைவது சாதாரணமாக இவ்வுலகில் நிகழ்பவைகளி லொன்றாக விருக்க, அத்தானிடத்தில் மாத்திரம் அதைக் குற்றமாகக் கொள்வது நியாயமாகத் தோன்றாது. என்னை விவாகஞ் செய்து கொள்ள அவருக்குச் சகல விதமான உரிமையு மிருந்ததால் அவர் அவ்விருப்பத்தைக் கொண்டார் என் பெற்றோர்களில்லாததால் அவரிஷ்டத்தை நேராக என்னிடந் தெரிவித்தார். நான் அதற்கு உடன்படாததால் அவர் கோரிக்கையை நிறைவேற்ற தன் மனோபாவத்திற்குப் பொருந்துமாறு பல்வேறு வழிகளில் முயற்சி செய்தார். அத்தகைய முயற்சிகளில் என் காதலுக்குரியவரைத் தீயவழியிற் புகுத்திய தொன்று. என்னைக் களவாடிச் சென்றது மற்றொன்று. இவைகளி லொன்றேனும் இயல்பிற்கு விரோதித்திருப்பதாக என் உள்ளத்தில் தோன்றவில்லை.

வீர:—இரஞ்சிதம்! மதன கோபன் செய்த காரியங்க ளொவ்வொன்றும் அடாததாக விருக்க நீ அதை நியாயமானதென்றும் இயல்புக்கு மாறானதென்றும் எடுத்துக் கூறுவது உன் சீரிய குணத்தைத் தெளிவுறுத்திக் காண்பிக்கிறதேயல்லாமல் அவன் என் அபிப்பிராயத்தில் இழிவான நிலைமையிலிருந்து மாறுவதற்கில்லை. இதனால் அவனைப் பார்க்கவேண்டு மென்றிருந்த என் விருப்பமும் அறவே நீங்கியது.

இரஞ்:—தாங்கள் மதுரைக்கு வரவேண்டிய அவசியமிருக்கிறதென்பதை மறந்து விட்டீர்கள் போலிருக்கிறது.

வீர: — உனக்குத் துணையாக வரவேண்டியதைத்தானே சொல்லுகிறாய்?

இரஞ்.—அதுவன்று. என்பொருட்டு மதுரைக்குச் செல்லவேண்டுமென்ற பிரியம் எனக்குக் கிஞ்சிற்றேனுமில்லை. பூர்ண சம்மதத்துடன் தங்களுக் குதவியாக இவ்விடத்திலேயே தங்கிவிடுவேன். ஆனால் ஒருவர் ஆபத்திற் சிக்கியிருக்கும்பொழுது நமக்கு அது தெரிந்திருந்தும், அவரை அதிலிருந்து நம்மால் நீக்கக் கூடியதாயிருந்தும், அவருக்கு நம்மாலான உதவியைச் செய்யாமலிருப்பது நன்றன்றென நினைக்கிறேன்.

வீர: — ஓகோ; இரத்தினத்தைக் குறித்துப் பேசுகிறாயோ. ஆம். இத்துஷ்டனிட மிருந்து அவனைக் காக்கவேண்டியது நம் கடமையே யாகும். நீ அதற்குப்பின் அவனைப் பார்க்க வில்லையோ?

இரஞ்.—திரிச்சியில் அவரிடமிருந்து பிரிக்கப்பட்டபின் அவரைப்பற்றிய சமாச்சாரமொன்றும் எனக்குத் தெரியாது. எனக்குதவிபுரிந்த மங்கம்மாளைக் கேட்டதில் அவளுக்கு அவ்விஷயமாக ஒன்றுந் தெரியாதென்பதை யுணர்ந்தேன். அநேகமாக அவரை எங்கேனும் அத்தான் இரகசியமாக அடைத்து வைத்திருப்பார் என்பது என் நம்பிக்கை.

வீர. — இரஞ்சிதம்! அம்மூடன் உன்னால் அத்தானென் றழைக்கப்படுவதற்குக் கொஞ்சமேனும் தகுதியுடையவனன்று. உன் வரலாற்றைக் கேட்கும்வரை எப்பொழுது மதுரையைப்

உறாஅ தவர்போற் சொலினுஞ் செறாஅர்சொ லொல்லை யுணரப் படும்.

பார்ப்பேனோ என்ற எண்ணம் ஒருநிமிஷமேனும் என் மனதிலில்லாம லிருந்ததில்லை. ஆனால் இப்பொழுது அவ்வளவுக் கவ்வளவு வெறுப்பாயிருக்கிறது. எனினும், அத்துஷ்டனைத் தக்கபடி தண்டித்து அவனிடமிருந்து இரத்தினத்தை மீட்டு அவனை நல்வழிப்படுத்தி உனக்கு மணவினை முடிக்கவேண்டியது என் கடமையாயிருப்பதினால் உன் தேகம் சரியான நிலைமைக்கு வந்தவுடன் நாமிருவரும் இங்கிருந்து புறப்படுவோம். நீ ஒருகாரியம் செய்திருந்தால் நலமாயிருந்திருக்கும். இத்துஷ்டனின் நடத்தைகளைத் தெரிந்துகொண்டவுடன் போலீஸ் இன்ஸ்பெக்டர் சுந்தரம் பிள்ளைக்குத் தெரிவித்திருந்தால் அவர் உனக்கு வேண்டிய உதவியைச் செய்திருந்திருப்பார். அவர் நம் குலத்தவராயிருப்பது மாத்திரமன்றி நம் குடும்பங்களில் மிகவும்அக்கரையுடையவர்; மேலும் பரோபகாரி. ஒரு சமயம் அவர் வேறெங்கேனும் மாற்றப்பட்டாரோ என்னமோ!

இரஞ்:— அவர் மதுரையிலேயே இருப்பினும் நான் அவரை எவ்வாறு சந்தித்துச் சங்கதிகளைத் தெரிவிப்பது? என் தந்தை இறந்தபின் ஒருமுறை வீட்டிற்கு வந்திருந்தார். அதன் பிறகு அவரை நான் பார்க்கவே இல்லை. மேலும் அவ்வெண்ணமும் என் உள்ளத்தி லுதிக்கவில்லை.

வீர:—நேரமாகி விட்டது. எழுந்து செல்வோம் என்று சொல்லி இரஞ்சிதத்தை யழைத்துக் கொண்டு தன்னிருப்பிடமான குகைக்குத் திரும்பிவந்தான்.

ஏகலைவ்யன்.—தேவச்ரவஸ் பேரன்; ஹிரண்யதனுஸ் என்பவன் மகன்; வஸுதேவன், சத்ருக்னன் இவர்க்கு ஸஹோதரன். பாலியத்தில் கைவிடப்பட்டு நிஷாதர்களால் வளர்க்கப்பட்டு அவர்களுக்கு அதிபதியானவன். துரோணாசாரியரிடம் வில்வித்தை கற்கச் சென்று, அவர் அங்கீகரியாதபடியால், அவரைப்போல ஒரு மண்பதுமைசெய்து அதற்கு வழிபாடு இயற்றி, அஸ்திரப்பயிற்சி செய்து தேர்ச்சியடைந்தான். இவனுடைய அஸ்தலாகவத்தைக் கண்டு ஆச்சரியப்பட்ட அர்ஜுனனுடைய தூண்டுதலின்பேரில் துரோணர் இவனிடம் சென்று குருதக்ஷிணையாக இவனது வலது கட்டைவிரலைப் பெற்று அர்ஜுனனைக் காட்டிலும் இவன் உயர்ந்தவன் ஆகாதவாறு செய்தனர். இவன் த்வாரகையின்மீது ஒரு இரவு படையெடுத்துச் சென்று, கிருஷ்ணனால் கல்லெறிபட்டுக் கொல்லப்பட்டான்.

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S & LADIES' PAGES

ஸ்ரீராமாவதார கதையும் அதன் நற்போதங்களும்

ஸ்ரீராமாயண கதையின் சுருக்கம்

பூர்வம் வட இந்தியாவில், கோசல நாடு என்னும் பெயர்பெற்று வழங்கிய தேசத்துக்கு அயோத்தியை என்ற சிறந்த நகரம் ராஜதானியாக இருந்தது. இந்நகரம் வெகு விஸ்தீர்ணமுள்ளதாயும், நீர்வளம், நிலவளம், இதர ஐசுவரியங்களும் நிரம்பியதாயும், இந்திரனது பட்டணமாகிய அமராவதிக்குச் சமமெனச் சொல்லக் கூடியதாயும் வளர்ந்தோங்கியது. தொன்று தொட்டு இக்ஷ்வாகு வம்ச மன்னர்கள் இங்கு ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தனர். இக்குலத்தில் **தசரதன்** என்னும் சக்கரவர்த்தியுண்டாகி, வெகு தருமமாய்ச் செங்கோல் செலுத்தி வந்தார். இவரது ஆளுகையில் பிரஜைகள் அனைவரும், அகால மிருத்யு, தாரித்திரியம், திருடர் பயம் முதலியவற்றால் வருந்தாது, தத்தம் வர்ணாசிரமங்களுக்குரிய கடமைகளைச் சரிவரச் செய்து, சந்தோஷ சித்தர்களாயும், தெய்வபக்தி, ராஜபக்தி நிரம்பியவர்களாயும் பரம சுகங்களை யனுபவித்து வந்தனர். மனுநீதி தவறாமல் பல்லாயிரமாண்டுகள் அரசு புரிந்துவந்த தசரதருக்கு இதர எவ்வித ஐசுவரியங்க ளிருந்தும், புத்திரபாக்கியமில்லாத குறைவால் அவர் மிகவும் வருந்தலுற்றார்; பிரசித்தி பெற்றுள்ள அந்த வம்சம் சந்ததியற்று அழிந்துபோகும்படி நேர்ந்தது பற்றி ஆராத்துயரமடைந்தார். இதற்கு யாது பரிகாரம் தேடலாமென்று ஸுமந்திரர், வஸிஷ்டர் முதலான மந்திரிகளுடன் அவர் ஆலோசனை செய்தார். அவர்களது உபதேசத்தை யனுசரித்து, அசுவமேதயாகம் செய்தார். பின்னர், விபண்டக மகரிஷியின் புத்திரனான ரிச்யச்ருங்கர் என்னும் சிறந்த முனிவரை வரவழைத்து, அவர் உதவியால் 'புத்திர காமேஷ்டி' என்னும் ஒரு விசேஷ யாகம் நடத்தினார்.

இங்கு இவ்வாறிருக்கையில், பிரம்மனிடமிருந்து, தேவர், தானவர் முதலானோரால் தனக்கு மரணம் நேரிடாம லிருக்கவேண்டுமென்று வர

செறாஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னோக்கு முறாஅர்போன் றற்றார் குறிப்பு.

பலம் பெற்றுள்ள லங்காதிபதியான ராவணன், தேவர்களேயும், ரிஷிகள் முதலான ஸாதுக்களை யும் இம்சித்து, மூவுலகமும் அவனைக்கண்டால் நடுநடுங்கும்படி அட்டகாசமாய் வாழ்ந்து வந் தான். இந்திராதிகளும் பயந்து அவனுக்குத் தொண்டுபுரிய நேர்ந்தது. அவனது உபத்திர வம் சகியாது தேவர்கள் பிரம்மனைச் சரணமடை ந்தனர். அவரும் யாது செய்வது என்று அறி யாது, தேவர்களுடன் திருமாலைச் சரணமடை ந்து, ராவணனால் உலகங்களுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தீர்த்து ஸாதுஸம்ரக்ஷணம் செய்யு மாறு வேண்டினர். இராவணன் மனிதரை ஒரு பொருட்டாக நினையாததால், அவர்களால் தன க்கு மரணம் நேரிடக்கூடாதென்று அவன் வரம் கேட்கவில்லை. ஆகையால் விஷ்ணு ஒரு மனுஷ்ய னுப் அவதரித்து, துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபால னம் செய்யக் கருதினர். இதனால்தான் இந்த அவதாரத்தில், பகவான் பெரும்பான்மையும் மனுஷ்ய பாவனை அனுஸரித்தே நடக்கவேண்டி யிருந்தது. ஏதோ சிற்சில சந்தர்ப்பங்களில்தான் பரம புருஷத்தன்மையும், மகிமையும் காண் பிக்கப்பட் டிருக்கின்றன. தேவர்களின் விருப் பத்திற்கேற்ப, ஸ்ரீமந் நாராயணன் தசரத சக்கர வர்த்திக்குக் குமாரனுப் அவதரிக்கச் சங்கற்பித் தார். தேவர்களும், இராமனுக்குச் சகாயமாக வாலி, சுக்கிரீவாதி வானரர்களாயும், ஜாம்பவான் முதலான கரடிகளாயும் பூமியில் பிறந்து, கிஷ் கிந்தையிலும் சுற்றுப் பக்கங்களிலும் வளர்ந்து வந்தனர்.

புத்திரகாமேஷ்டி யாகம் முடிந்தது. அக் கினி குண்டத்திலிருந்து ஒரு திவ்விய புருஷன் தோன்றி, தன் கையிலேந்திவந்துள்ள பாயஸம் நிரம்பிய பாத்திரத்தைத் தசரதரிடம் கொடுத்து, அதை அவரது பத்தினிகளுக்குப் பானஞ் செய் விக்குமாறு கூறி மறைந்தான். தசரதரும் மன மகிழ்ந்து, கௌஸல்யை, ஸுமித்ரை, கைகேயி என்ற மூன்று பட்டமகிஷிகளுக்கும் யதோ சிதம் அதைப் பகிர்ந்துகொடுத்தார். அவர்கள் அதைப் புஜித்துக் கர்ப்பந்தரித்தனர். திருமாலும் நான்கு அம்சமாய்ப் பிரிந்து, இவர்கள் கர்ப்பங் களில் வசித்துவந்தார். ஒரு வருஷம் கடந்தது. பகவான் ஜனிக்கும் காலம் கிட்டியது. சித்திரை மாதத்தில் சுக்கிலபக்ஷ நவமியில், புனர்வஸு நக்ஷத்திரத்தில், ஐந்து கிரகங்கள் உச்சமா யிருக்க, நல்ல முகூர்த்தத்தில் கௌஸல்யாதேவி ஒரு புத்திரனைப் பெற்றாள். புஷ்ய நக்ஷத்திரத் தில் கைகேயிக்கு ஒரு புதல்வனும், ஆயில்யத் தில் ஸுமித்திரைக்கு இரண்டு குமாரர்களும் உண்டானர்கள். தசரதனுக்கு ஏற்பட்ட ஸந் தோஷத்துக்களவில்லை. ஜனங்கள் எல்லோரும் ஆனந்தபரிதர்களாய், எங்கும் உத்ஸவம் கொண் டாடினர்கள். தசரதர் பலவித தானங்கள் அளித்தார். பின்னர் வஸிஷ்டரைக்கொண்டு தம் புதல்வருக்கு நாமகரணம் செய்வித்தார். நிகரற்ற தேக சௌந்தரியத்தாலும், மாசற்ற குணகணங்களாலும் பார்ப்பவரின் கண்ணையும், மனத்தையும் கவர்ந்து களிப்பிக்கக்கூடிய மூத்த குமாரனுக்கு வஸிஷ்டர் இராமன் என்னும் திருநாமஞ் சூட்டினர். கைகேயி சுமித்திரை இவர்களின் புதல்வருக்கு, அவரவர் குணத்துக் கும் அவதார உத்தேசத்துக்கும் தக்கவாறு, பரதன் என்றும், லக்ஷ்மணன், சத்துருக்னன் என்றும் பெயரிட்டார். காலத்தில் இவர்கள் உப நயனம் செய்விக்கப்பட்டு, வேதங்கள் தர்மசாஸ் திரங்கள் முதலிய வித்தைகளேயும், க்ஷத்திரியர்க் குரிய வில்வித்தை, யானையேற்றம், குதிரையேற் றம் முதலியவற்றையும் கற்றறிந்து கரைகண்டவ ரானர்கள். இராமனும், லக்ஷ்மணனும் இடை விடாது கூடப்பழகிவந்தார்கள்; அவ்வாறே பரத னும், சத்துருக்கினனும் இணைபிரியாது வளர்ந்து வந்தனர். இந்நான்கு புத்திரர்களை யடைந்து அளவற்ற மகிழ்வுற்ற தசரதர், அவர்களுக்குத் தக்க வயது வந்ததும், அவர்கள் விவாகத்தைப் பற்றிச் சிந்திக்கலுற்றார்.

அப்போது, கடுந்தவம்புரிந்துப் பிரமரிஷி எனப் பெயர்பெற்று விளங்கிய விசுவாமித்திரர் அங்கு எழுந்தருளினர். தசரதர் அவரைத் தக்க வாறு நல்வரவேற்று பூஜித்தார்; அவரது தரி சனத்தால் தான் கிருதார்த்தன் ஆனதாயும், அமிர்தபானம் செய்ததுபோல் களிப்படைந்த தாயும் கூறித் துதித்தார்; அவருக்கு யாது அபே க்ஷை என்றும், அவர் எது கேட்டாலும் தான் அதைக் கொடுக்கத் தயாரா யிருப்பதாகவும் வாக்குறுதி கூறினர். விசுவாமித்திரரும் அவரது வணக்கத்தையும், அதிதி விசுவாசத்தையும் மெச் சினர். தான் செய்யக் கருதிய ஒரு சிறந்த வேள்வியை ஸுபாகு, மாரீசன் என்னும் அரக்கர் கள் கெடுத்துவருவதாயும், அவர்களை வென்று அவ் யாகத்தைப் பூர்த்தி செய்விக்கும்பொருட்டு, ஸ்ரீராமனைத் தன்னுடன் ஆசிரமத்துக்குக்

கொஞ்சகாலம் அனுப்பும்படிக்கும்கேட்டார். இவ்வார்த்தை இடிபோல் தசரதர் காதில் வீழ்ந்தது. தாம் அறுபதுனுயிரம் வருஷம் புத்திரபாக்கியமில்லாமல் தவித்து, பிறகு பெரும் வேள்விகள் செய்து அடைந்துள்ள அருமைப் புதல்வனும் இளம்பாலனுமான ஸ்ரீராமனை விட்டுப் பிரிய மனம் வராமலும், தாம் செய்த பிரதிஞ்ஞையை மறுத்துக்கூற மனம் துணியாமலும், தேனில் விழுந்த ஈ போல் தவித்தார்; சைனியத்தோடு தாம் வருவதாயும், ராமனை அழைத்துப்போக வேண்டாமென்றும் பிரார்த்தித்தார். விசுவாமித்திரரோ அதற்கிணங்காது, ராமனே வரவேண்டுமென்றார். தசரதர் தயங்க, மகரிஷி கோபாவேசங்கொண்டு திரும்பிப்போக ஆரம்பித்தார். உடனே குலகுருவான வஸிஷ்டர், தசரதர் தாம் கூறியவாக்குக்கு விரோதமாய் நடப்பது சரியல்லவென்றும், ராமனது பராக்கிரமும், மகிமையும் தமக்குத் தெரியுமென்றும், அவனை விசுவாமித்திரருடன் அனுப்புவதால் க்ஷேமமுண்டாகுமே தவிர, யாதொரு குறைவும் நேரிடாதென்றும் கூறலுற்றார். இதுகேட்டு மனந்தெளிந்த மகாராஜன் ராமனையும் லக்ஷ்மணனையும் விசுவாமித்திரருடன் அனுப்பினர்.

உடனே ராமலக்ஷ்மணர்கள் அவருடன் ஸித்தாசிரமம் நோக்கிச் சென்றனர். வழியில் அவர் அவர்களுக்கு அநேக அஸ்திர சஸ்திரங்களையும், பலை, அதிபலை என்ற இரண்டு விசேஷ வித்தைகளையும் உபதேசித்தருளினர். பிறகு தாடகை என்னும் ராக்ஷஸி அவர்களை எதிர்க்க, இராமன் மகரிஷியின் ஆஞ்ஞையின்பேரில், அவரைச் சங்கரித்தார். அப்பால் தம் ஆசிரம மடைந்து, விசுவாமித்திரர் வேள்வி யாரம்பித்தார். வழக்கம் போல் ஸுபாகு மாரீசாதிகள் ரத்தம் முதலியவற்றால் அதைக் கெடுக்க வந்தனர். ஸ்ரீராமன் பாணங்கள்தொடுத்து, ஸுபாஹுவை வதித்து மாரீசனைச் சமுத்திரத்தில் ஆழ்த்தி வைத்தார். யாகம் நிர்விக்கினமாய் நிறைவேறிற்று. அங்குள்ள ரிஷிகள் முதலானோர் ராகவனைப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

இவ்வாறிருக்கையில், விதேக தேசத்து வேந்தனான ஜனக மகாராஜனுக்கு ஸீதை யென்னும் அயோனிஜையான ஒரு அருமைப் புதல்வி அகப்பட்டு, அவளை அவர் வெகு செல்வமாய் வளர்த்துவந்தார். வெகு லாவண்யமும், தேக பலமும் வாய்ந்துள்ள ஜானகிக்குத் தக்க வரன் சம்பாதிக்கக் கருதி, அதுவிஷயமாய் ஒரு நியமம் ஏற்படுத்தினர். தம் வம்ச பரம்பரையாய் ஆராதிக்கப்பட்டு வந்துள்ள சிவதனுஸை எடுத்து வளைத்து நாணேற்றுபவனுக்கே அவளை விவாகஞ் செய்துகொடுப்பதாய் அவர் தீர்மானித்தார். பல வேந்தர்களும் வந்து பார்த்து, பந்தயத்தை நிறைவேற்ற முடியாது மனமேங்கிச் சென்றனர். அச்சமயம் ஜனகர் மிதுலா நகரத்தில் ஒரு பெரும் வேள்வி ஆரம்பித்து, விசுவாமித்திராதிகளை அதற்கு வரும்படி வேண்டினர். விசுவாமித்திரர் இராமலக்ஷ்மணர்களையும் அழைத்துச் சென்றார். வழியில் அவர்கள் கௌதம ஆசிரமம் அடைந்தனர். அங்கு கௌதமரது சாபத்தால் கல்லாய்க்கிடந்த அவரது பத்தினியான அகல்யை என்பவள் ஸ்ரீராமபாத ஸ்பர்சம் ஏற்பட்டவுடனே, சாபம் நீங்கினவளாய், தனது சுயரூபத்துடன் எழுந்து, அவரை வணங்கி உபசரித்தாள்.

பிறகு, ஜனகர் விசுவாமித்திராதிகளை நல்வரவேற்று உபசரித்து, ராமலக்ஷ்மணர்களின் விருத்தாந்தத்தை வினவினர். விசுவாமித்திரரும் அதை எடுத்துக்கூறி, சிவதனுஸை ராமனுக்குக் காட்டும்படி நியமித்தார். பெரும் பராக்கிரமசாலிகளும் கண்ணெடுத்துக்கூடப் பார்க்க முடியாத அந்தத் தனுஸைப் பாலனான ராமன் என்ன செய்ய முடியுமென்று நினைத்தார் ஜனகர். ஆயினும், அதை ராமனுக்குக் காட்டும்படி சேவகர்களை ஏவினர். என்னேவிந்தை! ராகவன் அரைநொடியில் அதை எடுத்து, நாணேற்றி வளைத்தார். அவரது வேகம் தாங்கமாட்டாமல் அது ஒடிந்தது. அண்டகடாகம் இடிந்து விழுந்ததுபோல ஒரு பேரொலி உண்டாயிற்று. ஜனங்கள் மதிமயங்கித் திகைத்தனர். உடனே ஜனகர் ஆனந்த சாகரத்தில் மூழ்கினவராய், ஸீதையை ராமனுக்கு மணம் புரிவிக்கக்கருதி, தசரதனுக்குச் சொல்லி யனுப்பினர். அவர், பரத சத்துருக்கனர்களை அழைத்துக்கொண்டு, மந்திரி வர்க்கங்களுடனும் சதுரங்க பலத்துடனும் புறப்பட்டு, மிதிலா நகரமடைந்து, நல்வரவேற்கப் பெற்றார்.

தசரத புத்திரர்களான ராம லக்ஷ்மண பரத சத்துருக்கனர்களுக்கு ஜனக புத்திரியான ஸீதை ஊர்மிளையையும், அவரது தம்பியின் புதல்விகளான மாண்டவி, ச்ருதகீர்த்தி என்பவர்களையும் முறையே பாணிக்கிரகணம் செய்விப்பதாய்த் தீர்மானமாயிற்று. கல்யாண சம்பாரங்கள் யாவும் தயாரிக்கப்பட்டு, விவாக மகோற்சவம் வெகு விம

எதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல் காதலார் கண்ணே யுள.

ரிசையாய் நடைபெற்றது. ஜனகன் ராமனுக்குத் தாரைவார்த்து ஸீதையை அக்கினி சாக்ஷிகமாய் விவாகம் செய்துவைத்தார். அவள் அவருக்கு எவ்விதத்திலும் தகுந்த பத்தினியாவளென்றும், அவரது தர்மாசரணத்தில் சற்றும் மனந்தயங்காது உதவக்கூடியவளென்றும் கூறினார். பின்னர் மற்றவர்களின் விவாகமும் சாஸ்திரோக்தமாய் நடைபெற்றது. சூரிய வம்சத்தினருக்கும் சந்திரகுலத்தாருக்கும் ஏற்பட்ட இவ்வித ஸம்பந்தத்தைப்பற்றிக் களியாதவரில்லை.

பிறகு தசரதர், தமது புத்திரர்களுடனும், நாட்டுப்பெண்களுடனும் புறப்பட்டு அயோத்திக்குச் சென்றார். வழியில், க்ஷத்திரிய வம்சங்களைக் கறுவறுத்த பரசுராமன் அவர்களை எதிர்த்தார். நடுநடுங்கின தசரதனை விட்டுவிட்டு, அவர் ஸ்ரீராமனிடம் சென்று, சிவசாபத்தை முறித்த அவரது பராக்கிரமத்தை இகழ்ந்துகூறி, தம்மிடமுள்ள விஷ்ணு தனுஸை அவர் வாங்கி வளைத்து நாணேற்றும்படிக்கும், இல்லாவிடில் தோற்றதாய் ஒப்புக்கொள்ளும்படிக்கும் கேட்டார். ஸ்ரீராகவன் அதை ஒரு லீலையாய் வாங்கி, வளைத்து நாணேற்றி, அதில் சரத்தைப் பூட்டினார். உடனே பார்க்கவரது கொட்டம் அடங்கியது. அவர் தலைகுனிந்து, ஸ்ரீராமனது வீரியத்தை மெச்சிக் கொண்டாடினார். பின்பு ராமனும் அவரது திவ்வியலோகங்களைத் தமது பாணத்துக்கு இரையாக்கினார். பரசுராமனும் கர்வமடங்கி, தவம்புரிய மகேந்திர பர்வதம் சென்றார். இதுகண்ட தசரதன் தம் புத்திராதிகள் புனர்ஜன்மம் அடைந்ததுபோல் மகிழ்வுற்று, அயோத்திபோய்ச் சேர்ந்தார்.

பின்னர், தசரதன் தமது முதிர்ந்த வயதையும், ராமனது குணங்களையும், ராஜ்யபாரம் வகிக்கத் தக்க நிலைமையையும் கண்டு, அவருக்கு யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்யக் கருதினார். ஒரு மந்திராலோசனை சபைகூட்டித் தமது விருப்பத்தை வெளியிட்டார். எல்லோரும் மகிழ்வுற்று, ராமனது குணங்களை மெச்சி ஒரே மனத்தினராய் அவ்வாறே செய்யவேண்டுமென்று கூறினர். ஸ்ரீராமனது பட்டாபிஷேகத்துக்கு ஒரு சுபதினமும் குறிப்பிடப்பட்டது. வேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்றன. மறுநாள் விடிந்தால் பட்டாபிஷேகம். வஸிஷ்டர் ராமனுக்கும், ஸீதைக்கும் பூர்வாங்கமான மங்களக்கிரியைகளைச்செய்வித்தார். நகரமெங்கும் கோலாகலமும் உற்சவமுமா யிருந்தது. கைகேயியின் வேலைக்காரியான கூனி என்பவள் இதன் விபரத்தைக் கேள்விப்பட்டாள்; உடனே ஓடித் தன் எஜமானியிடம் தெரிவித்தாள். பரதனைக் காட்டிலும் ராமனிடம் விசேஷப் பிரியம் பாராட்டிய கைகேயி, அதுகேட்டுக் களித்து, கூனிக்குப் பரிசளித்தாள். அவளது தூய மனதைக் கூனி கலைத்து, அவளை ராமன்மீது துவேஷம் பாராட்டச் செய்தாள். அச்சமயம் பரதன் சத்துருக்கனனுடன் மாமன் வீடாகிய கேகயதேசம் போயிருந்தான். அந்தப் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்து, ஸ்ரீராகவனை பதினான்கு வருஷம் காட்டுக்குப் போகும்படி நியமிக்கும்படி தசரதனை வற்புறுத்துமாறு கைகேயியைத் தூண்டினாள். அதற்குத்தக்க சூழ்ச்சிகளையும் கூனி அவளுக்கு எடுத்துரைத்தாள். அன்று ராத்திரி தசரதன் கைகேயியின் அரண்மனைக்குச் சென்றார். கைகேயி துக்க சாகரத்தில் மூழ்கி யிருப்பதைக் கண்டு, அவளை உற்சாகப்படுத்த முயன்றார். உடனே அவள், தசரதன் ஏற்கெனவே தனக்களித்திருந்த இருவரங்களையும் பூர்த்திசெய்யும்படி பிரார்த்தித்தாள். ராமனைக் காட்டுக்கு அனுப்பி, பரதனுக்கு யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்விக்கவேண்டுமென்று கோரினாள். இடிவிழுந்தால்போலுள்ள இச் செய்திகேட்டு, தசரதர் ஆராத்துயரத்தில் ஆழ்ந்தார். எவ்வளவோ அவர் மன்றாடிக்கேட்டும், கைகேயி மனமிரங்காது, தன் விருப்பத்தை நிறைவேற்றுமென்றே வற்புறுத்தினாள். மகாராஜா பைத்தியம் பிடித்தவன்போல் பிரமித்து, பிரஞ்ஞையற்றுக் கிடந்தார். கைகேயி, ஸுமந்திரரை அனுப்பி ராமனை வரவழைத்து, அவர் 14 வருஷம் காட்டுக்குப் போகவேண்டுமென்று தசரதர் விரும்பியதாய்த் தெரிவித்தாள். இராமனும் அந்த ஆஞ்ஞையைச் சிரசால் வகித்து, வனம் போகச் சித்தமாயிருப்பதாகத் தெரிவித்தார். தசரதர் ஸத்திய பாசத்தால் கட்டுண்டு, ஒன்றும் கூறமுடியாமல் தவித்தார். பின்னர், ராகவன் கௌஸல்யையிடம் சென்று இவ்விவரம் தெரிவித்து, அவளது சோகத்தை ஒருவாறு சாந்தப்படுத்தி, அந்தத் துக்க நிலைமையில் தசரதனைக் கைவிடாது சுசுரூஷைசெய்து காப்பதே அவளது முக்கிய கடமை என்று கூறினார். பிறகு ஸீதையும் லக்ஷ்மணனும் அவருடன் கூடவருவதாய் நிர்ப்பந்திக்க, மூவரும் பிரயாண

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க ளென்ன பயனு மில.

மாகி, கைகேயியின் அந்தப்புரம் சென்றனர். எல்லோரும் மரையுரி உடுத்தனர். இராம லக்ஷ்மணர்கள் ஜடாமண்டலதாரிகளாய்த் தவசி வேஷம்பூண்டு, நியமத்துடன் வனவாஸகாலத்தைக் கழிக்கக் கருதினர். இக்கோலத்தைக் கண்டு புலம்பி வருந்தாத ஜனங்களில்லை. எல்லோரும் ராமனுடன் கூட காட்டுக்குச் செல்லக் கருதினர்.

உடனே ஸுமந்திரர் அம்மூவரையும் ரதத்திலேற்றிச் சென்றார். பிரஜைகள் பின்தொடர்ந்தார்கள். மறுநாள் விடியற்காலம், அவர்கள் தமஸாதீரத்தில் உறங்குங்கால், ராமலக்ஷ்மணாதிகள் அவர்களை ஏமாற்றிச்சென்று, கோசல தேசத்தைக் கடந்து,கங்கைக்கரை யடைந்தனர். அங்கு ராமனுக்கும், அவரது தோழனான குகன் என்னும்நிஷாதிபதிக்கும் ஸமாகமம்ஏற்பட்டது. குகன் அவர்களை உபசரித்து, மறுநாள் கங்கையைத் தாண்டும்படி செய்வித்தான். பிறகு ஸுமந்திரர் திரும்பிவந்து, தசரதனுக்குச் செய்தி தெரிவித்தார். அவரும் புத்திரசோகம் தாளாது தவித்து, தமக்கு முன்னமேற்பட்டுள்ள ரிஷி சாபத்தை நினைக்கலுற்றார். உடனே 'ராமா' 'ராமா' என்று கதறிக்கொண்டு பிராணனை விட்டார். வஸிஷ்டாதிகள் துக்கித்து, பரதனுக்குச் செய்தியனுப்பி வரவழைத்தனர். அவனும் வந்து, விவரமறிந்து துக்கசாகரத்தில் மூழ்கினான். இவ்வித அனர்த்தங்களுக்குக் காரணமான கைகேயியைப் பலவாறு தூஷித்துக் கூறினான். பின்னர், தசரதரது உத்தரக்கிரியைகளை நடத்தினான். வஸிஷ்டாதிகள் அவனை யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்துகொள்ளுமாறு வேண்டினர். 'ஜ்யேஷ்ட ப்ராதா பித்ருஸம:' என்றவாறு மூத்த தமையனான ராமனைத் தன் பிதாவுக்குச் சமானமாக அந்தரங்கமாய் நினைத்துவந்துள்ள பரதன் அவ்வாறு செய்ய இணங்கவில்லை. உடனே அவன் சதுரங்க பலத்துடனும்,வஸிஷ்டாதிகளுடனும் புறப்பட்டுச் சென்று, ராமனைப் பிரார்த்தித்து அயோத்திக்கு அழைத்து வந்து, அவருக்கு முடிசூட்டக் கருதினான். வழியில், குகன் அவனது எண்ணந் தெரியாது, ராமனது சத்துரு என்று நினைத்து அவனை எதிர்க்க உத்தேசித்தான். பிறகு, அவனது மனப்பூர்வமான ராமவிசுவாஸத்தை யறிந்து மெச்சி, அவனுக்கு வழிகாட்டினான். அச்சமயம் ராமாதிகள் சித்திரகூடத்தில் வசித்து வந்தனர். பரதன் முதலானோர் அங்குச் சென்றனர். தசரதன் மரணத்தை யறிந்த ராகவன் வெகுவாறு துக்கித்தார். பின்னர், பரதன் அயோத்திக்கு வரும்படி ராமனை மன்றாடிக் கேட்டான். அவர் பித்ருவாக்கிய பரிபாலன தர்மத்தின் மகிமையை எடுத்துரைத்து, பதினான்கு வருஷம் கடந்ததும் தாம் வந்து பட்டாபிஷேகம் செய்து கொள்வதாய் வாக்களித்தார். அதன்மேல், பரதன் ராமபாதுகைகளை அவருக்குப் பிரதிநிதியாக எழுந்தருளப் பண்ணிக்கொண்டு, அவற்றிற்கு முடிசூட்டி நந்திக்கிராமத்தில் தானும் தவசி விரதம் கொண்டு வஸித்து அரசு புரிந்துவந்தான்.

அப்பால், ராமன் தண்டகாரண்யத்தில் பிரவேசித்து, விராதன் என்னும் அரக்கனை வதைத்தார். சரபங்கர்,ஸுதீக்ஷ்ணர், அகஸ்தியர் ஆகிய முனிச் சிரேஷ்டர்களைக்கண்டு தரிசித்தார். அகஸ்தியரிடமிருந்து இந்திர தனுஸும், உத்தம கத்தியும், பாணம் வற்றாத அம்புக்கூடுகளும் பெற்றார். இவ்வனத்தில் வசித்து வருகையில், அநேக ரிஷிகளும், ஸாதுக்களும் தாசரதியைச் சரணமடைந்து, ராவணாதிகளின் இம்சையிலிருந்து தங்களை விடுவித்துக் காக்கும்படி வேண்டினர். ராகவனும், துஷ்ட அரக்கர்களைக் கருவறுத்து, ஸாது ஸம்ரக்ஷணம் செய்வதாய் வாக்களித்தார்.

பின்னர், ஜனஸ்தானத்தில் வசித்து வந்த சூர்ப்பநகை என்னும் ராக்ஷஸி ராமனிடம் வந்து, தன்னை விவாகம் செய்துகொள்ளும்படி நிர்ப்பந்திக்க, லக்ஷ்மணன் அவளை விரூபப்படுத்தி யனுப்பினர். இதனால் அங்குள்ள, கரன், திரிசிரஸ், தூஷணன், என்ற பிரசித்திபெற்ற ராக்ஷஸர்கள் தங்கள் சேனைகளுடன் வந்து ராமனை எதிர்க்க, அவரும் ஒருவராய் நின்று போரிட்டு, அவர்களை வதித்தார். இச்செய்தி இராவணன் காதிற்பட்டது. உடனே அவன் மாரீசனிடம் சென்று, ராமனுக்கு விரோதமாய்த் தனக்கு உதவிபுரியவேண்டினான். ஏற்கெனவே ராமபராக்கிரமம் அறிந்துள்ள மாரீசன், ராமனை விரோதித்துக்கொள்வது தகாது என்று எவ்வளவோ நற்புத்தி கூறியும், ராவணன் கேளாது அவனை நிர்ப்பந்தித்தான். உடனே மாரீசன் தங்கமான் உருக்கொண்டு ஸஞ்சரித்து, ராமலக்ஷ்மணர்களை ஆசிரமம் விட்டு வெகுதூரம் இழுத்துச் சென்றான். அத்தருணம், ராவணன் சந்நியாசி வேஷம் பூண்டு பிக்ஷை யாசித்து, சீதையைத் தூக்கிச் சென்றான். ராமனது தோழனான ஜடாயுஸ் என்

னும் கழுகு அவனைஎதிர்த்து, அவனால்அடிபட்டு மாளுந்தருவாயிலிருந்தது. ஸ்ரீராமன் துஷ்டமாரீசனைவதித்துத்திரும்பிவந்து, ஜடாயுவின் நிலைமையைக்கண்டார்; ஸீதை நஷ்டமானதையறிந்தார்; ஆராத்துயரத்தில் ஆழ்ந்தார்; பிராகிருத மனுஷ்யன்போல் பலவாறு புலம்பித் தவித்தார். லக்ஷ்மணன் அவரைச் சாந்தப்படுத்தினார். இருவரும் ஸீதையைத் தேடிக்கொண்டு சென்றனர். கபந்தன் என்னும் ராக்ஷஸனிட மகப்பட்டு அவனை வதித்தனர். ராம கரஸ்பர்சத்தால் அவனும் திவ்விய ஸ்வரூபம் பெற்று, ராமனைப்புகழ்ந்து, சபரீ என்னும்பாகவதோத்தமையின் ஆசிரமம்போகும்படி வேண்டினான். அவர்கள் அவ்வாறே அங்குச் சென்று, அவளால் வெகு பக்தியுடன் உபசரிக்கப்பட்டனர்.

பின்னர், அவர்கள் பம்பாதீர மடைந்து, ஹனுமானுடன் ஸமாகமம் பெற்றனர். ராமன் அவரிடமிருந்து வாலி ஸுக்கிரீவர்களது விருத்தாந்தமறிந்து, ஸுக்ரீவனுடன் அக்கினி ஸாக்ஷிகமாய் ஸக்யம் செய்தார். ராகவன் தமது பராக்கிரமத்தில் ஸுக்கிரீவனுக்கு நம்பிக்கை ஏற்படும்பொருட்டு, துந்துபியின் எலும்புக்கூட்டைக் கால் கட்டைவிரலால் உதைத்து பத்து யோஜனை தூரம் தள்ளினார். ஸப்த ஸால விருக்ஷங்களை ஒரே அம்பால் எய்து துளைத்தார். பிறகு ராகவனது அனுமதியின்பேரில், சுக்கிரீவன் வாலியைப் போருக்கழைத்தான். இருவரும் கடும்போர் புரிந்தனர்; சுக்கிரீவன் களைக்க ஆரம்பித்தான். அச்சமயம் ராமன் ஒரு பாணம் எய்து வாலியை அடித்துச் சாய்த்தார். அவன் முதலில் ராமனை நிந்தித்துக் கூறி, கடைசியில் அவரது மகிமையறிந்து மிகத் துதித்தான். பிறகு ராமன் சுக்கிரீவனுக்குக் கிஷ்கிந்தையில் வானர ராஜ்யபட்டாபிஷேகம் செய்வித்தார். வாலி புத்திரனை அங்கதன் இளவரசாக முடி சூட்டப்பட்டான். சுக்கிரீவன் தாரையுடன் சுகமாய் வாழ்ந்துவந்தான்.

வருஷாகாலம் சென்றது; வானர ராஜன் தனது அளவற்ற வானர ஸேனைகளை வரவழைத்து, சீதையைத் தேடிவரும்படி நாலு திக்குகளிலும் அவர்களை அனுப்பிவைத்தான். தெற்குத் திக்குக்கு ஹனுமான், அங்கதன், ஜாம்பவான் முதலான தலைவர்களைத் தக்க பரிவாரங்களுடன் அனுப்பினான். மற்ற மூன்று திக்குகளில் சென்றவர்கள் ஸீதையைக் காணாது திரும்பிவந்து தகவல் தெரிவித்தனர். ஹனுமான் முதலானோரும் வெகுகால மலைந்து, அவளைக்காணாது தவித்து, பிராணபரித்தியாகம் செய்யக் கருதுகையில், ஸம்பாதி என்னும் கழுகின் வார்த்தையால் ஜானகி லங்கையிலிருப்பதாய் அறிந்தனர். உடனே ஹனுமான் சமுத்திரத்தைத் தாண்டி, லங்கையை யடைந்து, ஸீதையை எங்கும் தேடிக் காணாது வருந்தினார். கடைசியில், அசோகவனத்தில் அவளிருக்கக்கண்டு, தக்க வசனங்களால் அவள் பயப்படாவண்ணம், தான் ராமதூதன் என்பதைத் தெரிவித்து, அவளைச் சாந்தப்படுத்தி, ராமநாமாங்கிதமான மோதிரத்தை அடையாளமாக அளித்தார். இதனால் அவளும் மிக்க மகிழ்வடைந்து, தனது சூடாமணியை ராமனிடம் சமர்ப்பிவிக்கும்படி அவரிடம் கொடுத்தாள். பின்னர், மாருதி அசோகவனத்தை அழித்து, அக்ஷயகுமாரன் முதலான பிரபல ராக்ஷஸர்களை வதித்தார். பின்பு இந்திரஜித்தால் பிடிபட்டு, ராவணனது சபை சென்று, அவனை மதியாதுபேசி, தாம் வந்த செய்தியைத் தெரிவித்தார். ஸீதையை ராமனிடம் சமர்ப்பித்து உயிர் தப்பும்படி அவர் கூறினார். இதனால் சினங்கொண்ட ராவணன் அவரது வாலில் துணிசுற்றிக் கொளுத்தும்படி ஆஞ்ஞாபித்தான். இந்த அக்கினி ஜ்வாலையால், ஹனுமான் லங்கையைக்கொளுத்தி அழித்தார். அப்பால், சமுத்திரத்தைத் தாண்டிவந்து அங்கதன் முதலானோருடன் கிஷ்கிந்தை யடைந்து, 'கண்டேன் ஸீதையை' என்று கூறி ராமாதிகளை ஆனந்த சாகரத்தில் ஆழ்த்தினார். உடனே யுத்த ஸந்நாகம் செய்யப்பட்டது. ஏராளமான வானர ஸைந்நியங்கள் அணிவகுக்கப்பட்டுச் சென்று, சமுத்திரக்கரை யடைந்தன. அச்சமயம், ராவணனது தம்பியான விபீஷணன், தன் தமையனுக்கு எவ்வளவு நற்புத்தி கூறியும் அவன் கேளாது திரஸ்கரித்து விட்டபடியால், அவனை விட்டுவிலகி ராமனைச் சரணமடைந்தான். சுக்கிரீவாதிகள் சத்துரு பக்ஷத்திலுள்ள அவனைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்றுஎவ்வளவோ கூறினர். சரணாகத வத்ஸலனான ஸ்ரீராகவன், பலவித நியாயங்கள் எடுத்துரைத்து, விபீஷணனுக்கு அபயமளித்து அவனைத் தன் மித்திர கோஷ்டியில் சேர்த்துக்கொண்டார். பின்னர் நளனைக் கொண்டு சமுத்திரத்தில் அணைபோடப்பட்டது. அதனால் வானரசேனைகள் ஸாகரத்தைத் தாண்டி, லங்கையை முற்றுகை போட்

பிணிக்கு மருந்து பிற மணியிழை தன்னோய்க்குத் தானே மருந்து.

டுத் தகைந்தனர். வானராதிகளுக்கும் ராக்ஷஸர்களுக்கும் பெரும் போராட்டம் ஏற்பட்டது. கும்பகர்ணன், இந்திரஜித், பிரகஸ்தன் முதலானோர்கள் ராமாதிகளால் அடிபட்டு மாண்டனர். ராவணனுக்கும் ராமனுக்கும் கொடும்போர் விளைந்தது. தக்க உவமானம் சொல்லிமுடியாது. "ராம ராவணர்கள் யுத்தம், ராமராவணர்களின் போராட்டம் போலவே இருந்தது" என்று வால்மீகி வர்ணித்திருக்கிறார். இறுதியில் ராமன்ராவணனை ஸம்ஹரித்து, விபீஷணனை லங்காதிபதியாக முடிசூட்டினர். லோகாபவாதத்தை நீக்கக் கருதி, அவர்ஸீதையை அக்கினிப்பிரவேசம்செய்யச்சொல்லி, அவள் மகா பரிசுத்தை பதிவ்ரதோத்தமை என்பதை வெளியிட்டார். அப்பால், ராமாதிகள் புஷ்பக விமானத்திலேறிச் சென்று பரத்வாஜ ஆசிரமம் அடைந்து, அங்கு அவரால் ஆராதிக்கப் பெற்றார். ராமனது வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பரதன் ராமனது வரவால் ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்தினவனுய், ராம பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய ஸந்நாகங்கள் செய்தான். ஸீதாராம பட்டாபிஷேக மகோத்ஸவம் வெகு விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. விபீஷண சுக்கிரீவாதிகளுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன. ஹனுமானது விக்கிரமம், ஸாஹஸம், புத்தி சாதுர்யம், பக்தி முதலிய குணங்களைப்பற்றி ராமர் புகழ்ந்து பேசினர்.

பின்னர், ரகுநாதன் பதினாயிரம் வருஷகாலம் தர்மராஜ்ய பரிபாலனம் செய்தார். பிரஜைகள் தத்தம் வர்ணாசிரம தர்மங்களைச் சரிவர அனுஷ்டித்து, தெய்வ பக்தி, ராஜவிசுவாசம் நிரம்பியவர்களாய் ஸர்வ சுகங்களையு மனுபவித்து, சந்தோஷ பரிதர்களாய் வாழ்ந்துவந்தனர். எங்குப் பார்த்தாலும், 'ராமன்' ராமன்' 'ராமன்' என ஜனங்கள் தாசரதியின் கல்யாண குணங்களைப் புகழ்ந்து பேசிக் களித்துவந்தனர்.

ராமாயண கதையால் அறியக்கூடிய முக்கிய தர்மாதிகள்

(1) பித்ருவாக்கிய பரிபாலனம் :—ஸ்ரீராமன் தமக்கு நியாயமாய்க் கிடைக்க வேண்டிய ராஜ்யத்தை இழந்து மனப்பூர்வமாய் வனஞ்சென்று கஷ்டங்களை அனுபவிக்க இணங்கியது ஸ்ரீராமனது மனப்பாங்கை எடுத்துக்காட்டும். மேலும், இவ்வாறு நேர்ந்த சந்தர்ப்பம் கவனிக்கத் தக்கது. தசரதரே ராமனது குணங்களில் ஈடுபட்டு, அவருக்கு முடிசூட்ட நாளும் குறிப்பிட்டு விட்டார். ஜனங்களோ ஏக மனதாய் ராமனிடம் அன்பு பாராட்டி, உடனே யுவராஜாவாக முடிசூட்ட வேண்டுமென்று வேண்டுகின்றனர். அபிஷேகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தாமும், பூர்வாங்கமான உபவாஸாதி நியமங்கள் அனுஷ்டித்து வருகிறார். இச்சந்தர்ப்பத்தில், தம் பிதா காமவலையிற் சிக்கி, கைகேயியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக, தகாத காரியத்தைச் செய்யத் துணிந்து, தம்மைக் காரணமின்றிக் காட்டுக்குப் போகச் சொன்னால், ப்ராகிருத மனுஷ்யன் மற்ற எவனும் வருத்தமடையாது, பித்ருவாக்கியத்தை அனுஷ்டிப்பானா? எவ்வித கஷ்டமும் துக்கமும் நேர்ந்தாலும் அதைப் பாராட்டாது, தந்தையின் ஆணையை நிறைவேற்றுவதே உத்தம புத்திரனது கடமை என்பது இதனால் வற்புறுத்தப்பட்டதாக நினைக்கவேண்டும்.

(2) ஸத்திய பரிபாலனம்: (1) தசரதர் அறுபதினாயிரம் வருஷம் புத்திரபாக்கியமில்லாது வருந்தி, அடைந்துள்ள தன்னருமைப் புதல்வனை ராக்ஷஸர்களோடு போர்புரியும் பொருட்டு விசுவாமித்திர மகரிஷியுடன்கூட அனுப்பினதும், (2)தாம் கைகேயிக்கு முன்னர் அளித்துள்ள வாக்கைப் பொய்யாக்கத் துணியாது, தமது உயிருக்கும் அதிகப் பிரியனான ராமனை வனம்போகும்படி கைகேயி ஏவியதை மறுக்காது இணங்கித் தவித்ததும், ஸத்தியத்தை எக்காலத்திலும் கைவிடாதிருத்தலே ஓர் உத்தம குணமென்பதை விளக்கிக்காட்டும்.

(3) பாதிவ்ரத்யம்: ராமன் வனம்போக ஏற்பட்டகாலத்தில், ஸீதை ராஜ்ய ஸுகங்களை இழந்து, காட்டிலுள்ள கஷ்டங்களை அனுபவிக்கக் கருதிப் பர்த்தாவுடன் சென்றதும், இலங்கையில் அவளிருந்த நிலைமையும், கணவனிடமுள்ள பக்தியும் உத்தம ஸ்திரிகள் ஒழுகவேண்டிய வழியை நன்கு விளக்கிக்காட்டும். கௌஸல்யைத் தசரதனிடம் நடந்துகொண்ட விதமும் இதற்கு உதாரணமாகும்.

(4) ப்ராத்ரு ஸ்நேஹம்: உத்தம சகோதரன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டியது என்பதற்குப் பரதனது சரித்திரம் உதாரணமாகும். ராமாயணத்தில் ஸுக்கிரீவன், விபீஷணன் இவர்களிடமுள்ள சகோதரபாவமும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இதனால், பரதனது ப்ராத்ருபக்தி மிகச் சோபித்து விளங்குகிறது. தம்

கையில் கிடைத்த ராஜ்யத்தை வேண்டாமென்று மறுத்து, தவசிபோல் விரதம் பூண்டு காலங் கழித்துவந்த பரதனது மேலான மனப்பாங்கு என்னே! லக்ஷ்மணன் ராமனிடம் காட்டியுள்ள சகோதரப் பிரீதியும், வாத்ஸல்யமும் நிகரற்றதெனினும், அவர் சித்திரகூடத்தில் பரதன் விஷயமாய் முதலில் வெளியிட்டுள்ள அபிப்பிராயமானது உத்தம ஸோதரபாவத்துக்கு லக்ஷணமாகாது. ராமனே, 'உலகில் பரதனுக்குச் சமானம் ப்ராதா இல்லை. எனக்குச் சமமான புத்திரனில்லை. உனக்கு (சுக்கிரீவனுக்கு)ச் சரியான மித்திரன் இல்லை' என்று கூறியிருக்கிறார்.

(5) உத்தம தூதன்: யஜமானனிடம் அந்தரங்க பக்தியுடனிருந்து, அவனிட்ட வேலையைக் காலம் தேசம் வர்த்தமானத்திற் கேற்றவாறு, புத்தி சாதுர்யத்தை உபயோகித்து, சாதிக்கவல்லவனே உத்தம தூதனாவான். உத்ஸாக அதிகத்தால் காரிய ஹானியைச் செய்யாமலும், மூடத்தனம், உத்ஸாகக் குறைவு, எஜமான துரோகம் இவற்றாலோ, அல்லது லோபாதிகளால் சுயநலம் பாராட்டுதலாலோ எஜமானனது காரியத்தைச் செய்யாது விடுபவன் அதம தூதனாவான். ஹனுமான் ஸீதையைத்தேடிக் கண்டுவந்ததில் செய்துகாட்டிய விக்கிரமம் புத்தி சாதுரியம், தத்காலோசித உபாயங்கள், திடமான விசுவாஸம் முதலியன உத்தம தூதனது லக்ஷணங்களுக்கு அறிகுறியாகும்.

(6) சரணாகத ஸம்ரக்ஷணம்:—இந்தத் தர்ம ஸூக்ஷ்மமானது, ராமன் தம் பத்தினியைக் கஸ்திபடுத்திய காகாஸுரனைக் காத்தருளிய விருத்தாந்தத்தாலும், தமது சத்துருவின் சகோதரனான விபீஷணனுக்கு அபயமளித்துக் காத்து, அவனுக்கு லங்கா ராஜ்யபட்டாபிஷேகம் செய்வித்த கதையாலும் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளதென்று அறியவேண்டும்.

(7) எவ்வித தூயமனமும் துர்ப்போதனையால் கலைந்து, பாவவழியில் செல்லத்துணியும் என்பதும், புத்திமான் அவ்வித துர்ப்போதனைக்கு இடங்கொடாது,ஸன்மார்க்கத்தில் ஒழுக வேண்டுமென்பதும், கூனி கைகேயியின் மனதைக் கலைத்ததால் நேர்ந்த கஷ்டங்களால் அறியக்கூடிய நற்போதமாகும்.

(8) உலகில் எவ்வித ஐசுவரியமும் தேக வலிவுமிருப்பினும் தர்மத்தைக் கைநழுவவிட்டு, பாவமார்க்கத்தில் சென்று, பிராணி இம்சை செய்பவர் நீடித்துச் சுகமடையார் என்பதை ராவணாதிகள் அழிவால் அறியக்கூடும்.

(9) எவ்விதப் பெரியோர்களுக்கும் சில சமயம் புத்தி மாந்த்யம் ஏற்பட்டு அநர்த்தங்கள் உண்டாகக் கூடும் என்பதும், காமக்குரோத லோபாதிகளுக்கு இடங்கொடாது, புத்தியைச் சரிவர உபயோகித்து, உலக வாழ்க்கையில் நடந்துவர வேண்டுமென்பதும், ராமன் தங்கமானை நம்பி அதை பிடிக்கச் சென்று அடைந்த கஷ்டங்களாலும், தசரதர் கைகேயியினிடம் அதிக மோகங்கொண்டு அனுபவித்த துக்கத்தாலும் நன்கு விளங்கும்.

(10) பகவத் பக்தி செய்வதுபோல், பாகவத கைங்கரியமும் சிலாக்கியமானது. சத்துருக்கினன், பகவானான ராமனிடத்தில் காட்டிலும் பாகவதோத்தமனான பரதனிடம் மிக்க அன்பு பாராட்டி அவனுக்குத் தாஸனாய்த் தொண்டு செய்துவந்தார் என்பதே இதை விளக்குகின்றது.

வர்த்தமானக் குறிப்புகள்

NEWS AND NOTES

இத்தாலியில் பொருளாதார நிலைமை.—தேசத்தின் பொருளாதார நிலைமையை உத்தேசித்து கீழ்க்கண்ட நிபந்தனைகளையுடைய மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறது:— ஜனங்கள் வசிக்க சிக்கனமாய் கட்டிமுடிக்ககூடியக் கட்டடங்கள் தவிர மற்றைய எதையும் வரும் வருஷத்துள் கட்டக்கூடாது: சாராயக் கடைகள், ரொட்டிக்கிடங்குகள், நாட்டிய சாலைகள் இம்மாதிரியான ஸ்தாபனங்கள் ஏற்படுத்தக் கூடாது: பத்திரிகைகள் தினம் 6 பக்கத்துக்கு மேற்பட்டு வரக்கூடாது: அவற்றின் உருவத்தையும் பெரிதாக்கக்கூடாது. இம்மசோதாவின்படி நவம்பர் மாதத்துக்கப்புறம் சுயமான பெட்ரோல் கிடைக்காது.

* * *

செவிட்டுத் தன்மையைப் போக்க யந்திரம் — ஹல் என்னுமிடத்தில் சல்வார் என்பவர், செவிட்டுத் தன்மையைப் போக்க ஒரு யந்திரம் கண்டுபிடித்திருக்கிறார். பார்வைக்கு அது ஒரு சிறிய கம்பியில்லாத் தந்தியந்திரத்தைப் போலிருக்கிறது. பரீக்ஷைசெய்து பார்த்ததில், 100க்கு சராசரி 80 பேருக்கு இதனால் காது கேட்டதாம்.

21838

1926 அமிருதாஞ்சனம் காலண்டர்கள் 1926

அழகிய மூன்று கலர்களில் ஸ்ரீ கிருஷ்ணன், மோஹினி ஆகியவர்களின் படங்கள், பிரபல சித்திரக்காரர்களால் எழுதப்பட்டவை.

ஒன்று விலை ரு **0—2—0**; டஜன் ரூ. **1—4—0**; **100** ரூ. **9—12—0.**

தினசரி கிழிக்கக்கூடிய ஆபீஸ் காலண்டர் **1**-க்கு அ. **4**. (தபால் பாக்கிங் சார்ஜ் வேறு.)

அமிருதாஞ்சனம்

ஸர்வ நோய்களுக்கும் ஸித்த ஔஷதம்

அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. எல்லா நோய்களுக்கும், தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து (விலை அணா பத்து). அமிருதாஞ்சனம் எல்லாவிடத்திலும் கிடைக்கும்.

இதர அமிருதாஞ்சனம் ஔஷதங்கள்

படைத்தைலம். — இது எல்லா விதமான படைகளையும் போக்கும். இரண்டு தடவை உபயோகித்தவுடன், எவ்வித படையும் போய்விடும்.

விலை டப்பி ஒன்றுக்கு அணா ஆறு.

தந்தசூரணம்.—பல் துலக்க இது நல்லதாள். பல் வியாதி, ஈறுவலி முதலியநோய்கள் நீங்கும். தினந்தோறும் உபயோகித்தால் பல் வெண்மையாகி முகவசீகரமுண்டாகும். டப்பி ஒன்று அணா 2.

அமிருதாஞ்சனம் டிப்போ,

நெ. 7, தம்புசெட்டி தெருவு, ஜார்ஜ் டவுன்,

சென்னைப்பட்டணம்.

THE QUEEN OF HAIR OILS

KAMINIA OIL (Registered)

கூந்தல் வளர் எண்ணெய்களுள் ராணி

காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்)

இந்தக் காமினியா எண்ணெய் அதிக விலை உயர்ந்த சாமான்களடங்கியது. இது மயிர் உதிர்வதையும் மண்டை குடைச்சலையும் நிறுத்தி, பொடுகைப் போக்கிப் புது மயிர் வளர்ச்சியை விருத்திசெய்து வர்ணம் மாறிய கூந்தலை சுபாவ வர்ணத்திற்குத் திருப்பும். இது வியாபாரிகளுக்கும், மூளை சம்பந்தமாய் உழைப்புள்ளவர்களுக்கும், மாணாக்கர்களுக்கும், மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விருத்திசெய்து தலையின் அடிப்பாகத்தைச் சுத்திசெய்யும். இதுவும் தவிர, காமினியா ஆயில், அதிக வாசனையுமுடையது.

நற்சாக்ஷி பத்திரம்

மூவத்துப்புழையி லிருக்கும் மிஸ்டர் பன்ஸோஸ் எழுதுகிறார்:—காமினியா தைலத்தை நான் மிகவும் சந்தோஷத்துடன் உபயோகித்தேன். அதின் அபூர்வமான குணங்களைப் பற்றி உங்களுக்கு வந்தனம் செய்யப் போதுமான காரணத்தைக் கண்டேன். இந்தத் தைலம் அதிக குளிர்ச்சியைக் கொடுப்பதும் தவிர, கொடிய தலைவலியை துரத்துகின்ற நிபுண "டாக்டர்". தயவுசெய்து ஒரு புட்டி காமினியா ஆயில் வி. பி-யில் சீக்கிரம் அனுப்பவும்.

மைசூர் பொருட் காட்சியில் தங்கமெடலும், அலஹாபாத் பொருட்காட்சியில் நல்ல நற்சாக்ஷிப் பத்திரமும் பெற்றிருக்கிறது.

ஒரு தரம் உபயோகிக்கவும்

ஒரு புட்டியின் விலை ரூ.	1 0 0	வி. பி. தபால் செலவு ரூ.	0 5 0 பிரத்தியேகம்
4—புட்டிகள்	,, 2 10 0	,, ,,	,, 0 14 0 ,,

☞ எச்சரிக்கை:—காமினியா ஆயில் ஒவ்வொரு முக்கியமான பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள கடைகளில் விற்கப்படுகிறது. உங்களுடைய சமீபத்தில் காமினியா ஆயில் விற்பவர் இல்லாவிடில், கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேராய் ஆர்டர் அனுப்பவும். ஆனால் உங்களூர் வியாபாரிகளிடம் வாங்கும்பொழுது, தங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். வேறு மாதிரியான தெரியாத எண்ணெய்களை இதுதான் நல்ல எண்ணெய் என்று இந்தக் காமினியா ஆயிலுக்குப் பதிலாய்க் கொடுக்க முயற்சிசெய்வார்கள். காமினியா ஆயிலைத் தவிர நல்ல குணமுடைய வேறு எண்ணெய்கள் கிடையாததினால், அவர்கள் முயற்சிக்கு ஏமாறாமல் எப்பொழுதும் இக் காமினியா ஆயிலே வேண்டுமென்று சொல்லிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஸோல் ஏஜண்டுகள்:— ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,
155, ஜும்மா மஸீத், பம்பாய்.

Printed at the B. N. Press & Published by The Alliance Company, "Shanmuga Vilas" Mylapore. Madras.